Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

26 - 02, 9 -10. 1993

ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 18



மூழ்கிய கப்பலுக்குள் ஆவிகள் நாட்டியமாம்!

தகவல் பெட்டி



ரணசிங்கவின் துணிச்சல்!

திலீபனின் உண்ணாவிரதம்!!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

தையல் சமையல் லேடீஸ் ஸ்பெசல்

பாப்பா முரசு

இலக்கிய நயம்

நகரா வுண்டப்

சிறுகதைகள்+ நிமிடக் கதை
மற்றும் வியப்பான செய்திகள்
அதிரவைக்கும் தகவல்கள்

வர்ணப்படங்கள் - சினிகிசிட்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு,
வணக்கம்.
ஆச்சரியங்கள்- அதிசயங்கள்
நேரில் காணாதோரை
வியக்கவும், சந்தேகத்தோடு
வினா தொடுக்கவும் வைப்பது வழக்கமானதே!
முரசில் சமீபத்தில்
முகம் காட்டிய ஆச்சரிய செய்திகள்
சிலரை சந்தேகப்பட வைத்துள்ளன.

பதினைந்து குழந்தைகள் பெற்றிட முடியுமா?
தொலை பேசி மூலமாகவும், நேரிலும்,
மடல்வழியாகவும்
வினாக்கள் வந்து செவியில் விழுந்தன.

உலக சாதனைப்புத்தகம் கின்னஸ்
ஆராயாமல், ஆதாரமில்லாமல்
சாதனைகளைப் பொறிப்பதில்லை.
10 பிள்ளைகள் ஒரே நேரத்தில்
பிரசவமான சாதனை
1992ம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில்
உண்டு. பக்கம் 66.
அதற்கடுத்த சாதனை
12 பிள்ளைகள்.

அந்த சாதனைதான் தற்போது
பதினைந்து பிள்ளைகள் பிறந்த சாதனை மூலம்
முறியடிக்கப்பட்டிருக்கிறது.
நம்ப முடியாமல் இருப்பதால்தான்
அது உலக சாதனையாகிறது.
வேறெங்கும் அப்படி நடக்கவில்லை
என்பதால்தான் அது வியப்புக்குரியதாகிறது.

இவ்வாறான செய்திகள் மீது
முரசுதான் முக்கியபார்வை செலுத்துகிறது.
உலக அதிசயங்கள்- வினோதங்கள்
உள்நாட்டில் அறியப்படவைக்கிறது.
எனவே-
சர்ச்சைகளும், சிலருக்கு சந்தேகங்களும் எழலாம்.
எனினும், முரசு
தன் வசம் ஆதாரம் வைத்துக் கொண்டே
செய்திகளை வெளியிடும்.

■

"இலக்கியத் திருட்டுகள் வேண்டாம்"
எடுத்துச் சொல்லியும்
தம்மை திருத்த மறுப்போரை
என்ன செய்வது?

ஏறாவூர்-மீராகேணி
எம்.எச்.முஹம்மது ஹமீம்
சிந்தாமணியில் வந்த கதையை
ஒரு வரிகூட தவறாமல் பிரதி பண்ணி
தன் பெயரில் அனுப்பியிருந்தார்.

வாசகர்கள் படு புத்திசாலிகள்!
அந்தத் திருட்டுப் பிரபலத்தை
பிடித்து ஒப்படைத்து விட்டனர்.

இவ்வாறானவர்களால்-
புதிய எழுத்தாளர்கள் காயப்படுகிறார்கள்.
எனவே-இலக்கியத் திருட்டாளர்களை
பகிரங்கப்படுத்துவது தவிர வேறு வழியில்லை.

■

முகவர்கள் பலர்
வெகு சிறப்பாக ஒத்துழைக்கிறார்கள்.
ஒரு சிலர் மட்டுமே
முகம் சுளிக்க வைக்கிறார்கள்.
பணம் அனுப்ப வேண்டும்
என்பதை வசதியாக மறந்துவிடுகிறார்கள்.
எனவே நாமும்
முரசு அனுப்புவதையும் நிறுத்த வேண்டியாகிறது.

தொடர்ந்து முரசு கிடைக்காமல்
வருத்தப்படும் வாசக நெஞ்சங்களின்
பாசப்பிடிப்பை உணர முடிகிறது.
என்ன செய்வது?
நாணயமான புதிய முகவர்களை
சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு
நியமிக்க விரைந்த கவனம் செலுத்துவோம்.
முரசின் வளர்ச்சி கருதி
வாசகர்கள் சில இடையூறுகளைப்
பொறுத்துக் கொள்ள வேண்டும்.

■

பாலஸ்தீனமும்-இஸ்ரேலும்
கைகுலுக்கிக் கொண்டுள்ளன.
சமாதானத்திட்டம்
சர்வதேசத்தையும் சந்தோசப்பட வைத்திருக்கிறது.
வரவேற்று வாழ்த்துச் சொன்ன நாடுகளில்
நமது நாடும் ஒன்று.

எல்லோரையும் வாழ்த்திக் கொண்டிருக்கிறோம்!
எல்லோரும் நம்மை வாழ்த்தும் அளவுக்கு
எப்போது உயரப் போகிறோம்?

நம்மை வாட்டும் பிரச்சனைகளுக்கு
தீர்வுகள் காணாமல், திசைகள் தெரியாமல்,
குதிரைக்கு முன்பாக
வண்டியை பூட்டிய கதையாக
காலம் கடத்திக் கொண்டிருக்கிறோம்.

பேச்சுக்கள் மூலம் பிரச்சனைகள் தீரும்
புதிய காலத்தில்
சகலவற்றிற்கும் ஆயுத வீச்சுக்கள் மீது
நாம் மட்டும் நம்பிக்கை கொள்வதா?

அனைவரும் திறந்த மனதோடு
களத்தில் இறங்கினால்
உலகம் நம்மையும் வாழ்த்தும்.
நாளைய சந்ததியும் வாழ்த்தும்.
இறங்கலாமா?
வறட்டுக் கௌரவங்கள்
வாக்குச் சீட்டு சேகரிப்புக்கள்
என்பவற்றை புறங்கையால் விலக்கி
வாழும் தலை முறைக்கும்
வருங்காலத் தலைமுறைக்கும்
வெளிச்சத்தைக் காட்டுவோமா?

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

அன்புடன்
ஆசிரியர்.

தினமுரசு போன்: 820265

## அட... அல்பம் ரெடி நீங்கள் ரெடியா?

உங்களிடம் கமரா இருக்கிறதா? இருந்தால் இப்போதே புறப்படுங்கள். உங்கள் சூழலில் கண்ணில்படும் வியப்பான - வித்தியாசமான காட்சிகளை கமராச் சிறைக்குள் மடக்குங்கள். பத்திரமாய் எமக்கு அனுப்புங்கள். சிறந்தவை பின் அட்டையில் 'அட.... அல்பம்' பகுதியில் இடம்பெறும். கலர் படங்களே விரும்பப்படுகின்றன.

முகவரி-
அட...அல்பம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-5.

## கவிதைப் போட்டி இல-15

விதைக்கப்பட்டவற்றில் வெற்றிமுகம் கண்ட கவிதையும், வியக்கப்பட்டவையும்.

**பரிசுக்குரிய கவிதை**

### தாய்மை

வறுமையை
தாய்மை
தோற்கடித்து
விட்டது.

திருமதி என். விஜயகுமார்
பண்டாரவளை.

### இரு வெளியீடுகள்!

ஒரு புறம்-
உதிரத்தைப்
பாலாக்குகிறாள்!..
மறுபுறம்-
உதிரத்தை
வியர்வையாக்குகிறாள்!..

வாஹிட் ஏ. குத்தூஸ்
கோட்டைமுனை.

### எதிர்பார்ப்பு

சிவந்திட்ட கரங்கள்
சிந்தும் உதிரத்தை
பிறந்திட்ட குழந்தை
துடைக்கட்டும் துயரை

கி. கோவிந்தராஜ்
வாழைச்சேனை.

தன் துயரம் பெரிதென்று
சேய் உணர வைக்காமல்
பால் கொடுத்தும் துயர் நீக்கும்
பெண் தெய்வம் அன்னையிவள்.

தர்சிக்கா கனகசிங்கம்
மட்டக்களப்பு.

### யதார்த்தம்

ஓ! கல்லே!
இருவரின்
சுயசரிதையும்
ஒன்றே!

மருதூர் யூ. இமித்ரினாஸ்

### காலக்கொடுமை

கல் உடைக்கும்
ஓசையிலே..
கண் உறங்கும்
என் மகனே..
'ஷெல் அடியில்
உன் தகப்பன்
செத்ததை நீ
அறிவாயோ?

தே. கலைமதி
வந்தாறுமூலை.

### அ(வ)கதி நிலை

ஆயுதம் பறித்தது
அனைத்தையும்..
எஞ்சியிருப்பதோ..
,ஏழ்மையும் தாய்மையும்!

-யாழமீர் மர்வான்-

"பாசம்" நேசமுடன்
பாலூட்டுகிறது.
"வறுமை" பொறுமையுடன்
சம்மட்டி அடிக்கிறது.

நடராஜா கிருஷ்ணபிள்ளை
திருகோணமலை.

### அரிச்சுவடி

கல் உடைக்கும்
சத்தம்
இந்த முல்லை மொட்டுக்கு
தாலாட்டுப்பாட்டு.
வாழக்கைப் பாடத்தின்
அரிச்சுவடி
இங்குதான் இவனுக்கு
ஆரம்பிக்கிறது?
பாவம்
முல்லை மொட்டுக்கே
முள்முடியா?

மதுஜா பாய்வா
மட்டக்களப்பு.



## கவிதைப் போட்டி இல-18



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். உங்கள் உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களைத் தபால் அட்டையில் வடிவம் கொடுத்து அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 2.10.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:18
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

### தாய்ப் பாசம்

அம்மா..,
என்னை வளர்பிறையாக்க
உன்னை தேய்பிறை ஆக்கினையோ?

திருமதி ஜெ. இஸ்மாயில்
உடதலவின்னை.

### பெண்மை அழுகிறது

கல்சுமந்து சிலையெடுத்தார்
கண்ணகிக்கு அன்று,
கல்லுடைத்துக் காலம் தள்ளும்
கண்ணகிகள் இன்று.

திருமதி யோகேஸ்வரி ஜெகநாதன்
கட்டுகஸ்தோட்டை.

### தமிழா

அன்று-
கல்லிலே கலைவண்ணம்
கண்ட தமிழா
இன்று -
கல்லுடைத்து உனக்குப்
பாலுட்டும் நிலையா?

செல்வி நர்மதா வேல்முருகு
மட்டக்களப்பு.

### வறுமையென்ன..!

வசந்தம்
மடியினில்..,
தவழும் போது..!
வறுமையென்ன
வெறுமையும்.. கூட
தீர்ந்து போகும்.

சானா சண்முகராஜன்
நாவலப்பிட்டி.

### அமைதி காண்போமா?

கல்(ச்) சத்தம் தருகின்றேன் மகனே - பின்னால் உன்னைச்
செல்(ச்) சத்தம் தாக்காது பழகிக் கொள்ள!
பால் தருகிறேன் மகனே- உன் அப்பனை அழித்தவனை
கோல் கொண்டு அடித்துக் கொல்வதற்கல்ல!
வாள் கொண்ட வெறியர்களை- உன் போதனையால்
தோள் கொடுத்து மாற்றி டவே!
பாற் படுத்தும் ஆயுதத்தை பக்குவமாய் பறித்திடவே!
நாள் வருமா? ஒற்றுமை நாம் கண்டு துயில் கொள்ள!

கல்லூர் சாந்தி
கல்லடி, மட்டக்களப்பு.

# வாசக(ர்)சாலை

எங்கள் அறிவிற்கு உரமூட்டி வாழ்க்கைக்கு வழிகாட்டும் பல்சுவை அம்சங்களுடன் மிளிரும் தினமுரசு வாரமலரே, உன் பணி என்றும் தொடர எனது வாழ்த்துக்கள்.

ஏ.சீ.எம்.முஸம்மில்- மாவனல்லை.

•

வெள்ளி தோறும் பவனி வந்து கொள்ளை அழகுடன் பல ஆக்கங்களையும்- நீ அள்ளித் தந்து- என் மனதைக் கொள்ளையடிக்கும் விதம் நான் சொல்லித் தெரிவதில்லை! எல்லோரும் அறிந்ததே!!

சேத்தூர் எஸ்.பகீரதி-மட்டுநகர்.

•

படைத்தவர் பதில் சொல்கிறார்

அன்பின் முரசிற்கு.......

"வெற்றிகரமாக காப்பி ஊற்றுவது எப்படி" என்ற எனது கட்டுரை தொடர்பான ஒரு கருத்தை 12.09.93 முரசின் ஆசிரியர் பகுதியில் வாசித்தேன்.


ஆசிரியருக்கு மட்டுமல்ல எனக்கும் பல சகோதரிகள் கண்டன மடல்களை வரைந்திருந்தனர்.

எனது கட்டுரையைப் போலவே "கடலை வறுப்பது எப்படி", "கல்லூரி அகராதி" போன்ற தலைப்புக்களில் கல்லூரி நடைமுறைகளை நகைச்சுவைக் கட்டுரைகளாக ஆனந்த விகடனில் நீங்களும் வாசித்திருப்பீர்கள். இது புதிதில்லை. பொய்யும் இல்லை!

ஆகவே முரசின் தனித்தன்மையையும், உங்கள் மகிழ்ச்சியையும் கருத்தில் கொண்டு அந்தக் கட்டுரை வரையப்பட்டதேயன்றி வேறில்லை.

"உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி"

அன்பின்
எம். சுரேஷ்.



•

மீராகேணி முகமட் திருடிய கதை!

அன்பின் தினமுரசே

ஏறாவூர் மீராகேணி எம்.எச். முகம்மது ஹமீம் எழுதிய..... ஓ...ஸாரி திருடிய "பரீட்சைக்கு நேரமாச்சு" நகைச்சுவைக் கதை "சிந்தாமணி"ப் பத்திரிகையில் எஸ்.ரி.எம். பஸ்வாக் என்பவரினால் எழுதி வெளியானது. எந்தவிதமானதொரு மாற்றமும் இல்லாமல் அட்சரம் பிசகாமல் அப்படியே காப்பி அடித்துள்ளார். ஸார், தினமுரசை ஏமாற்றலாம் ஆனால் முரசின் வாசகர்களை ஒரு போதும் யாராலும் ஏமாற்றமுடியாது. க்ரைம் சிங்கங்கள்!

காப்பியடிப்பவர்களே.... ஒரு நிமிடம்! உங்களால் சுயமாக எழுதமுடியாவிட்டால் விட்டுவிடுங்கள். மற்றவர்களின் படைப்புகளை இலக்கிய நயத்தோடு படித்து ரசித்து பிறகு உங்களுக்கே கற்பனை ஊற்று தானாகவே வரும். உங்கள் நெஞ்சைத் தொட்டு கேட்டுப்பாருங்க? காப்பியடித்து பெயர்வாங்கத்தான் வேண்டுமா? என்று.

அது சரி ஸார், திருட்டு ஒன்றைப் பிடித்து தந்துள்ளேன். எனக்கு என்ன பரிசு தரும் எண்ணம் உண்டாம்?

க்ரைம் வாசகர் பற்றி தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

பரினா பர்ஷாத்-கல்முனை

•

தினமுரசின் சில செய்திகளைப் படித்ததும், இதுவரை வேறு பத்திரிகைகளுக்குக் கிடைக்காத தகவல்கள் முரசிற்குமட்டும் எவ்வாறு கிடைக்கின்றன? ஒருவேளை அவையும் காதுல பூ சமாச்சாரமோ? என்று குழம்பியதுண்டு. ( விமானமோட்டிய மனிதக் குரங்கு, டைனோசர், ஓநாய் மனிதன் உட்பட) என் சந்தேகத்தை "ஆதாரம் உண்டு- விடுங்கள் கவலையை" என்ற செய்தி நீக்கி வைத்தது. நன்றி சார்.

திருமதி தெய்வா விஜயகுமார்- சிலாபம்.

•

வியாழன் தோறும் எமது இல்லத்தை நோக்கி வரும் என் அன்பு தினமுரசுக்கு எனது முதற் முத்துக்கள். பாவிகளுக்கு இயேசு சிலுவையை சுமந்து வந்தது போல பல சுவையான செய்திகளையும் கருத்துள்ள கதைகளையும் சுமந்து வரும் உன்னை பாராட்டாமல் என் இமைகள் உறங்க மறுக்கின்றன. நீ கொண்டு வரும் அம்சங்களில் சிந்தியா பதில்கள், விளையாட்டு, கவிதை போட்டி போன்ற பல அம்சங்களை ஆயிரம் நாவுகள் இருந்தாலும் பாராட்ட முடியாது. நீ மேலும் எங்கள் இல்லங்களில் ஒளி விளக்காக இருக்க எனது அன்பு வாழ்த்துக்கள்.

செல்வி சரோ சாமுவேல்-
தலவாக்கலை.

•

அன்பின் தினமுரசே!

உன் ஜனனத்தின் பின் எம் நெஞ்சங்கள் குளிர்ச்சி கண்டுள்ளன. உன்னைத் தொட்டு, உன்னோடு கலந்திருக்கும் நாட்களில் எம் மனங்களுக்கு ஒரு தனி இன்பம் தான். நீ, கொட்டிக் கொடுக்கும் தெவிட்டாத அமுதத்தை நித்தம் நாம் பருகும் போது எப்படி உன்னை வாழ்த்தாது விடுவது?

உன் சேவை சிறக்க- நீ கொடி கட்டிப் பறக்க என் வாழ்த்துக்கள் பல கோடி!

பீ. சிவகுமாரி-வறக்காப்பொலை.

•

ரசிகன் யார்

தினமுரசே முதற்கண் உனக்கு என் வாழ்த்துக்கள். ஆனால் உன்னைத் தெரியும். உன் ரசிகனைத் தெரியாதே! எங்கள் கவலை மறக்க கண்ணே மதுமிதா கதை எழுதும் என்இனிய ரசிகனே நீ தொடர என் வாழ்த்துக்கள். உன் கண்ணே மதுமிதா அடுத்த தொடருக்காக உன்னைத் தேடி நிற்கும் உன் இனிய ரசிகன்!

வ.சுரேஸ் கண்ணா-மட்டுநகர்.

•

அன்பு முரசே வாரம் ஒரு முறை வளம் வந்து வாலிப உள்ளங்களை மட்டுமல்ல பள்ளி செல்லும் சிறுவன் முதல் பாட்டன் வரை சொக்க வைக்கிறாய். உன்னை கைகளில் தாங்கி செல்கின்றார்கள் காரணம் குறுகிய காலத்தில் எல்லா இதயங்களிலும் நீ தனி இடத்தைப் பிடித்து விட்டாய். உன் சேவை மேலும் சிறக்க என் வாழ்த்துக்கள் பல.

செல்வன் கண்ணு சந்திரகாந்தன்
உடபுசஸல்லாவ.

•

அன்பின் முரசே,

என் உள்ளத்தை கொள்ளை கொண்ட முரசே நீ தாங்கி வரும் அத்தனை அம்சங்களும் சுவையும் சுவாரசியமும் கொண்டவை. உனது சேவை மென்மேலும் மலர என் வாழ்த்துக்கள்,

செல்வி. எஸ்.வளர்மதி-எலதுவ
எஸ்டேட்.

•

தினமுரசே! பொன்னரசே!
நேற்று ரசிகன்
உன் ரசிகனல்ல.

உன் பெயர் பலராலும் உச்சரிக்கப் பட்ட போது என் உள்ளத்திலும் லேசான கீறல். உன்னைப் பார்க்க வேண்டும், உன் இதழ் திறந்து சுவைக்க வேண்டும் என்று பார்த்தேன்.. சுவைத்தேன்.

ஆஹா... என்ன கவர்ச்சி, என்ன அழகு. மொத்தத்தில் அத்தனை அம்சங்களும் சூப்பர்.

இன்று.. உன் ரசிகன்
புதிய ரசிகன்

யூனா. மூபி.
எருக்கலம்பிட்டி-01,

•

அன்பெனும் தோட்டத்திலே
பண்பெனும் விதை நாட்டி
பாசமென்ற செடி வளர்ந்து
நேசமென்ற தண்ணீர் ஊற்றி- அதில்
பூவாக-பிஞ்சாக-காயாகக் கனியாக
கனிந்து எம் இதயம் எனும்
சோலையிலிருந்து வீசிவரும் எம் இனிய
முரசே..
நீ அள்ளித்தரும் அத்தனை விஷயங்களும்
புதுமையிலும் புதுமை. நீ இன்னும் வளர
என் இனிய வந்தனங்கள்.

பரஹா நளீர்
புளுகொகத்தென்னை,
அக்குறணை.

•

# அரசும் புலிகளும் விடாப்பிடியாக இருந்தால் சமாதானத் தீர்வுக்கு இடமே இல்லை!

## அமைச்சர் தொண்டா பேட்டி

கனடாவில் உள்ள உலகத் தமிழர் இயக்கத்தினர் 'தமிழோசை' என்னும் தனியார் வானொலிச் சேவை ஒன்றை அங்கு நடத்தி வருகின்றனர். உலகத் தமிழர் இயக்கம் புலிகள் அமைப்பின ருக்கு ஆதரவான அமைப்பாகும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் அவர்கள் அந்த வானொலிச் சேவைக்கு அளித்துள்ள பேட்டியில் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பாராட்டியுள்ளார்.

தமிழோசை வானொலி சார்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும், அமைச்சர் அளித்த பதில்களும் பின்வருமாறு:


**கேள்வி:** நீங்கள் ஆளும் கட்சிக்கு மிக வேண்டியவர்களில் ஒருவர். அமைச்சரவையில் ஒருவராக இருக்கிறீர்கள். நடந்து முடிந்திருக்கும் மாவட்ட சபைத் தேர்தலிலும் மத்திய மாகாணத்தில் உங்கள் செல்வாக்கை – அதாவது உங்கள் பலம் என்ன என்பதை நிருபித்திருக்கிறீர்கள். இந்தப் பின்னணியில் தமிழினப் பிரச்சனை ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால், சுமுகமாக தீர்த்து வைக்கப்படும் என்று நம்புகிறீர்களா? இதில் மற்றுமொரு விடயம் ஸ்ரீலங்கா ஜனாதிபதியோ தமிழினப் பிரச்சனை என்று ஒன்று இல்லை. பயங்கரவாதப் பிரச்சினை மட்டும் தான் இருக்கிறது என்று கூறிவருவதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

**பதில்:** அரசாங்கத்திற்கும் எனக்கும் உள்ள தொடர்பு மலையக மக்களின் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டது. எனவே, அத்தகைய வரையறைக்குட்பட்டே அவர்களுடன் எனது உறவு இருக்கிறது. இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு வரவேண்டுமென்பதில் எனக்குக் கூடிய அக்கறையுண்டு. சிங்களம் மட்டுமே என கூறிய தலைவர் பண்டாரநாயக்காவே, தமிழ் தலைவர்களுடன் செய்த ஒப்பந்தத்தை கைநழுவ விட்டுவிட்டார். இத்தகைய பின்னணியில் அரசாங்கத்தினால் இப்பிரச்சனைக்கு தீர்வு காணமுடியுமென இப்போதைய நிலையில் கூற முடியாதிருக்கிறது.

**கேள்வி:** ஆனால் நீங்கள் – அதாவது தொ. காங்கிரஸ் கட்சி சார்பில் நீங்கள் சமர்ப்பித்த தீர்வுத் திட்டம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் பரிசீலனைக்குக் கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும் கூறியிருந்தீர்கள் அல்லவா? அப்படியிருக்க மேற்படி இரண்டு கட்சிகளும் தமது தீர்வுத் திட்டத்தை சமர்ப்பித்தால் நீங்கள் தெரிவுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வீர்கள். அப்படித்தானே?

**பதில்:** ஆமாம். ஏனென்றால், நியாயமான அளவு ஒரு சந்தர்ப்பம் உண்டு என்கின்ற அடிப்படையில் கலந்து கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**கேள்வி:** அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றிலே இனப்பிரச்சனைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் எனக் கூறியிருந்தீர்கள். எந்த நம்பிக்கையின் அடிப்படையில் நீங்கள் இக்கருத்தை தெரிவித்தீர்கள்?



**பதில்:** இத்தகைய கருத்தை எத்தகைய பின்னணியில் கூறினேன் என்று எனக்குச் சரியாக நினைவில்லை. ஆயினும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு விரைவில் வரவேண்டும். அதற்கான முயற்சிகளில் நாம் தொடர்ந்து ஈடுபட்டு வெற்றிகாண வேண்டும் என்ற எண்ணமே எனக்கு எப்போதும் உண்டு.

**கேள்வி:** அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் அப்படி ஒரு கருத்தை கூறினீர்களா?

**பதில்:** ஆமாம். எந்த அடிப்படையில் கூறினேன் என்று ஞாபகமில்லை. பொதுவாக எந்த நேரமும் நாம் மனமிழந்துவிடக் கூடாது. ஒன்று நடக்காது என்று இருந்தோமானால் நமக்குப் பயன்கிடைக்கப் போவதில்லை. அதனால் எந்த நேரமும் இதற்கு ஒரு முடிவு வரவேண்டும் என்பதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் கூற வேண்டியதுதான்.

**கேள்வி:** நல்லது. ஸ்ரீலங்காவின் அரசியல் யாப்பு ஒற்றையாட்சி முறையைக் கொண்டது. இதன் கீழ் அரசியல் பரவலாக்கல் என்பது நடைமுறையில் சாத்தியமற்றது. ஏனென்றால் மாவட்ட அபிவிருத்தி சபை, மாகாண சபைகளுக்கு ஏற்பட்ட கதி உங்களுக்குத் தெரியும். இது விடயத்தில் என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** சிங்கள மக்களின் கருத்துக்களையும், தமிழ் மக்களின் அபிலாசைகளையும் திருப்திப்படுத்தும் வகையில் ஒற்றையாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டு தீர்வு ஒன்றினை முன்வைத்தேன். இது ஏற்கப்படுமானால், வடக்கு-கிழக்குப் பிரச்சினைகளையும், சுமூகமாகத் தீர்க்கலாம் என்பதே எனது கருத்து.

**கேள்வி:** நீங்கள் முன் வைத்த அந்தத் தீர்வுத்திட்டம் வடக்கு-கிழக்கு இணைப்பைக் கொண்டதா அல்லது அதற்கு எதிரானதா?

**பதில்:** இணைப்பு என்பதில் இரண்டும் ஒரே மாகாணம் ஒரே தொகுதி என்பதுதான் நமது தீர்வுத்திட்டம் பிரிவில்லாத- (குறுக்கிட்டு)

இணைந்த மாகாணங்களாக இருக்க வேண்டும். அதைத்தானே கூறுகிறீர்கள்?

**பதில்:** (தொடர்ந்து) ஆமாம் அதேதான்.

**கேள்வி:** வடக்கு-கிழக்கு இணைப்பு என்பதில் பேரங்கள் இருக்க முடியாது. அது பேரங்களுக்குஅப்பாற்பட்ட விடயம் என்று விடுதலைப் புலிகள் ஐயத்துக்கிடமின்றி திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீலங்கா அரசோ வடக்கையும், கிழக்கையும் பிரிப்பதிலேயே குறியாக இருக்கின்றது. அப்படிப் பார்த்தால் சமாதான வழிகளில் தீர்வு சாத்தியமற்றது என்று ஒரு முடிவிற்கே வரவேண்டியிருக்கிறது. இதில் நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** இருசாராரும் தமது எண்ணங்களில் விடாப்பிடியாக இருந்தால் சமாதானத்திற்கு இடமில்லை.

**கேள்வி:** இதுதான் உங்கள் பதிலா?

**பதில்:** ஆமாம். இதுதான் பதில்.

**கேள்வி:** தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** நான் ஒரே ஒரு முறைதான் அவரைப் பார்த்ததாக ஞாபகம் இருக்கிறது.

**கேள்வி:** எப்போது?

**பதில்:** திருச்சியில் நீண்ட நாட்களுக்கு முன்பு அதற்கு முன்னரும் தெரியாது அதற்குப் பின்னரும் தெரியாது. இன்று இது போன்ற ஒரு போராட்டத்தை நடத்துவது சாதாரண விடயமல்ல. எல்லாத் தமிழர்களும் பெருமை கொள்ளும் வகையில் நடந்து கொள்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

## மாகாண கல்வி அமைச்சு செயலாளர் தன்னிஷ்டப்படி செயற்படுவதா?

(திருகோணமலை நிருபர்)

"ஊழியர் ஒருவரைத் தன்னிஷ்டப் படி வேலை நீக்கம் செய்தமை; வேறு ஒழுங்கீனங்கள் என்பவை காரணமாக வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப்.எம்.ஏ.சி. முகைதீனுக்கு எதிராக உடனடியாக விசாரணை ஒன்றை மேற் கொள்ள வேண்டும்" இவ்வாறு கோரும் கடித மொன்றை யாழ் மாவட்டப் பா. உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலதிபருமான திரு.கே. பிரேமச்சந்திரன், கல்வி. உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரன் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதன் பிரதிகள் கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. வேலை நீக்கத்துக்கான ஊழியர் நீதிமன்றம் செல்லவும் உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

## வருமானத்தில் வீழ்ச்சி தொழிலாளர்கள் வாட்டம்

(இராகலை நிருபர்)

நுவரெலியா, நானுஓயா, பூண்டுலோயா ஆகிய பகுதிகளிலுள்ள பீற்று, நேஸ்பி, மூன்பிலேன், கல்சிமகாஎலிய, கிளரண்டன், கிளாஸோ, உடரதல்ல, ரதல்ல, எடின்பரோ, நோத் பூண்டுலோயா, சீன், ஹரோ, டன்சினன், பேர்லேண்ஸ் ஆகிய தோட்டங்களில் படிப்படியாக வேலை நாட்கள் குறைக்கப்பட்டு வருவதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதனால் தொழிலாளர்களின் மாதாந்த வருமானத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வேலை வழங்கப்படாத நாட்களில் பிற இடங்களுக்கு சென்று மரக்கறி தோட்டங்களில் நாட் சம்பளத்திற்கு வேலை செய்து அன்றாட வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவ்வாறு வேறு இடங்களுக்கு சென்று வேலை செய்யும் போது வருட போனஸ், ஆதாய போனஸ், ஊழியர் சேமலாப நிதி, போன்ற சலுகைகளை இழக்க நேரிடுகின்றது.

## பலியெடுக்கும் வாந்திபேதி

யாழ் குடாநாட்டில் வாந்திபேதி தீவிரமாகப் பரவிவருகிறது. இதுவரை 40 பேர்வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாந்திபேதி காரணமாக இருவர் பலியாகி உள்ளனர். பலியானவர்கள் இருவரும் தமிழ்நாட்டில் அகதியாக இருந்து அண்மையில் திரும்பி வந்தவர்கள் ஆவர்.

மரண வீடொன்றுக்குச் சென்ற 8 பேர் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## மணிக்கோபுரப் பணி!

(கந்தப்பளை நிருபர்)

கந்தப்பளையில் உள்ள பாக்கு தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு கந்தப்பளையில் உள்ள சில வர்த்தகர்களும் பாக்கு தோட்ட மக்களும் ஒன்று சேர்ந்து மணிக்கோபுரம் அமைத்து வருகிறார்கள்.

## தோட்டப்புறத் தமிழ் பாடசாலைகள் ஏற்றம் பெறுவது எப்போது?

(மாத்தறை நிருபர்)

மாத்தறை மாவட்டத்திலுள்ள தோட்டத் தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையினால் ஆயிரக் கணக்கான தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக தெனியாய இந்து மாமன்றம் தென் மாகாண கல்வியமைச்சுக்கு அறிவித்துள்ளது.

தெனியாய புனித மத்தேயு வித்தியாலயத்தில் 310 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் மாத்திரமே கடமை புரிகிறார். அதுவும் பயிலுநர் ஆசிரியராவர். இவர் தமக்குத் துணையாக க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்து வேலையின்றியிருக்கும் இரு இளைஞர்களை தொண்டர் ஆசிரியர்களாக சேர்த்து பாடசாலையை நடத்தி வருகிறார்.

தெனியாய மெவர்லி தோட்டப் பாடசாலையில் 275 மாணவர்கள் கல்விகற்று வருகிறார்கள். இங்கு அதிபரும், பயிலுநர் ஆசிரியர் ஒருவருமே தமிழ் ஆசிரியர்களாவர். இங்கு நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையைப் போக்க, கல்விப் பகுதி நான்கு சிங்கள பயிலுநர் ஆசிரியர்களை நியமித்துள்ளது. இவர்கள் சிங்கள மொழியை மாத்திரமே கற்பிக்கிறார்கள்.

என்சல்வத்த தமிழ் வித்தியாலயத்தில் 250 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இங்கும் ஒரு தமிழ் ஆசிரியரும் ஒரு ஆங்கில ஆசிரியருமே உள்ளனர். இதே போன்றே அனின் கந்த த.வி., ஹேன்ட் போட் த.வி. ஹுளந்தாவ த. வித்தியாலயத்திலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக இந்து மாமன்றம் அறிவித்துள்ளது.

## சோகம் தீருமோ? விடிவு மலருமோ?

சொந்தமண்ணில் அகதிகளாய்ச் சோகம் சுமந்து, விடிவு எப்போது என்பது வினாக்குறியே வாழ்க்கையாகிவிட்ட அகதிகள். மட்டக்களப்பு காரைத்தீவில் விபுலானந்த அகதிமுகாமின் ஒரு கொட்டிலின் கோலமும், அங்குள்ள அகதிச் சிறார்களில் சிலரும். (படம் காரைதீவு நிருபர்)



## காயப்பட்டுள்ள கல்வி நிலையம்

(நிந்தவூர் நிருபர்)



சம்மாந்துறை கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவைச் சேர்ந்த மஜீத் புரம் முஸ்லிம் வித்தியாலய வகுப்பறை மற்றும் அதிபர் விடுதிக்கட்டிடங்களின் அவல நிலையையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். 1990ம் ஆண்டு இடம் பெற்ற பயங்கரவாத சம்பவங்களின் போது, துப்பாக்கி வேட்டுக்களால் இக்கட்டிடங்களின் கூரை ஓடுகள், ஜன்னல்கள் சேதமுற்றும் இவை திருத்தியமைக்கப்படாது இப்படிக் காட்சியளிக்கின்றது. இங்கு மக்கள் மீளக் குடியமர்த்தப் பட்டுள்ள நிலையில், இப்பாடசாலைக்கு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் ஆவன செய்வார்களா? என பெற்றோர் அங்கலாய்க்கின்றனர்.

## இடைநடுவில் நின்று விட்ட திட்டங்கள் வரட்சியிலே வாடும் கிராமங்கள்!

(திருகோணமலை நிருபர்)

சாம்பல்தீவு, சல்லி ஆகிய கிராமங்களில் குடி நீர்த் தட்டுப்பாட்டால் மக்கள் பெரிதும் வருந்துகின்றனர். சல்லிக் கிராமத்தில் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. குடிநீர்க் கிணறுகள் வெகு குறைவாகவே உள்ள இப்பகுதிகளில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக அக்கிணறுகளும் வற்றி விட்டதால் குடிநீருக்காக மக்கள் கால்கடுக்க அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

மேற்படி கிராம மக்களுக்குக் குழாய் நீர் வழங்கும் திட்டமொன்று தொடக்கப்பட்டிருந்த போதிலும் இடைநடுவில் அத்திட்டம் நிறுத்தப்பட்டுப் பல வருடங்களாக கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. தங்கள் பகுதிக்கு இன்றோ நாளையோ குடிநீர் வந்துவிடும் என்று கனவு கண்ட மக்கள், திட்டம் நிறுத்தப்பட்டதால் என்று வரும் குடிநீர் என்று கவலையோடிருக்கிறார்கள்.

## சிறு விளம்பரப் பகுதி


**தேவை**

கொஸ்லாந்தை பகுதி முரசு விற்பனைக்கு முகவர்கள் விண்ணப்பிக்கவும். வைப்புப்பணம் செலுத்தக் கூடியவர்கள் விரும்பப்படுகிறார்கள்.

தினமுரசு விற்பனைக்கு நேரிலோ, தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.
Thina Murasu
88/14, Somadevi Place,
Kirillapone, Colombo-5.


## பேரன்பு கொண்டோரே நீவிர் பிரிந்து சென்று ஓராண்டு சென்றதன்றோ!



| | சுப்பிரமணியம் கந்தவனம் | கந்தவனம் தில்லைநாச்சியார் |
|---|---|---|
| தோற்றம்: | 21.11.1921 | 08.07.1931 |
| மறைவு: | 29.04.1992 | 29.09.1992 |

நெஞ்சம் நிறைந்த உங்கள் நினைவுடன் வாழும்- மக்கள், மரு மக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.
256/30, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.


## மலையாள மாந்திரீகம்



உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex, NUWARA ELIYA.**
**Dial: 052-2508 & 3093**
**Celltel. 072-26088, 078-61933**
**COLOMBO BRANCH : இம்மாதம் 20 முதல் 30 வரை**
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. FAX: 0094-523093
30ஆம் திகதி வரை கொழும்பில் சந்திக்கலாம்.


## புகார் பெட்டி

### கடலரிப்பைத் தடுக்க எங்கே நடவடிக்கை?

கல்முனைக்குடி கடற்கரைவீதி கடந்த பல வருடகாலமாக கடலரிப்புக்குள்ளாகி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. குறிப்பாக கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள வீதியும் அதன் பக்க வீதிகளும் மிகவும் மோசமாகப் பாதிப்புற்று போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளன. இவ்வருட ஆரம்பத்தில் இங்கு இடம் பெற்ற ஓர் அரசியல் விழாவின் போது, பல லட்சம் ரூபாய் கடலரிப்பைக் கட்டுப்படுத்த ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அத்தோடு சம்மந்தப்பட்ட அமைச்சர்களும் பாதிப்புற்ற இடங்களைப் பார்வையிட்டனர். இச் செய்திகள் வானொலி, பத்திரிகைகளிலும் உடன் அறிவிக்கப்பட்டன.

ஆனால் இது வரையும் கடலரிப்பைக் கட்டுப்படுத்தவோ அல்லது மட்டுப்படுத்தவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்தும் கடலரிப்பினால் பாதைகள் சேதமுற்ற வண்ணம் இருக்கின்றன. கடலரிப்பின் காரணமாக, மீனவர்கள் வாடிகளும், குடிசைகளும், கடைகளும் சேதமாக்கப்படுவதோடு, தற்போது இக்கடற்கரை வீதியும் பாதிப்புற்றுள்ளதால் மீனவர்களும் ஏனைய பொது மக்களும் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது.

கடலரிப்புக் கட்டுப்படுத்தாது விட்டால் இக் கடற்கரையை அன்டியுள்ள தர்ஹாவும், அதன் இரு மினராக்களும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய அபாயம் ஏற்படக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

மேலும் இத் தர்ஹாவுக்குச் செல்பவர்களும் பாதிப்புற்றுள்ள குறிப்பிட்ட வீதியையே பயன்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எஸ்.ரீ.முஹம்மது பஸ்வாக்
கல்முனை-05.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-17

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | |
| | | 3 | ■ | 4 | | |
| 5 | | | ■ | | | ■ |
| | ■ | | 6 | | | |
| | 7 | | ■ | | | |
| ■ | | | 8 | ■ | | |
| 9 | | ■ | 10 | | ■ | 11 |

**இடமிருந்து வலம்**

1. எழுதலாம், கிழிக்கலாம்.
2. சிலர் அடுத்தவர் மீது இதைத்தான் வீசுவார்கள்.
3. இதற்கு விடை கண்டு பிடித்தால் வெற்றிதான். (வலமிருந்து இடமாக உள்ளது)
4. ரோமமுள்ள மிருகம்.
5. முனிவனை மயக்கியவள்.
6. உயரத்திற்குச் செல்லும். (குழம்பியிருக்கிறது)
9. சிலர் இது வர மாத்திரை போடுவார்கள்.
10. இது விருட்சமாகலாம்.

**மேலிருந்து கீழ்**

1. இது வந்தால் இருட்டுத் தான்.
2. வாங்கக்கூடாது என்று சொன்னாலும் வாங்கப் பட்டுக்கொண்டே இருக் கிறது.
3. உடலுக்குப் பகை.
4. குளிருக்கு இதம்.
7. நாடுகளில் நடப்பது.
8. பூட்டுக்குத் தோழன்.
11. இதில் பலவகை உண்டு. (தலைகீழாக இருக்கிறது)

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 02.10.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். (அஞ்சலட்டைகளை மாத்திரம் உபயோகிக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல.-17
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-15க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சி | ம் | மா | 2 ச | ன | ம் | ■ |
| ல | 3 ப | ரு | த் | தி | ■ | 4 பு |
| ந் | ■ | 5 அ | தி | கா | ர | ம் |
| தி | ரை | ■ | ய | 6 ச | த் | ரு |
| ■ | து | 7 பொ | ம் | மை | ■ | க |
| 8 தா | 9 ம | ரை | ■ | ய | ■ | ■ |
| லி | ■ | 10 க | ய | ல் | வி | ழி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.15இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. எஸ். விநாயகமூர்த்தி மட்டக்களப்பு.
2. கே. சொரூபச் சந்திரன் திருகோணமலை.
3. எம். சாருமதி கண்டி.
4. வி. மகேஸ்வரி பண்டாரவளை.
5. ஆர். ரத்னபாலன் கொழும்பு-7.
6. பத்மகுமார் மட்டக்களப்பு.
7. லி. மங்களேஸ்வரி திருகோணமலை.
8. செல்வி. ஏ.ஜி. செய்னபு ஜவுஸா பாணந்துறை.
9. செல்வி த. மஞ்சுளா திருமலை.
10. என்.எல். அப்துல்பாறி மௌஜூத் இப்பாகமுவ.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.


## தங்க நகைச் சேமிப்புத் திட்டம்

தங்க நகைப் பிரியர்களே! உங்களின் தங்க நகைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள ஒரே முறையில் பணம் செலுத்தி வாங்க வேண்டுமே என்ற கவலையா? உங்களின் நகைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இதோ நாம் எமது கரங்களை உங்களுடன் இணைக்கிறோம்.

நாம் அறிமுகப்படுத்தியிருக்கும் நகைச் சேமிப்புத் திட்டத்தில் ஓர் உறுப்பினராய் சேருங்கள். ஒவ்வொரு மாதமும் ரூ.500/= அல்லது ரூ.300/= அல்லது ரூ.150/= மட்டும் தவணை முறையில் செலுத்துங்கள். தவணைக் காலம் 24 மாதங்கள் மட்டுமே. நாளைய நகைத் தேவையைப் பூர்த்தி செய்ய இதுவே சரியான தருணம்.

**விபரங்களுக்குத் தொடர்பு கொள்க:**
SURESH COMBINE
NO. 20, DAILY FAIR,
NUWARA ELIYA.
Phone: 052-2072 or 052-3093


## மக்கள் மயமான பின்பும் பாராமுகம்

நுவரெலியா போக்குவரத்துச் சபை, மக்கள் மயப்படுத்தப்பட்ட பின்னர் சிறப்பாக சேவையை நடத்துமென, எதிர்பார்க்கப்பட்ட போதிலும், முன்னர் எப்படி இயங்கியதோ, அதே போலத்தான் இயங்கி வருகிறது.

காலை நேரங்களிலும் சரி மாலை நேரங்களிலும் சரி கிரமமாக பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. இவ்வாறான வேளைகளில், வத்துமுல்ல, ஹங்குரங்கெத்த போக்குவரத்து சபையை சேர்ந்த பஸ் வண்டிகள பிரயாணிகளை ஏற்றிச்செல்வதால், பெரிதும் உதவியாக அமைகின்றது. சில வேளைகளில் இவர்களும் கைவிட்டு செல்வதுண்டு.

இதனால், உடபுசல்லாவ, இராகலை, வலப்பனை பகுதிகளிலிருந்து நுவரெலியா மாநகரத்திற்கு வேலைக்கு செல்வோர், பாடசாலைக்கு செல்வோர், நுவரெலியா ஊடாக வேறு முக்கிய இடங்களுக்குச் செல்வோர் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். மாதாந்த பருவச்சீட்டுகள் பெற்றவர்கள் தனியார் வாகனங்களில் மேலதிகமாக பணம் செலுத்தி செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கவனத்திற் கொண்டு சிறப்பான பஸ் சேவையை நடத்த பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருவார்களா என இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

கே. நவநீதராஜா
ராகலை.


★ உங்களுக்கு வேண்டியவர்களுடன் டெலிபோனில் கதைக்க வேண்டுமா?
★ வெளிநாடுகளுக்கு தந்தி அடிக்க வேண்டுமா?
★ இதோ கதுருவலயில் உடனுக்குடன் சேவை!
★ வெளிநாட்டு உள்நாட்டு டெலிபோன் வசதிகள்
★ வெளிநாட்டு தந்திகள்
★ பெக்ஸ் (FAX) வசதிகள்
★ போட்டோ கொப்பி சேவை
★ ஆங்கில டைப்பிங்

தினசரி வேலை:
காலை 8 மணிமுதல் - இரவு 8 மணிவரை

"குயிக்"
கதுருவல (சிங்கர் கம்பனி முன்னால்)

★ பொலனறுவைப் பகுதிக்குரிய உங்கள் அபிமான "தினமுரசு" மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் கிடைக்கும்.

Tel: 027-2063
FAX: 009427 2063


## மரணப் பதிவுக்கும் மறுப்பா?

கடந்த 1993 ஜனவரி 25ந் திகதி மூதூர் மக்களுக்கே முகாரியிட்ட நாள். அந்நாளில் தான் எம்மாதா பெற்றெடுத்த நூற்றிற்கும் மேற்பட்ட அப்பாவி உயிர்களை ஆழிக்கடல் பலியெடுத்தது.

இந் நிகழ்வு நடைபெற்று சுமார் ஏழு மாதங்கள் முடிவடைந்து விட்டன. இதற்கிடையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டும், ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டும், விளக்கங்கள் கொடுக்கப்பட்டும் முடிந்து விட்டன. பத்திரிகைகளிலும் வானொலியிலும் ஆணைக்குழு இறுதி முடிவை சமர்ப்பித்து விட்டதாக அறிவிப்பு. ஆனால் பெற்ற தாயை, தந்தையை, பிள்ளைகளை, சகோதரனை, அறிவூட்டிய ஆசானை; ஊர்ப் பெரியார்களை இழந்து கண்ணீருடன் வாழ்ந்து கொண்டு இருக்கும் எம்மூர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரைக்கும் யாரும் ஆறுதலளிக்க முன்வரவில்லை. இருந்தாலும் இக்கோர நிகழ்வுக்கு பலியானவர்களின் பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக இறந்தோரின் மரணப் பதிவையாவது பெற்றுத் தருவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிகவும் தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

மு.அ.அனஸ்.
மூதூர்-02.

## பழுதான கிணறு!

இரண்டு வருடங்களுக்கு முன்பாக கொத்தாந் தீவுக்கு குடிநீருக்காக குழாய்க் கிணறு ஒன்று கல்பிட்டி பிரதேச சபையால் கட்டிக் கொடுக்கப் பட்டது.

அக்கிணறு தற்பொழுது பழுதாகி விட்டது. இதனால் இப்பகுதி மக்கள் குடிப்பதற்கு நீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

ஆகவே இதை திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

எம்.ஏ.ஏ.ஜுனூத்-கொத்தாந்தீவு.

## தொலைபேசி வருமா?

பசறை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஹொப்டன் உப தபாற் கந்தோரில் பல வருடகாலமாக தொலைபேசி வசதியின்மையினால் இப்பிரதேச மக்கள் பெரும் இன்னல்களை அடைந்து வருகிறார்கள். இம் மக்களின் நலன் கருதி, இதற்கு பொறுப்பான அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவார்களா?

எஸ்.பி.சந்திரகுமார்
ஹொப்டன்.

## பாழடைந்து போகும் பாடசாலை

தாண்டியடிக் கிராமத்தில் நான்கு கட்டிடங்களில் ஆண்டு எட்டுவரை பாடசாலை இயங்கி வந்தது. ஆனால் 1990ல் ஏற்பட்ட பயங்கரவாதப் பிரச்சனை காரணமாகப் பாதுகாப்புப் படையினர் கடந்த மூன்று வருடங்களாகப் பாடசாலையில் குடியிருக்கின்றனர். இதனால் தற்போது இப்பாடசாலை ஓலைக் கொட்டில்களில் அனாதரவாய் இயங்கி வருகின்றது. அதனிலும் பார்க்கப் போக்குவரத்து இன்மையால் வெளியூர் ஆசிரியர்கள் ஒன்பது பத்து மணிக்கே சமூகமளிக்கின்றனர். இதன் விளைவாக இவ்வூர் இளைய சமுதாயம் குட்டிச் சுவராய் போய்க் கொண்டிருக்கின்றது.

ஆகவே உடனடியாக உரிய கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கருணை காட்ட வேண்டும்.

மா.யோகராஜன்
கடற்கரைவீதி, தாண்டியடி.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

**—நாரதர்—**

இலங்கையின் அமைச்சரவையில் சுவாரசியமான பேச்சாளர்கள் பற்றாக் குறையாக இருப்பது போல் தோன்றுகிறது.

பத்திரிகையாளர்களுக்கான மாநாடுகள் கூட களைகட்டுவதில்லை.

இவ்வாறான உப்புச் சப்பற்ற நிலைக்கு இடைக்கிடையே பரிகாரம் காண்பவர் நமது தகவல் ராஜாங்க அமைச்சர் ரணசிங்க.

சுதந்திரமாகவும், நெற்றிப் பொட்டில் அடிப்பது போலவும் பேசக் கூடியவர் ரணசிங்க ஒருவர் மட்டும்தான்.

பிரபாகரன் சிறந்த தலைவர்களில் ஒருவர் என்று திரு.தொண்டமானும், கூறியிருக்கிறார்.

இனப்பிரச்சனை இருப்பதாகப் பேசினால் பிழை என்று ஜனாதிபதி கூறியிருந்தார் அல்லவா?

அது பெரும் சங்கடங்களை ஆளும்கட்சி வட்டாரங்களில் ஏற்படுத்தி விட்டது.

சிலர் வடக்கு-கிழக்குப் பிரச்சனை என்று பேசுகிறார்கள்.

வேறு சிலர் வடக்கு-கிழக்கு யுத்தம் என்கிறார்கள்.

இனப்பிரச்சனை என்றுதானே சொல்லக்கூடாது. தமிழர் பிரச்சனை என்று சொன்னால் பிழை இல்லைத் தானே என்று இன்னும் சிலர் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பையன்கள் என்ற தொனியில் தமிழர் இயக்கங்களைக் கிண்டலடித்ததும் நினைவில் இருக்கும் விசயமாகும்.

புலிகளுக்கும்-இந்திய அமைதிப் படையினருக்கும் இடையே நடைபெற்ற யுத்தமானது அந்த அலட்சிய மனோபாவத்தின் மீது விழுந்த அடியென்று சொல்லப்படக்கூடியதே.

யுத்தத்தின் நோக்கம் என்ன? புலிகள் போர் நடத்தியது சரியா? இந்தியாவோடு முறித்துக் கொண்டது விவேகமா? என்ற கேள்விகளுக்கு அப்பால், பெரியநாடு எதுவும் செய்யலாம் என்ற மனோபாவம் முறிக்கப்பட்டது என்பது ஏற்கப்பட வேண்டியதேயாகும்.

மாள்வதைவிடவும், அகிம்சைப் போராட்டத்தில் உயிர் துறப்பதற்கு அதிகளவு உள உறுதி அவசியம் என்பதை மறுப்பதற்கில்லை.

திலீபனின் நினைவு தினத்தை யாழ்ப்பாணத்தில் 12 நாட்கள் புலிகள் அமைப்பினர் அனுஷ்டித்துள்ளனர்.

அஞ்சலிக் கூட்டங்கள், தீபம் ஏற்றுதல், அடையாள உண்ணா விரதங்கள் என்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

மாண்டவர்களுக்கு அஞ்சலி செய்யும் அதே நேரத்தில் மாள்பவர் தொகையைக் குறைக்கவும் மனப்பூர்வமான முயற்சிகள் அவசியம் என்பதை புலிகளின் தலைமைப் பீடமும் உணரவேண்டும். ■

# இனப்பிரச்சனைக்குப் புதுப்பெயர் தேடல்!

பிரபாகரனுக்கு எதிராக பல கோடிகளைக் கொட்டிச் சண்டையிடும் அரசாங்கத்தில் இருந்து கொண்டுதான் திரு.தொண்டாவும் அப்படி ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஆனால் தொண்டாவின் பலம் தனித்துவமானது. அரசில் அங்கம் வகித்தாலும் சொந்தக் கட்சி, தொழிற் சங்கப் பலம் என்று கால் ஊன்றி நிற்பவர் அவர்.

அரசாங்கத்திற்கும் திரு.தொண்டமானின் ஆதரவு தேவை. திரு. தொண்டமானுக்கும் அரசின் ஆதரவு தேவை.

ஆக, பரஸ்பர தேவையைப் பொறுத்து முரண்பாடுள்ள விஷயங்களில் கூட அனுசரித்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

தகவல் ராஜாங்க அமைச்சர் ரணசிங்க விவகாரம் வேறுவிதமானது.

ஆளும் கட்சியில் இருந்து கொண்டே தவறான முடிவுகளை விமர்சிப்பது சாதாரண காரியமல்ல.

கிடைப்பதைப் பெற்றுக் கொண்டு காலம் தள்ளும் ஆமாம் சாமிகள் அரசியலில் அதிகமாகி வரும் காலம் இது.

அவ்வாறான ஆமாம் சாமிகளுக்கே தலைமைகளில் உள்ளவர்கள் முன்னுரிமை கொடுக்கிறார்கள்.

தலைமையில் உள்ளவர்களும், சரி தலையாட்டுகிறவர்களும் சரி எப்படியோ இருக்கும் வரை காலத்தை ஓட்டினால் போதும் என்று காரியம் செய்யும் காலம் இது.

மாறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.



## திலீபனின் உண்ணாவிரதமும் இந்தியாவின் அலட்சியமும்

வெளிநாடுகளிலும் இனவெறி நம்மவரைப் படாத பாடுபடுத்துகிறது.

சமீபத்தில் ஜெர்மனியில் தமிழ்ப் பெண் ஒருவர் அங்குள்ள இனவாதிகளால் கொல்லப்பட்டுள்ளார்.

கனடாவில் இருந்து வரும் செய்திகளின்படி அங்கு அடிக்கடி வெள்ளையர் இலங்கையர் மோதல்கள் நடந்து வருகின்றன.

நம்மவர் தரப்பிலும் தவறுகள் இல்லாமல் இல்லை.

எனினும் சொந்த மண் பிரிந்து அந்நிய மண்ணில் போய் வாழும் போது ஏற்படும் பிரச்சனைகளை முகம் கொடுத்தேயாக வேண்டியிருக்கிறது.

அகதிகள் பிரச்சனைகள் ஒரு சுமையாக மாறிவரும் ஐரோப்பிய நாடுகளில் நம்மவர் நிலையும் கேள்விக்குள்ளாகி வருகிறது.

இதற்கிடையே கோஷ்டி மோதல்கள் கோஷ்டி மோதல்களுக்குத் தேவைப்படும் என்பதற்காக ஆயுதக் கடத்தல்கள் என்று நம்மவர் சிலர் உள்ளதையும் கெடுத்து வருவது கவலை தரும் விசயம்.

கனடாவில் உள்ள தமிழ் கோஷ்டி ஒன்று அமெரிக்காவில் இருந்து ஆயுதம் கடத்த முயன்று மாட்டியிருக்கிறது.

இந்த ஆயுதங்கள் கனடாவுக்குள் சென்றிருந்தால் மோதல்களில் பயன் பட்டிருக்கும்.

நம்மவர் மானம் சந்தி சிரித்திருக்கும்.

இனியாவது பொறுப்போடு நடக்க சம்பந்தப்பட்டவர்கள் முயலட்டும். ■

மௌனமே இங்கே மாபெரும் சொத்து. மௌனமாக இருக்கத் தெரிந்தவன் பிழைத்துக் கொள்ளலாம் என்பதே பொதுவான அரசியல் சூத்திரமாகிவிட்டது.

ஆனால் ரணசிங்க அங்குதான் வித்தியாசப்படுகிறார்.

தற்கால அரசியலுக்கு அவர் ஒரு கோமாளித்தனம் கொண்டவராகக் கூட தெரியலாம்.

ஏன் என்றால் எல்லோருமே நிர்வாணமாக இருக்கும் போது துணியோடு இருப்பவன் பைத்தியக்காரனாகத்தான் கருதப்படுகிறான்.

சில வேளைகளில் ரணசிங்க போன்றவர்களால் தற்கால அரசியலில் எப்படித் தாக்குப்பிடிக்க முடிகிறது என்று கூட யோசிக்கத் தோன்றுகிறது.

ஒரு வேளை ரணசிங்க போன்றவர்கள் அதிகாரமுள்ள தலைவர்களாக இருந்திருந்தால் இனப்பிரச்சனை இந்தளவுக்கு சிக்கலானதாக மாறாமல் இருந்திருக்கக்கூடும்.

முன்னர் சமஷ்டிக்கும் ஆதரவு கொடுப்பேன் என்று கூறினார்.

இப்போது யார் குத்தியும் அரிசியாகட்டும். தமிழர் பிரச்சனை தீரட்டும் என்று பேசியிருக்கிறார்.

இனப்பிரச்சனையே இல்லை என்று ஜனாதிபதி சொல்லிவிட்டார்!

இனப்பிரச்சனை இருப்பதாக பேசுவதே பெரிய பிழை என்பது போலவும் கூறியிருக்கிறார்.

அப்படியிருக்கும் போது அமைச்சரவையில் இருந்து பிரச்சனையைத் தீர்ப்பது பற்றி ஒரு குரல் எழுகிறது என்றால் அதைப் பாராட்டியே ஆகவேண்டும்.

திருடனைப் பிடிக்க திருடனைத்தான் அனுப்பவேண்டும் என்று அமைச்சர் ரணசிங்க கூறியிருப்பது தான் கொஞ்சம் உதைக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் இருந்ததையும் இழந்து போய் நிற்கிறார்கள்.

பறித்தெடுத்தவர்கள் பட்டியலில் பலரது பெயர்கள் பதிவில் உள்ளன.

வேண்டுமென்றே அப்படி ஒரு உவமையை அமைச்சர் கூறியிருக்கமாட்டார்.

தமிழர் பிரச்சனையைத் தீர்க்க தமிழர்தான் பேச வேண்டுமா என்று இனவாதிகள் எழுப்பும் கேள்விகளை அடக்கவே அவ்வாறு கூறியிருக்கிறார்.

எனினும் உவமை பொருத்தமற்றதே. மறுமுறை திருத்திக் கொள்வாராக. ■

பிரச்சனை இருக்கிறது. அது எல்லோருக்கும் தெரிகிறது.

ஜனாதிபதி சொல்லிவிட்டார் என்பதால் மறுத்துப் பேசவும் முடியாது.

ஆக, மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலமை.

எனவேதான் இனப்பிரச்சனை என்று சொல்லாமல் வேறு பெயரில் எப்படி அழைக்கலாம் என்று எல்லோரும் முடியைப் பிய்த்துக் கொள்கிறார்கள்.

பேசாமல் இனப்பிரச்சனையை இல்லாமல் செய்துவிட்டால் என்ன? இந்தப் பெயர் குழப்பங்கள். பெயர் சூட்டல்கள் எல்லாம் தொல்லைப்படுத்தாமல் இருக்கும் அல்லவா? ■

செப்டெம்பர் 26ம் திகதி திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த நாள்.

விடுதலைப் புலிகள் அமைப்பினரின் யாழ் மாவட்ட அரசியல் தலைவராக இருந்தவர் திலீபன்.

ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு செயல்பட்ட ஒருவர் சாத்வீகப் போராட்டத்தில் இறங்கியது ஆச்சரியம் தான்.

சும்மா மிரட்டுகிறார்கள் என்று தான் முதலில் இந்தியாவும் நினைத்தது.

இந்த இடத்தில் ஒரு விசயத்தை சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

இந்தியா இலங்கைத் தமிழர் பிரச்சனையில் அனுதாபம் காட்டியிருக்கிறது. இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டியுமிருக்கிறது.

இந்தியா பக்கத்தில் இருக்கிறது என்று ஆறுதல் கலவர காலங்களில் இலங்கைத் தமிழர்களின் காயங்களுக்கு மருந்தாகவும் இருந்திருக்கிறது.

எனினும் இந்திய அரசியல் தலைவர்தள் சிலர் மத்தியிலும், அதிகாரிகள் மட்டத்தில் உள்ள சிலர் மத்தியிலும் இலங்கைத் தமிழர் அமைப்புக்கள் பற்றி ஒரு அலட்சியமான கண்ணோட்டம் இருந்தது.

தமிழகத் தலைவர்கள். மத்தியில் அவ்வாறான கண்ணோட்டம் இருக்கவில்லை. ஆனால் தமிழகத்தில் இருந்த அதிகாரிகள் சிலர் மத்தியிலும் அவ்வாறான ஒரு கண்ணோட்டம் இருந்தது.

'ப்பூ' என்று ஊதிவிட்டால் பறந்து விடுவார்கள் என்பது போன்ற கண்ணோட்டம்.

திம்பு பேச்சுவார்த்தையின் போது இந்திய அதிகாரி ரொமேஸ் பண்டாரி சிறு பெரியவரோ சிறியவரோ அண்ணனோ தம்பியோ பரஸ்பர மரியாதை என்பது இருக்க வேண்டியதே.

'நீ என்ன பெரிய இவனா' என்று, தூக்கி எறியும் போக்கு யாரால் வெல்லப் பட்டாலும் வரவேற்கப்பட வேண்டியதே.

திலீபனின் உண்ணாவிரதத்தையும் பேரம் பேசும் மிரட்டலாகவே இந்தியா முதலில் அலட்சியம் செய்தது.

நீர் கூட அருந்தாமல் சாகும்வரை உறுதி காட்டியதன் மூலம் இந்தியாவின் நினைப்பை திலீபன் பொய்ப்பித்து விட்டார்.

திலீபனின் சாவின் பின்னர்தான் இந்தியா ஓடி விழித்தது.

இந்திய அரசு அலட்சியமாக இருந்த அதே நேரத்தில் ஒரு சிறந்த போராளி மரித்தல் குறித்து இயக்கத் தலைமையும் அக்கறையின்றி இருந்தமையும் கவனத்தில் கொள்ள வேண்டியதே.

இந்தியாவுக்கு எதிரான உணர்வுகளை ஏற்படுத்த திலீபன் போன்ற மிகப்பெரிய விலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமா என்பது கேள்விக்குரியதே,

உயிரிழப்புக்கள் பற்றிய இயக்கத் தலைமைகளின் அலட்சியங்களையும் மறந்து விடலாகாது.

போராட்டத்தில் உயிரிழப்புக்கள் தவிர்க்க முடியாதவை என்ற கூற்றின் மூலம் பெறுமதியான இழப்புக்களை நியாயப்படுத்த முயல்கிறார்கள்.

பொதுவாகவே இவ்வாறான ஒரு குணாம்சம் இயக்கங்கள் மத்தியில் காணப்பட்டே வந்தன - வருகின்றன.

புலிகளைப் பொறுத்த வரையிலும் தியாகம், தற்கொலை என்ற பெயர் களோடு தவிர்க்கப்பட வேண்டிய இழப்புக்களைக் கூட தடுக்காமல் விட்ட நிகழ்வுகள் உண்டு.

திலீபனின் மரணமும் அவ்வாறானதே என்று வருத்தப்பட இடமுண்டு.

இன்று நம்மத்தியில் இருந்து சாதித்திருக்கக்கூடிய பலரை விவேகமற்ற செயற்பாடுகள் இழக்க வைத்திருக்கின்றன.

அவ்வாறான செயற்பாடுகள் தமிழர் அரசியலிலும் வேறு பல துறைகளிலும் வெற்றிடங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

திலீபனின் கொள்கைகள், கருத்துக்கள் குறித்து வேறுபாடுகள் இருக்கலாம்.

ஏற்பவர் ஒரு புறமும், எதிர்ப்பவர் மறுபுறமும் நின்று வாதம் செய்யலாம்.

ஆனால், திலீபனின் உறுதி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது.

ஆயுதப் போரில், மோதலில்

## அதிரடி அய்யாத்துரை



கொழும்பில் லோ ஏசியா (Law Asia) மாநாடு சிறப்பாக நடந்து முடிஞ்சுது. நிறைவு நாள் அன்று மிஸ் கனகசபையைப் பேசக் கூப்பிட்டினம். மலேசியாவில் இருந்து வந்த பிரதிநிதி. எங்கட ஆள்தானாக்கும் எண்டு நிமிர்ந்து இருந்து பார்த்தனான். ஆங்கிலத்தில அழகாப் பேசினார். தனது தாய்-தந்தை யாழ்ப்பாணத்தில் தான் பிறந்து வளர்ந்தவை எண்டு சொன்னார். யாழ்ப்பாணத்தில் அமைதி திரும்பவேணும் எண்டு பிரார்த்திப்பதாக மிஸ் கனகசபை பேசின பேச்சிலை பொய்யில்லை.

இதுவும் லோ ஏசியா விசயம்தான். லோ ஏசியாவுக்கு புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஒரு தமிழர். பெயர் பரம் குமாரசாமி. அவரும் மலேசியாப் பிரதிநிதிதான். பேச வந்தவர் பேச்சோட பேச்சா தனது தாய் தந்தையர் யாழ்ப்பாணத்தவர்கள் என்று சொல்ல பெரிய ஆச்சரியமாப் போச்சு. போற போக்கில பார்த்தா யாழ்ப்பாணத்தைத் தவிர வேறை இடம் எல்லாம் யாழ்ப்பாணத்து ஆட்கள் நல்லா இருக்கினம் போல கிடக்கு.

எங்கட ஆட்கள் சிலர் தென்னாபிரிக்க கிரிக்கெட் குழுவைப் பாராட்டுகினம். ஆனாப் பாருங்கோ ஒரு விசயத்தை மறக்கக்கூடாது. ஒரு கறுப்புத் தோல் கூட ரீமில இல்லை. நிறத் திமிர் பாருங்கோ. அதுதான் நல்ல ஆட்கள் இருந்தும் கறுப்பரைக் கை கழுவிப் போட்டு வந்திருக்கினம்.

கிழக்கில இரண்டெழுத்துக்காரர் மூண்டு பேரை தட்டிப் போட்டு ஆட்கள் அவுட் எண்டு நினைச்சு போயிருக்கினம். அதில ஒரு ஆளுக்கு உயிர் இருந்திருக்கு. எழும்பி ஓடி வந்து ஆஸ்பத்திரியில படுத்திட்டாராம். அதாலை விசயமும் வெளியில வந்திட்டுதாம்.

வெள்ளவத்தை பீச்சில ரெயினிங் எடுக்கிற அளவுக்கு நிலமை மாறிப் போச்சுது எண்டு நினைக்கிற சீருடையினரை என்ன செய்யிறது? அதிலையும் முகப்பாத்தி - பிரபல கல்லூரி மாணவர்கள் தான் பயிற்சி செய்தவை. விசாரிக்கப் போக மாணவர்கள் சத்தம் போட்டிருக்கினம். பிறகென்ன தள்ளிப் போய் நிண்டு அதாலை போனவையை அள்ளிப் போட்டிருக்கினம். இடம் கண்ட இடத்தில மடம் கட்டுறது சரியோ?

தமிழ் நாட்டிலை இருந்து வரும் அகதிகள் திருமலையில் இருந்து ரயிலில் ஏனைய பகுதிகளுக்கு போயினம். இடையிலை மிரட்டி பெறுமதியான பொருட்களை பறிக்கும் சிலர் வாலாட்டுகினமாம். கவனிக்க வேண்டியவை கவனிக்காமல் என்ன செய்யினம்? புலி பிடிக்கும் பிஸியில நரிகளைத் தப்ப விடலாமோ?

# பிணக்காடாகிவரும் பிரேசில்

**உலக ரவுண்டப்**

**கட்டுப்பாட்டை மீறும் காவலர்கள்!**



“வேலியே பயிரை மேய்கிறது” என்று சொல்லுவார்கள். பிரேஸில் நாட்டில் இதுதான் நடக்கிறது.

சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிக்க வேண்டிய ஆயுதப்படையினர் - குறிப்பாக பொலிசாரும் இராணுவப் பொலிசாரும்- தாங்களே நீதி வழங்குவதற்கும் தண்டனை நிறைவேற்றுவதற்கும் முழு அதிகாரமும் படைத்தவர்கள் என்ற ரீதியில் நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

திடீரென ஆயுதங்களை ஏந்தி கண்ணில் தென்படுபவர்களையெல்லாம் கொன்று குவித்துவிட ஆரம்பித்து விடுகின்றனர்.

பொது மக்களை எதுவிதக் காரணமுமின்றி சுட்டுக் கொல்லும் இந்த ஆயுதந்தாங்கிகளுக்கு சில சந்தர்ப்பங்களில் பொது மக்களில் கணிசமானோரே வக்காலத்து வாங்கும் சந்தர்ப்பங்களும் இடம் பெற்றுள்ளன.

சாஓ பௌலோ என்ற இடத்தில் வறியவர்களான ஊர் மக்களை அதே ஊரைச் சேர்ந்த ஒருவன் அச்சுறுத்தியிருக்கிறான். ஆனால் நேரடியாக அவன் எவருக்கும் தீங்கு செய்ததாகத் தெரியவில்லை.

பிரேஸில் பொலிஸ் படையைச் சேர்ந்த ஒரு பொலிஸ்காரர் காதுக்கு விசயம் போனது. அவர் ஆயுதத்தோடு வந்தார். அந்த நபரை எதுவித விசாரணையுமின்றிச் சுட்டுக் கொன்றார்.

இச்சம்பவம் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

விசாரணை நடத்திய நீதிபதி அந்த பொலிஸ்காரருக்கு 12 வருட சிறைத் தண்டனை விதித்தார்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து, நீதிமன்றத்தில் குழுமியிருந்த மக்கள் அனைவரும் கூச்சல் போடத் துவங்கி விட்டனர். பொலிஸ்காரருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை குறைக்கப்பட வேண்டும் என்று கூச்சலிட்டனர்.

“சாதாரண குற்றவாளிக்கு உடனடியாக மரண தண்டனை விதித்து சுட்டுக் கொல்லும் அதிகாரம் ஒரு சாதாரண பொலிஸ்காரருக்கு இருக்குமானால் பிரேஸிலில் பொலிசாரின் கொலை வெறி தொடரும் என்பதில் ஐயமில்லை” என்று அந்த நீதிபதி தெரிவித்தார்.

றியோ டி ஜனரோ என்ற நகருக்கருகாமையிலுள்ள விகாரியோ ஜெரல் என்ற ஏழைகள் வாழும் புற நகரில் நள்ளிரவுக்குச் சற்று முன் தங்கள் முகங்களை துணியால் மறைத்துக் கொண்டு 30 பேர் புகுந்தனர். அவர்களுடைய கைகளில், பிஸ்ரல் மற்றும் துப்பாக்கிகள் காணப்பட்டன.

தெருவால் சென்று கொண்டிருந்தவர்கள் மீது சரமாரியாகச் சுட்டனர்.

பலர் அந்த இடத்திலேயே விழுந்து மாண்டனர். மதுபானக் கடைக்குள் புகுந்த நால்வர் சுட்டதில் 7 பேர் சாய்ந்தனர். ஒரு குடிசைக்குள் புகுந்து சுட்டார்கள். 15 வயதுப் பெண் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் மரணமடைந்தனர். அருகேயுள்ள ஒரு சிறு ஒழுங்கையில் 6 பேரைச் சுட்டு வீழ்த்தினர்.

இரண்டு மணி நேரம் அவர்கள் நடத்திய வேட்டையில் மொத்தம் 21 பேர் சுருண்டு வீழ்ந்தனர். அத்தனை பேரும் அப்பாவிப் பொது மக்களே.

இவ்வாறு தொடர்ந்து பல சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்கின்றன. இதற்கான காரணம் என்ன என்று எவருக்கும் தெரியாது. விசாரணைகள் முற்றுப் பெறவில்லை. உத்தியோகப் பற்றற்ற விசாரணைகளின் படி இத்தகைய கொலைகளைப் புரிபவர்கள் வேறு குற்றவாளிகளல்ல- சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்புக்குரிய இராணுவப் பொலிஸ் பிரிவினரே என்று தெரிய வருகிறது.

உள்நாட்டில் போதை வஸ்துக் கடத்தல் பேர்வழிகள் அதிகம். இவர்களுடைய குழுவினர் முதல் நாள் இராணுவப் பொலிசைச் சேர்ந்த நால்வரைக் கொன்று விட்டனர். இதற்குப் பழிவாங்கும் பொருட்டே அடுத்த நாள் இரவு 21 பொது மக்களைக் கொன்று பழி தீர்த்து திருப்தியடைந்துள்ளனர் இந்த இராணுவப் பொலிசார்.


அமெரிக்க மனித உரிமைகளுக்கான “அமெரிக்கன் வோச்” என்ற அமைப்பு, “மேற்கு உலகில் பிரேஸிலின் பொலிஸ் படையே மிக மோசமான வன்முறையாளர்கள்” என்று வர்ணித்துள்ளது.

சா ஓ பௌலோ பிரதேசத்தில் மட்டும் கடந்த-வருடம் பொலிசார் 1,470 பேரைக் கொலை செய்துள்ளனர். சில மாதங்களுக்கு முன்னர் றியோ டி-ஜனரோ நகரில் இருப்பிடமற்று வீதிகளில் தூங்கிய 8 சிறுவர்களை இதே இராணுவ பொலிசார் சுட்டுக் கொன்றனர். இச் செய்தி உலகையே உலுக்கியது.

இராணுவப் பொலிசாரை கூலிக்காகக் கொலை செய்ய ஏவி விடுவோரும் உண்டு. தங்களுக்கு வேண்டாத ஒருவரை ஒழித்துக் கட்ட இந்த இராணுவப் பொலிசார் ஒருவரை விலை கொடுத்து வாங்கிவிடலாம்.

இவ்வாறு பொலிசார் மீது குற்றம் சுமத்தப்பட்ட ஆயிரக்கணக்கான சம்பவங்கள் மீது எதுவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

1964 முதல் 1985வரை சர்வாதிகார ஆட்சியிருந்த போது இராணுவப் பொலிசாருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இதிலிருந்தே இவர்களுடைய அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. இந்தப் படையில் தற்போது 29,800 பேர் உள்ளனர். இவர்கள் இராணுவத்துக்குத் தேவையானால் ஒத்தாசைகளும் வழங்குகின்றனர்.



விகாரியோ ஜெரல் என்ற இடத்தில் இராணுவப் பொலிசாரின் வேட்டையில் வீழ்ந்த உடல்கள். குழுமி நின்று காணும் பொதுமக்கள்.

# கையில் இல்லையா? சரி இன்று போய் நாளை வா!

## எங்கும் நிறைந்தது- என்றுமிருப்பது ஊழலோ - ஊழல்

-துரோணர்-



வறுமையில் வாடிய குசேலர் தன்னுடைய இளமைக்காலத் தோழனான கிருஷ்ணனைக் காணச் செல்கிறார். குழந்தைச் செல்வத்தை மட்டுமே குவித்து வைத்திருந்த குசேலர் குபேரனாக வாழும் கண்ணனை நாடிச் செல்லும் போது வெறுங்கையோடு போவதை விரும்பாத அவர் மனைவி, கொஞ்சம் அவலை ஒரு துணியில் கட்டிக் கொடுத்தனுப்புகிறாள். குடும்பத்தில் சூழ்ந்த வறுமை இருளை அகற்ற கண்ணனிடம் உதவி கோரியே குசேலர் செல்கிறார். எல்லா வளமும் வசதியும் பெற்ற கிருஷ்ண பரமாத்மாவை வெறுங் கையோடு போய்ப் பார்ப்பது இழுக்கு என்று பட்டமையினால் கையுறையாக ஏதாவது ஒன்றைக் கொண்டு போக வேண்டும் என்ற எண்ணத்தினால் அந்தப் பெறுமதியற்ற அவலை குசேலர் தம்முடன் கொண்டு செல்கிறார்.

ஏதாவது ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்றால், வேறொருவர் மூலமாக ஏதாவது நன்மை அடைய வேண்டுமானால்-அவர் சகல வசதியும் படைத்தவராக இருந்த போதிலும், அவருடைய தயவை நாடிச் செல்லும் போது ஏதாவது கையுடன் கொண்டு செல்வது பண்டு தொட்டு இன்றுவரை நடைமுறையிலிருந்து வரும் ஒரு பழக்கம். குசேலர்-கண்ணன் விடயத்திலும் இந்தக் கையுறையைக் காண்கிறோம்.

சக்கரவர்த்தியைப் பார்க்கச் செல்லும் மன்னர்களும் சிற்றரசர்களும் அவரை மகிழ்விக்க உவப்பான பண்டங்களைக் கொண்டு செல்வார்கள். உயர் நிலையிலுள்ள ஒருவரின் தயவு தேவைப்பட்டால் அவருடைய கவனத்தை ஈர்க்க உதவுவது கையுறை.

தமிழ் நாட்டின் தலை சிறந்த தலைவர்; பாரத நாட்டின் உயர் பதவியையே வகித்தவர்; அவரைப் பார்ப்பதற்கு முன்னமேயே காலம் குறித்து-அதே நேரத்தில் அன்னார் வாழும் இல்லம் சென்றோம். சென்னையில் தான் அவர் ஓய்விலிருந்தார்.

எங்களை வரவேற்க வாயில் கதவு திறக்கப்பட்டது. வரவேற்றவர் அந்தப் பிரமுகரின் குமாரத்திதான் என்பதை அறிந்து கொண்டோம். உள்ளே அனுமதித்தார். நாங்கள் இருவர்தான். என்னுடன் வந்த நண்பரின் கையில் ஒரு கமரா. என்னுடைய கையில் ஒரு சிறு-கோப்புகள் வைக்க ஏற்ற அட்டைப் பெட்டி.

அம்மையார் கதவண்டை இறங்கி எங்களுடன் வேறு யாராவது வந்துள்ளார்களா என்பதைப் பார்த்தார் போலும். நாங்கள் சென்ற வாடகை வண்டியும் எங்களை இறக்கி விட்டதும் பறந்து விட்டது. அம்மையார் எங்கள் இருவரையும் மிக உன்னிப்பாகப் பார்த்தார். எங்கள் கைகளில் இருந்தவற்றையும் பார்த்தார். அவர் எங்களை ஆராய்ந்து அளவிட்டமை எங்களுக்கே ஒருவகைக் கூச்சத்தை ஏற்படுத்தியது. அந்தப் பிரமுகரை- அம்மையாரின் தந்தையைப் பார்க்க எங்களை அனுமதிப்பதா இல்லையா என்று யோசித்தார் போலும்.

இத்தனைக்கும் ஒருவாரத்துக்கு முன்னமே சந்திக்கும் காலம் ஒதுக்கப் பட்டது. இருக்கைகள் இருந்தும் ‘இருங்கள்’ என்று ஒரு வார்த்தை கூடக் கூறாமல் மாடியிலிருக்கும் தந்தையிடம் சென்றார். எங்கள் வருகையை அறிவிப்பதற்காகத் தான்.

படியிறங்கி வந்தார். மேலே செல்ல வழியைக் காட்டினார். ஏதோ அநாகரிகப் பேர்வழிகளைக் கண்டது போல் எங்களை அந்த அம்மையார் பார்த்து முறைத்தமைக்கான காரணம் அப்போது எங்களுக்குத் தெரியாது.

அன்று மாலை ஒரு நண்பரைச் சந்தித்த போது காலையில் நடந்த சம்பவத்தை அவரிடம் கூறினோம். அவரும் ஒரு தமிழ் நாட்டுக்காரர்தான். அவர் பொறுமையாக எமது அனுபவத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர் இடைமறித்து “ஆமா நீங்க அங்கு போகும் போது ஒண்ணுமே கொண்டு போகல்லியா?” என்று வினவினார். “காமரா கொண்டு போனோம். ஆனால் அவர் படம் பிடிக்க மறுத்து விட்டார்” என்றோம்; நண்பர் பலமாகச் சிரித்தார். “என்னப்பா அந்தப் பிரமுகரைப் பார்க்கச் செல்லும் போது வெறுங்கையுடனா போனீர்கள்? அற்லீஸ்ட் ஒரு நல்ல ஆப்பிளோ அல்லது ஒரு எலுமிச்சம்பழம் கூடவா கிடைக்கவில்லை” என்று கோபப்பட்டார்.

“அப்பேற்பட்ட பெரிய மனிசன் உங்களைப் பார்த்துப் பேச அனுமதி அளித்ததே பெரிய காரியம். பழக்கடைப் பக்கம் போய் ஒரு இருபது ரூபா கொடுத்திருந்தீங்கன்னா ஆரஞ்ச், ஆப்பிள் இப்பிடிக் கொஞ்சம் பழம் போட்டு ஒரு கூடையை தந்திருப்பான். ஒரு இரண்டு ரூபா கொடுத்தால் ஒரு ரோஜா மாலையே தந்திருப்பான். அந்தப் பழக்கூடையை அந்த அம்மாளிடம் கொடுத்திருந்தீங்கன்னா அவங்க மனம் மகிழ்ந்திருப்பாங்க. மாலையோட மேலே போயிருந்தீங்கன்னா அந்தப் பெரிய மனிசனும் புன்சிரிப்போடு பேசியிருப்பார். மாலையைக் கழுத்தில போடேக்க ஒருவர் படம் பிடித்திருந்தா மறுப்புக்கே இடமில்லை” என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

இப்பழக்கம் பண்டு தொட்டு இன்று வரை தொடரும் தவிர்க்க முடியாத பழக்கம்.

அமைச்சர்களையோ ஆளுநர்களையோ அல்லது வேறு பிரமுகர்களையோ காணச் செல்லும் எவரும் வெறுங்கையோடு செல்வது அநாகரிகம் என்ற நிலை எங்கும் உள்ளது.

மேலதிகாரியை வீட்டில் கண்டு தனது உத்தியோகப் பதவி உயர்வு, அல்லது மாறுதல் கோரிக்கையுடன் செல்பவர் அந்த மேலதிகாரியின் இல்லம் சென்றால் வெறுங்கையுடன் செல்வது வழக்கமல்ல. மேலதிகாரியின் மனைவியைக் கண்டு தன்னுடன் கொண்டு சென்ற கருவாட்டு பார்சலையோ தயிர் முட்டியையோ கொடுத்து விட்டுத்தான் அவரைப் பார்க்க முடியும். கையுறை பெற்ற களிப்போடு அதிகாரியின் மனைவி நம்மைப் பற்றிய சிறிய சிபார்சையும் செய்து விட்டிருப்பார். இப்பொழுதெல்லாம் பண்டங்களை விட பணம் என்ற மாமுலாகி விட்டது.

இப்பொழுதெல்லாம் அலுவலகங்களில் ஏதாவது காரியம் நடைபெற வேண்டுமென்றால் மேலதிகாரியிடம் போக வேண்டியதில்லை. காரியத்தைக் கையாளும் ‘கிளார்க்’கை மனம் குளிர வைத்தால் காரியம் கைகூடும். இன்னும் கொஞ்சம் கீழிறங்கி குற்றேவல் புரியும் சிற்றூழியரைக் கவனித்தால் பல்லாண்டுகளாக காணாமற் போன கோப்பே கடுகதியில் ‘கிளார்க்’கரின் மேசைக்கு வந்து விடும்.

அன்று நாகரீகமான முறையில் ‘கையுறை’ என்றிருந்த பண்பு பின்னர் கைலஞ்சமாகி இன்று ஊழல் என்ற முடைநாற்றமெடுக்கும் பண்பற்ற சொல்லாக மாறிவிட்டது.

ஊழலை ஒழித்துக்கட்ட எத்தனையோ தனிச்சிறப்பு அமைப்புகளையும் உருவாக்கினார்கள். இவர்களின் விசாரணைகளுக்குள்ளும் இலஞ்சம் வந்து விழுந்து தன் ஆட்டத்தைப் போட்டு விடுகிறது.

இலஞ்சம்-ஊழல் என்பன வளர்முக நாடுகளில் மட்டும் தலைவிரித்தாடும் ஒரு பழக்கம் அல்ல. செல்வந்த நாடுகளையும் சுரண்டல் ஆட்கொண்டு விடுகிறது. இன்றைய உலகின் பொருள் வளத்திலும் தொழில் வளத்திலும் உச்சாணிக் கொம்பிலுள்ள ஜப்பானில் இலஞ்ச ஊழல், ஆட்சி பீடமேறியவர்களையே வசப்படுத்தியமையினால் ஆளும் கட்சி தோல்வி கண்டது.

ஏனைய செல்வந்த நாடுகள் பற்றி விபரிக்க வேண்டியதேயில்லை.

எந்தக் காரியத்தை முடிப்பதானாலும் கையுறையோடு செல்லும் ஒருவர் காத்திருக்காமல் காரியத்தை முடித்து விடுகிறார். அவருக்கு அலைச்சல் குறைவு.

கையுறை கொடுக்க வசதியற்றவர் தன் காரியத்தை முடிக்க, ‘இன்று போய் நாளை வா’ என்ற கீறல் விழுந்த இசைத் தட்டையே ஒவ்வொரு நாளும் கேட்க வேண்டும். ஆகவே வசதியற்றவரும் கூடக் கடன்பட்டாவது கைக்கூலி தயார் செய்து கொள்ளுகிறார்.

வேண்டா வழியில் வரும் பொருள் நிலைத்து நிற்பது கடினம். வாழ்வின் அடி வேரையே ஆட்டம் காண வைத்து விடும். நம்முடன் மட்டும் நீங்கிவிடாமல் நமது வம்சத்தையே பழி வாங்கி விடும்.

இந்த உண்மைகளை உணர்ந்தால்- உணரவைத்தால் இலஞ்சப் பேயை ஒழித்துக் கட்டலாமே தவிர வெறும் சட்ட திட்டங்களினால் ஒருபோதும் இதனை வேரறுக்க முடியாது.

அலசுவது – இராஜதந்திரி

# முதிர்ச்சியடைந்த ஜனநாயக அரசியல் அமைப்பின் பிரதிபலிப்பே சமஷ்டி ஆட்சி முறை!

ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க அண்மையில் இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பாக தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும் உரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

இந்த உரையில் "இனப்பிரச்னை எதுவும் இலங்கையில் காணப்படவில்லை. பயங்கரவாதமே நிலவுகின்றது. எனவே இதனை முறியடிக்கவே அரசு சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது." என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் இனவாதம் இல்லை என்று தாம் கூறியதை நிரூபிக்கும் வகையில் சில உதாரணங்களையும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். தமது முக்கிய செயலாளர்கள் தமிழர்களாக இருக்கின்றார்கள் என்றும், இது தவிர கொழும்பில் தமிழர்கள் தற்போது நிரம்பி வழிவதுடன், அவர்கள் சிங்கள மக்களோடு அன்னியோன்யமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் ஜனாதிபதி தாம் குறிப்பிட்ட உதாரணங்களில் கூறியிருந்தார்.

கடந்த மே மாதத்திலேயே திரு.விஜேதுங்க இலங்கையின் மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் அகால மறைவு, திரு. விஜேதுங்கவை பிரதமர் பதவியிலிருந்தும் ஜனாதிபதி பதவிக்கு உயர்த்தி விட்டிருந்தது.

ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டதையடுத்து, திரு.விஜேதுங்க மாகாண சபைத் தேர்தல்களை அறிவித்திருந்ததார். இத் தேர்தலுக்கான பிரசாரக்கூட்டங்களில் அவர் பங்குபற்றியிருந்த போது, நுவரெலியாவில் இடம் பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமெனவும், எனவே எவராவது தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கினால், அந்த ஒத்துழைப்பை ஒரு பெரும் உதவியாகவே தம்மால் கருத முடியும் எனவும் திரு: விஜேதுங்க தமது அப்பிரசார உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இன்று இதே ஜனாதிபதி விஜேதுங்க, இலங்கையில் இனப்பிரச்னை காணப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளதுடன், பயங்கரவாதப் பிரச்னையே தற்போது இலங்கையில் நிலவுவதாகவும் தெரிவித்துள்ளார்.


இலங்கையைப் பொறுத்தவரை இன்று வடக்கு-கிழக்குப் பகுதியில் காணப்படும் நிலைமை மிகவும் பாரதூரமானதாகவும், சிக்கல் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்னை காணப்படவில்லை என்றும், பயங்கரவாதமே நிலவுகின்றதென்றும் தெரிவித்துள்ள ஜனாதிபதி விஜேதுங்க, கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் கொண்டுள்ள நிலைப்பாடு குறித்தும், அவற்றின் கோரிக்கைகள் குறித்தும் எத்தகைய கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளார் என்பது புதிரானதாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்னை காணப்படவில்லையானால் 1958ம் ஆண்டிலும், 1977ம் ஆண்டிலும், பின்னர் 1983ம் ஆண்டிலும் தமிழ் பேசும் மக்கள் என்ன காரணங்களுக்காக சிங்கள மக்களால் தாக்கப்பட்டார்கள் என்ற கேள்விக்கு விடையளிக்க வேண்டியவராகவே ஜனாதிபதி விஜேதுங்க காணப்படுகின்றார்.

இலங்கையில் இதுவரை காலமும் ஆட்சிப் பொறுப்புக்களை ஏற்றிருந்த தலைவர்கள் அனைவரும் தமிழ் அரசியலாளர்களுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டவர்களாகவும், தமிழ் மக்களின் அரசியல் பிரச்னை தொடர்பாக பல்வேறு விடயங்களை ஆராய்ந்தவர்களாகவுமே விளங்கி யிருந்தனர்.


ஆனால் ஜனாதிபதி திரு.விஜேதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சிரேஷ்ட உறுப்பினர் என்ற ரீதியில் பிரதமராகவும், பின்னர் ஜனாதிபதியாகவும் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், தமிழ் அரசியலாளர்களுடன் அவர் எந்தவகையிலும் நேரடித் தொடர்புகளை பெரியளவில் வைத்துக் கொண்டவராகக் காணப்படவில்லை.




இது தவிர திரு. விஜேதுங்க தமது பாராளுமன்ற நாட்களில் கூட சிரேஷ்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தமிழர் பிரச்னையை விவாதிக்கும் சந்தர்ப்பங்களைக் கொண்டிருக்கவில்லை.

எனவே தமக்கு முந்திய தலைவர்களைப் போல தமிழர் பிரச்னையைக் கையாண்ட அனுபவம் போதியளவு இல்லாத காரணத்தினாலேயே ஜனாதிபதி விஜேதுங்க இலங்கையில் இனப்பிரச்னை காணப்படவில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளாரோ, என்றே எண்ணத் தோன்றுகின்றது.

## தமிழ்பேசும் மக்களின் கோரிக்கை உலக அரசியல் மாற்றங்களுக்கு அமைவானதாகவே காணப்படுகின்றது!



ஜனாதிபதி விஜேதுங்க இலங்கையில் இனப்பிரச்னை இல்லை என்று கூறலாம். ஆனால் இலங்கையில் வெவ்வேறு இனங்கள் இல்லை என்று கூறி விட முடியாது.

சிங்கள இனமே இலங்கையில் பெரும்பான்மையினமாகவும், மொழி, மத, பிரதேச ரீதியாக அதன் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வசதி வாய்ப்புக்களைப் பெருமளவில் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

எனவே தமிழ்பேசும் மக்களும் மொழிவாரியாகவும், பிரதேச வாரியாகவும் தமது தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நியாயமான விருப்பத்தை வெளியிட்ட போதே, பேரினவாதிகள் இக்கோரிக்கைகளை இனவாதக் கண் கொண்டு நோக்கினர்.

இதனையடுத்தே தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்பட்டதுடன் அக்கோரிக்கைகளை பலாத்காரமாக தட்டிக் கழிக்கும் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டிருந்தன.

இந்த பலாத்கார அணுகுமுறையின் விளைவாகவே தமிழருக்கெதிராக இனக்கலவரங்கள் இலங்கையில் வெடித்திருந்ததுடன், இன்று தமிழர் குறித்த பிரச்னை ஒரு பூதாகரமான தன்மையைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இரு வருடங்களுக்கு முன்னர் புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர். முனி கொழும்பில் விரிவுரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.

அவ்விரிவுரையில் பேராசிரியர் முனி பல்வேறு இனங்கள் வாழுகின்ற நாட்டில் இனப்பிரச்னைகள் தோன்றுவதற்கான காரணங்களை விளக்கியிருந்தார்.

பேராசிரியர் முனி கூறியது இதுதான்:

"ஒரு நாட்டில் காணப்படும் பெரும்பான்மையினம் அந்நாட்டில் தனது ஆதிக்கம் உறுதியாக நிலைபெற வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றது. எனவே சிறுபான்மையினங்கள் சம உரிமைகளை வலியுறுத்தி தமது தனித்துவத்தைப்பேணும் வகையில் கோரிக்கைகளை முன்வைக்கும் போது, பெரும்பான்மை இனம் அக்கோரிக்கைகள் குறித்து கலவரமடைய ஆரம்பிக்கின்றது.

"சிறுபான்மையினமொன்றுக்கு சம உரிமைகள, மற்றும் அதன் தனித்துவமான அடையாளங்களைப் பேணும் வாய்ப்புக்களை வழங்கும் பட்சத்தில், சிறுபான்மை இனத்தின் கரங்கள் ஓங்கி, அரசியல் ரீதியாக அது பலமடையலாம் என்ற அச்சம் பெரும்பான்மையினத்தவரிடையே தோன்றி விடுகின்றது. இதன்காரணமாகவே ஒரு நாட்டில் சிறுபான்மையினரின் கோரிக்கைகளைத் தட்டிக்கழிப்பதில் பெரும்பான்மை இனம் முனைப்பாக இருக்கின்றது" என்று பேராசிரியர் முனி தெரிவித்திருந்தார்.

பேராசிரியர் முனி மேலும் தமது விரிவுரையில், தமது நாடான இந்தியாவில் பெரும்பான்மை இந்துக்களும், முஸ்லிம் இனத்தவர்களும் அடிக்கடி மோதுவதற்கு முஸ்லிம்களின் எழுச்சி குறித்து இந்துக்கள் கொண்டுள்ள அச்சமே முக்கிய காரணமாக இருக்கின்றது எனவும் தெரிவித்திருந்தார்.

ஆயினும் இந்தியாவில் பல்வேறு இனங்கள், மற்றும் பல மதத்தவர்கள் வாழுகின்றபோதிலும், அவர்களின் தனித்துவத்தைப் பேணுவதற்கான நிர்வாக அமைப்பு ஒரு மேம்பட்ட தன்மையைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.

இந்தியாவில் பலமொழிகளைப் பேசும் பல்வேறு இனத்தவர்கள் காணப்படுகின்றனர். எனவே இந்தப் பல்லின மக்கள் அவர்கள் வாழுகின்ற பிரதேசங்களில் அவர்களுக்கென தனித்துவமான நிர்வாக அமைப்புக்களைக் கொண்டிருக்கக் கூடியதாகவே இந்தியாவின் நிர்வாகப் பரவலாக்கம் காணப்படுகின்றது.

இந்தியாவில் காணப்படும் ஒவ்வொரு மாநிலமும், நிர்வாகத்துறை, கல்வி, சட்டம்-ஒழுங்கு, சுகாதாரம், உல்லாசப் பயணத்துறை, நிதித்துறை ஆகியனவற்றைத் தத்தமக்கேயுரிய வகையில் கொண்டனவாகக் காணப்படுகின்றன.

இன-மத ரீதியிலான பதட்டங்கள் இந்தியாவில் அடிக்கடி தோன்றுகின்ற போதிலும் அங்கு காணப்படும் அடிப்படை நிர்வாக அமைப்பு அங்குள்ள பல்வேறு இனங்களினதும் மொழி, மத, கலாசார பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டதாகக் விளங்குகின்றது.

இன்று உலகில் ஜனநாயக ரீதியாகப் பெரிதும் வளர்ச்சி யடைந்துள்ள அமெரிக்கா, கனடா, சுவிற்சர்லாந்து மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகள், பிரிட்டன், அவுஸ்திரேலியா என்பனவும் நிர்வாக ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டவையாகவும், மத்திய அரசு என்ற அமைப்பின் கீழ் நிர்வாக அதிகாரத்தைக் குவித்து வைத்திருக்காமல் பிரதேச ரீதியாக அதிகாரப் பரவலாகத்தை மேற்கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

சோவியத் யூனியன் என்ற அமைப்பின்கீழ் ஒருங்கிணைந்திருந்த பதினைந்து சோவியத் மாநிலங்களும் இன்று தமக்கென கூடுதல் அதிகாரத்தை இனரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

கம்யூனிஸம் சோவியத் யூனியனில் நிலைகுலைந்ததையடுத்து சோவியத் யூனியன்அமைப்பில் இடம்பெற்றிருந்த ஒவ்வொரு குடியரசும் தற்போது தத்தமக்குரிய வகையில் நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளன.

இத்தகைய அதிகாரப் பரவலாக்கல் முறைகளைக்கூர்ந்து நோக்கும்போது இனரீதியாக, அல்லது பிரதேசரீதியாக சமஷ்டி முறையில் நிர்வாகப் பரவலாக்கல் இடம்பெற்றிருப்பதையே நன்கு அவதானிக்ககூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் சமஷ்டி அமைப்பென்பது நன்கு முதிர்ச்சியடைந்த ஜனநாயக ஆட்சிமுறையின் வெளிப்பாடாகவே காணப்படுகின்றது.

எனவே இலங்கையின் தமிழ் அரசியலாளர்கள், தமிழ்பேசும் மக்களின் தனித்துவத்தையும், பிரதேச பாரம் பரியத்தையும் பேணிப் பாதுகாக்கும் வகையிலேயே சமஷ்டி அமைப்பு முறையை பந்நெடுங் காலத்துக்கு முன்னரே கோரியிருந்தனர்.

இன்று உலகில் தமது தனித்துவத்தைக் கோரிப் போராட்டங்களை நடத்திய இனங்கள் தமக்குரிய ஆட்சியதிகாரங்களையும், சுயாட்சி அமைப்பு முறையையும் பெற்றுவரும் இத்தருணத்தில், இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் கோரிக்கைகள் எத்துணை அர்த்த புஷ்டியானவை என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கடந்த பல வருடங்களாகத் தமது பிரதேச, மற்றும் விடுதலைக்காகப் போராடிவந்த பாலஸ்தீன மக்கள் கூட தமது சொந்தக் காலில் நின்று தமக்குரிய சுயாட்சி அமைப்பை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பத்தைப் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.



தென்னாபிரிக்காவில் எதுவித உரிமையும் அற்றவர்களாக வாழ்ந்த கறுப்பின மக்கள் கூட வெகுவிரைவில் தமக்கென ஆட்சியதிகாரங்களைப் பெறவிருக்கின்றனர்.

ஆனால் இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் ' தமது அடிப்படைப் பிரச்சினைகள் தகுந்த முறையில் அணுகப்படாத நிலையில் காணப்படுகின்றனர்.

தமிழ்பேசும் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசமான இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் தமது தனித்துவங்களைப் பாதுகாக்கக்கூடிய நிர்வாக அமைப்பு முறையை வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் பெரும்பான்மையின ஆட்சியாளர்கள் தமிழ்பேசும் மக்களின் கோரிக்கைகளது உண்மைநிலையைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

இலங்கையில் சமஷ்டி அமைப்பு முறை மூலம் தமிழ்பேசும் இனம் தனது தனித்துவத்தைப் பாதுகாக்கும்போது, மறுபுறத்தே பெரும்பான்மையினமான சிங்கள இனமும் தனது தனித்துவத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையில் பெருமளவு வாய்ப்புக்களைப் பெற்றதாகவே இருக்கும்.

சிங்களமொழியும், மற்றும் அம்மொழி சார்ந்த பிரதேச பாரம்பரியங்கள் முழு அளவில் பாதுகாகக்கப்படுவதுடன், சிங்கள மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் விவசாய, கைத்தொழில் திட்டங்களும் எதுவித இடையூறுகளுக்கும் உட்படாத நிலையில் வளர்ச்சியடையும் ஆரோக்கியமான சூழ்நிலைகள் தோற்றம் பெறும்.

இலங்கையில் சமஷ்டி அமைப்பு முறை மூலம் இனங்களின் தனித்துவம் உறுதி செய்யப்பட்டு, ஒரு பொதுவான அரசியலமைப்பின் கீழ் அந்த இனங்கள் ஒன்றிணைக்கப்படும்போது, பிரிவினைவாதம், இனவாதம் என்ற பேச்சுக்கே இடமில்லாத நிலை ஏற்படும்.

எனவே ஆட்சியாளர்கள் குறுகிய அரசியல் கண்ணோட்டத்துடன் இனப்பிரச்னை எதுவும் நாட்டில் இல்லை என்று கூறுவதைவிடுத்து, இலங்கையில் தமிழ்ப்பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமைகளை, ஐக்கிய இலங்கை என்ற அமைப்பின் கீழ் அங்கீகரிக்க வேண்டும்.

ஏனெனில் இலங்கையின் தமிழ்பேசும் மக்களின் கோரிக்கைகளும் உலக அரசியல் அரங்கில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் மாற்றங்களுக்கு அமைவானதாகவே காணப்படுகின்றன.

# உங்கள் குழந்தையை வளர்க்க இதோ சில ஆலோசனைகள்!

ஒவ்வொரு தாய்மாரும் - ஏன் வயது வந்த பெண்களும் அறிந்திருக்க வேண்டிய விடயம் இது. தமக்கோ அல்லது பிறருக்கோ உதவக்கூடிய சில குறிப்புக்கள் இவை.

எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரியாக உடல் வளர்ச்சியோ அல்லது ஆரோக்கியமோ இல்லாத தால் நாம் குழந்தைகளின் எல்லா விதத் தன்மைகளுக்கும் ஏற்ப அவர்களை வளர்க்க வேண்டியது அவசியம்.

ஒரு குழந்தை ஒன்றரை வயதுக்குப் பின் ஒவ்வொரு நாளும் கொடுக்க வேண்டிய உணவு வகைகள்:

மாச்சத்துள்ள கிழங்கு வகை, முழுத்தானிய ரொட்டி, அல்லது பிஸ்கட் ஒரு நாளுக்கு 1-3 கொடுக்கலாம்.

2அல்லது 3 முறை பழங்கள் அல்லது பழரசம் கொடுக்க வேண்டும்.

விற்றமின் டி சத்துள்ளவற்றைத் தவறாமல் கொடுக்க வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை:**

குழந்தைகளுக்கு தினமும் கொடுக்க வேண்டிய ஒன்றரைப் பைந்த் பாலையும் எல்லாக் குழந்தைகளும் பூரணமாகக் குடிக்கமாட்டாது. அவ்வாறு குடிக்க மறுக்கும் குழந்தைகளுக்கு வேறு எவ்விதத்திலோ உடலினுள் செலுத்த வேண்டும். அதனால் பால் மாவினால் தயாரிக்கக்கூடிய உணவுப் பண்டங்களைத் தயாரித்துக் கொடுக்கலாம். உதாரணமாக புடிங், கஞ்சி. விரும்பி உண்ணும் குழந்தைகளுக்கோ அல்லது விரும்பி உண்ணாத குழந்தைகளுக்கோ புதியவகை உணவு ஒன்றை ஒரே நேரத்தில் முழுமையாகக் கொடுக்கக் கூடாது. படிப்படியாக, சிறிது சிறிதாகக் கூட்டிக் கொடுத்து அவர்களின் நிலமைகளை அவதானித்தே முழுமையாகக் கொடுக்கவும். குழந்தைகளுக்கு உலர்ந்த பழங்கள் கொடுக்கக் கூடாது. அவை குடலில் ஒட்டிக் கொள்ளும் தன்மை உள்ளதால் அவர்கள் வயிற்றினுள் பூச்சி உண்டாகலாம்.



- பால் ஒன்றரை பைந்த் அல்லது 2 பைந்த் கொடுக்க வேண்டும்.
- கோழி அல்லது மீன் ஒவ்வொரு நாளும் கொடுக்க வேண்டும்.
- இறைச்சிக்குப் பதிலாக முட்டை கொடுக்கலாம். அல்லது இரண்டும் கலந்து கொடுக்கலாம்.
- மஞ்சள் நிற அல்லது பச்சைக் காய்கறிகள்( வெண்டிக்காய், கீரை, கரட்)

இவை குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கும், எலும்பு, முடி வளர்ச்சி, கண்பார்வை போன்றவற்றிற்கு மிகவும் பயனளிக்கக் கூடியவை.

இவற்றை உடனுக்குடன் சமையல் செய்து கொடுத்தல் நன்று. சிலவற்றைப் பச்சையாகவே உண்ணக் கொடுக்கலாம்.

## குழந்தைச் சட்டை (Baby Shirt)


| | |
|---|---|
| மார்புச் சுற்றளவு | 20" |
| நீளம் | 12 1/2" |
| கழுத்தாழம் | 1 3/4" |
| கழுத்தகலம் | 1 3/4" |
| தோள் | 2 1/4" |
| தோள் சரிவு | 1/2" |
| முதலாவது குறுக்களவு | 4" |
| இரண்டாவது குறுக்களவு | 4 1/4" |
| பின் கழுத்தாழம் | 3/4" |


**முன் பக்கம் வரையும் முறை:** 12" நீளமும் மார்புச் சுற்றளவை 4ஆல் பிரித்து வரும் அளவான 5 3/4"த்தை அகலமாகவும் கொண்ட நீள் சதுரத்தினை வரைந்து A,B,C,D எனப் பெயரிடுக. A யில் இருந்து கழுத் தகலத்திற்காக 1 3/4" அளந்து E எனப் பெயரிட்டுக் கொள்க. இவ்வாறே கழுத்தாழத்திற்காகவும் A யில் இருந்து கீழ் நோக்கி 1 3/4" அளந்து F எனப் பெயரிட்டு E,F புள்ளிகளை வளைவான கோட்டினால் இணைத்து கழுத்தினைக் கீறிக் கொள்ளவும். E யில் இருந்து B யை நோக்கி 2 1/4" அளந்து G எனப் பெயரிடவும். G யில் இருந்து கீழ் நோக்கி 1/2" அளந்து H எனப் பெயரிட்டு E,H புள்ளிகளை நேர் கோட்டினால் இணைத்து தோள்ச் சரிவினைக் கீறவும். F இல் இருந்து முதலாவது குறுக்கள விற்காக 4" தள்ளி புள்ளியிட்டு I எனவும் பெயரிடுக. F இல் இருந்து கீழ் நோக்கி 1 1/2" பதித்து J எனப் புள்ளியிட்டு J யில் இருந்து இரண்டாவது குறுக்களவிற்காக 4 1/4" முதலாவது குறுக்களவிற்கு சமாந்தரமாக வரைந்து K எனவும் பெயரிடுக. பின் E இல் இருந்து கீழ் நோக்கி இரண்டு குறுக்களவுக்கும் செங்குத்தாக 5" நேர் கோடு வரைந்து L எனப் பெயரிடுக. L இன் ஊடாக A,B க்குச் சமாந்தரக் கோடு வரைந்து M,N எனப் பெயரிடுக. N இல் இருந்து மேல் நோக்கி 1" அளந்து O எனப் பெயரிட்டு பின் H,I,K,O ஆகிய புள்ளிகளை வளைவான கோட்டினால் இணைத்துக் கையினைக் கீறவும். D யில் இருந்து 1 1/2" வெளி நோக்கி அளந்து P எனப் புள்ளியிட்டு P யில் இருந்து மேல் நோக்கி 1/2" தள்ளி Q எனப் பெயரிட்டு C,D நேர்கோட்டை Q வுடன் வளைவாக இணைத்துக் கொள்ளவும்.

**பின்பக்கம் வரையும் முறை:** பின்பக்கத்திற்கு கழுத்தாழத்திற்காக 3/4" மாத்திரம் விட்டால் போதும். திறப்பிற்காகவும் 1/2" வெளிநோக்கி விடுதல் வேண்டும். மிகுதியாகவும் முன்பக்கத்தைப் போன்றே வரைந்து கொள்ளவும்.

தையல் விடுவெளிக்காக கீழ் மடிப்பிற்கு 1 1/2" மும் பக்கப் பொருத்திற்கு 3/4"மும் மிகுதியாவற்றிற்கும் 1/2"மும் விடுதல் வேண்டும்.

## நீங்களும் தைக்கலாம்





**திருமதி உமா மனோகரன் (பாரிஸ் ஈழநாடு)**

## லேடீஸ் ஸ்பெசல்

### அட்வைஸ்

## ஆணும், பெண்ணும் பாதி-பாதியாய்

கவலை மனதைக் கவ்வியிருந்தால், மூடி மறைத்து முனகிக் கொண்டிருப்பதால் தீர்ந்து விடாது. மாறாக மேலும் அதிகரிக்கும். மனம் திறந்து பேசி மற்றவரிடம் சொல்வதால் கவலை தீரும்.

**வேலையும் விளைவும்:**

விருப்பமில்லாத எதையேனும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தால் உடனே அதனைச் செய்துவிடுபட்டு விடுவதுதான் நல்லது. அது பற்றிச் சிந்தித்துக் கொண்டே இருப்பது, அந்தக் காரியத்தைச் செய்வதால் ஏற்படும் வேதனையை விட, அதிக வேதனை அளிப்பதாக இருக்கும்.

**நினைவில் இருக்கட்டும்!**

உள்ளத்தின் ஒரு மூலையில் ஓட்டையாக இருக்கும் இடத்தை இட்டு நிரப்பி வாழ்க்கையைப் பரிபூரண மானதாகச் செய்ய ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்ந்தால்தான் முடியும். ஒருவரின்றி மற்றவர்க்குப் பெருமை இல்லை என்பதை மறந்து விடக்கூடாது.

**அவரவர் கடமை:**

அவரவர்க்குரிய கடமையைச் சரிவரச் செய்து கணவனும், மனைவியும் ஒத்துழைத்தால் தான் மணவாழ்வு சிறக்கும். குடும்ப நலனுக்காக ஆணும் பெண்ணும் சரிசமமாகத் தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும். ■

## நல்ல கணவன்


நல்ல மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று பல்வேறு ஆலோசனைகளையும், கருத்துக் களையும் அறிஞர்களும், சமூக விஞ்ஞானிகளும் பத்திரிகை, வானொலி களூடாக முன்வைக்கிறார்களே தவிர நல்ல கணவனாயிருப்பது எப்படி என்று எவரும் கூறவில்லை.

மனைவி எப்படி இருக்க வேண்டும், எதைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் கணவன்மார்களே, நீங்களும் அதையே செய்யுங்கள். நீங்களும் நல்ல கணவனாயிருப்பீர்கள்.

புதிதாகப் பெயின்ட் அடிக்கப்பட்ட வீட்டில் உள்ள வாடையைப் போக்க, குவளைகளில் நீர் நிரப்பி அதில் வெங்காயத் துண்டுகளை நறுக்கிப் போடவும்.

வெந்நீரில் உப்பை விட்டுக் கரைத்து பிளாஸ்கில் விட்டு அரைமணிநேரம் ஊறிய பின் நல்ல நீரில் கழுவினால் பிளாஸ்க் நன்கு சுத்தமாகும்.


## வீட்டுக் குறிப்புகள்



வீட்டில் விருந்து முடிந்து, டைனிங் டேபிள் ஒரே அழுக்காகக் கறை படிந்துள்ளதா? அரை பக்கட் வெது வெதுப்பான நீர் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தேக்கரண்டி உப்பு, ஒரு தேக்கரண்டி சவர்க்காரத்தூள், ஒரு தேக்கரண்டி வெள்ளை வினிகர் கலந்து, பருத்தித்துணியில் நனைத்து டைனிங் டேபிளை அழுத்தமாகத் துடையுங்கள். கறை இருந்த இடம் தெரியாமல் போய், டேபிள் புதியது போல் பளபளப்பாகி விடும்.




சட்டை, கவுண் போன்றவற்றையெல்லாம் தைத்து முடித்த பின் துண்டுத் துணிகள் நிறைய மீதமாகி இருக்கிறதா? தூக்கியெறிந்து விடாமல், சதுரம், சதுரமாக ஒரே அளவாக வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். அந்தத் துண்டுகளை எல்லாம் இணைத்து உறை தைத்து, அதனுள் வெட்டி வீணாகிப் போன துணிகளை எல்லாம் போட்டு தலையணை செய்து விடுங்கள்.



எதிர்பாராத விதமாக முட்டை உடைந்து விட்டது. உடனடியாக முட்டையைச் சமைக்க வேண்டிய அவசியமும் இல்லை. என்ன செய்வது? கையைப் பிசைந்து கொண்டிராமல், உடைந்த முட்டையை ஒரு கிண்ணத்தில் ஊற்றிக் கொள்ளுங்கள். கொஞ்சம் உப்பைப் போட்டு ஃபிரிட்ஜில் வைத்து விடுங்கள். கெட்டுப்போகாமல் இருக்கும். தேவையான போது எடுத்து உபயோகிக்கலாம்.



வாணிஷ் போட்டு பொலிஷ் செய்யப்பட்ட மேசை மீதுமெழுகுவர்த்தி உருகி வழிந்திருக்கிறதா? அதை அப்படியே பிய்த்தெடுக்க முயற்சிக் காதீர்கள். மேசையின் வாணீஷ் உதிர்ந்து விடும். உருகி வடிந்த மெழுகின் மீது நீராவி படும்படி செய்யவும். மெழுகு உருக ஆரம்பிக்கும். மெழுகு உருக உருக, கத்தியைக் கொண்டு சுலபத்தில் நீக்கி விடலாம்.



சின்னதாக, பெட்டி மாதிரி இருக்கும் அறையை அழகு படுத்த விரும்பினால், அறைக்குத் தகுந்தபடி கதிரை, சோபாக்களைப் போடுங்கள். சோபாக்களில் பெரிய பெரிய குஷன்களைப் போட்டு, அறையை மேலும் சிறியதாகத் தோன்றும்படி செய்து விடாதீர்கள். அறைக்குப் பொருந்தக் கூடிய வகையில் சிறியதாக, வட்ட வடிவம், அரை நிலாவடிவம், ஓவல் வடிவம் போன்றவற்றில் ஒன்றைத் தேர்ந் தெடுத்துப் போடவும். இதனால் அறையின் தோற்றம் மாறி அழகாகத் தோற்றமளிக்கும்.

•

தரையில் எண்ணெய் சிந்தி பிசுக்கு ஏற்பட்டால் அதன்மேல் கோதுமைத் தவிட்டைத் தூவி அழுந்தத் துடைத்து விட்டால் தரை பிசுக்கு நீங்கி சுத்தமாகி விடும்.

•

ஒரு லீற்றர் நீரில் இரண்டு ஸ்பூன் கிளிசரின் கலந்து பட்டுப்புடவைகளை அலசி உலர்த்தினால், சுருக்கம் விழாமலும், நூல் இழைகள் விலகாமலும் இருக்கும்.

•

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

## சமைப்போம் சுவைப்போம்

### கத்தரிக்காய் குழம்பு

**தேவையானவை:**

நடுத்தரமான கத்தரிக்காய் -5
கடுகு அரைத்தது -1 மேசைக்கரண்டி
காய்ந்த மிளகாய் வறுத்து அரைத்தது - 10
மாசிக்கருவாடு அரைத்தது -2 மேசைக்கரண்டி
சிறிய வெங்காயம் அரிந்தது - 2 மேசைக்கரண்டி
உள்ளி அரைத்தது - 4 பல்லு
இஞ்சி அரைத்தது -3 சிறுதுண்டுகள்
ரம்பை இலை - சிறிதளவு
கறுவாப்பட்டை -2" துண்டு
வெந்தயம் - 1/4தேக்கரண்டி
வினிகர் -3 மேசைக்கரண்டி
எண்ணெய் - போதியளவு
தேங்காய் பிழிந்த பால் - 1/12கப்
மஞ்சள் தூள் - சிறிதளவு.

**செய்முறை:**

கத்தரிக்காயைக் கழுவி நீளவாக்காகச் சிறிய துண்டங்களாக்கவும். உப்பு, மஞ்சள் தூள் கலந்த கலவையை கத்தரிக்காய் மீதுதடவி, ஒரு பாத்திரத்தில் எண்ணெய் இட்டுச் சூடானதும் அக் கத்தரிக்காயை இட்டுப் பொன்னிறமாகப் பொரிக்கவும். வேறொரு பாத்திரத்தில், தேங்காய் பிழிந்த பாலையும், ஏனைய மளிகைப் பொருட்கள் அனைத்தையும் இட்டு நன்றாகக் கொதிக்க விடவும். குழம்பு தடிப்பானதும் பொரித்த கத்தரிக்காயை அதனுள் இட்டுக் குறைந்த வெப்பத்தில் சில நிமிடங்களுக்கு வேக விடவும். அடிப்பிடிக்கா வண்ணம் கரண்டியால் கலக்கிக் கொண்டே இருக்கவும். வெந்து வாசனை வந்ததும் இறக்கி வைக்கவும்.


### பால் கொழுக்கட்டை

**தேவையானவை:**

| | |
|---|---|
| புழுங்கல் அரிசி | - 1/2 கிலோ |
| பால் | - 1/2 லீற்றர் |
| சிறு பயறு | - 100 கிராம் |
| வெல்லம் | - 500 கிராம் |
| தேங்காய் | - 1 |
| முந்திரிப் பருப்பு | - 50கிராம் |
| ஏலக்காய் | - 4 |
| வெண்ணெய் | - சிறிதளவு. |

**செய்முறை:**

அரிசியை 2 மணி நேரம் ஊற வைக்கவும். பின் அதைச் சுத்தம் செய்து அரைத்து எடுக்கவும். ஒரு வெள்ளைத் துணியில் மாவைச் சிறிது சிறிதாக உருட்டிப் போடவும். அதில் சிறிது மாவை எடுத்துக் கொள்ளவும். வாயகன்ற பாத்திரத்தை அடுப்பில் வைத்து சிறு பயறைச்சுத்தம் செய்து தேவையான தண்ணீரை ஊற்றி வைக்கவும். தேங்காயைத் துருவிக் கொள்ளவும். முந்திரிப்பருப்பை வெண்ணெயில் வறுத்தெடுக்கவும். பாலை நன்றாகக் காய்ச்சவும். ஏலக்காயைப் பவுடராக்கிக் கொள்ளவும். உருட்டிய உருண்டைகளை ஸ்ரீமரில் வைத்துஅவித்து எடுக்கவும். சிறு பயறு நன்றாக வெந்த பிறகு எடுத்து வைத்துள்ளமாவை கரைத்து அதில் ஊற்றி 10 நிமிடம் கிளற வேண்டும். பிறகு வேக வைத்த கொழுக்கட்டையில் பருப்பு ஏலக்காய் போட்டுப் பாலை ஊற்றி வெல்லத்தைத் தூள் செய்து அதில் போட்டு 5 நிமிடம் கிண்டி இறக்கவும். ஆறிய பின் பரிமாறவும்.



# மூழ்கிய கப்பலுக்குள் ஆவிகள் நாட்டியமாம் சுழியோடியுடன் மண்டை ஓடுகள் நடனம்.

**அ**து இரண்டாம் உலகப் போர் உக்கிரமாய் நடந்த காலம்.

1944ம் ஆண்டு, ஒக்டோபர் 28ம் திகதி, அமெரிக்க விமானம் ஒன்று குண்டுமாரி பொழிந்தது.

ஜெர்மனிக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் குண்டுகளால் துளைக்கப்பட்டு கடலில் மூழ்கியது.

மூழ்கிய கப்பலுக்குள் ஜெர்மன் நாட்டு உளவாளிகள் நூற்றுக்கு மேற்பட்டோர் இருந்தனர்.

கப்பல் மூழ்கடிக்கப்பட்டு அரை நூற்றாண்டுகள் ஆகின்றன.

பசுபிக் கடலில் மூழ்கிய கப்பல் கிடப்பதை அறிந்து சுழியோடி ஒருவர் ஆய்வு செய்யச் சென்றுள்ளார்.

கெவின் ஹோாட்டர் எனப்படும் அந்தச் சுழியோடி வெளியிட்டுள்ள தகவல்கள் வியக்கவைக்கின்றன.

மூழ்கிய கப்பலைச் சுற்றி பொசுபரசு எனப்படும் எரியம் காணப்படுகிறது. அதனால் கப்பல் ஒளிப்பிழம்பு போல் தென்படுகிறது.

கப்பலின் உடைவுகள் சிதைவுகள் விலக்கி உள்ளே செல்ல முயன்றேன்.

மரண ஓலங்கள் என் செவியில் கேட்டன.

பொசுபரசு எரியத்தின் வெளிச்சத்தில் நூற்றுக்கணக்கான மண்டை ஓடுகள் கண்ணுக்குத் தெரிந்தன.

கண்ணுக்குத் தெரிந்தன என்று கூறுவதோடு மட்டும் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை.

"அந்த மண்டை ஓடுகள் என்னைச் சுற்றி வந்து நடனமாடத் தொடங்கி விட்டன" என்றும் சொல்லியிருக்கிறார்.

மேலும் சுழியோடி சொல்வதைக் கேளுங்கள்:

நான் சில நிமிடங்கள் அமைதியாக நின்றேன். அந்த மண்டை ஓடுகளும் ஒருவாறு அமைதி அடைந்து அந்தந்த இடங்களில் அமர்வதைக் கண்டேன். நீண்ட காலம் அமைதியாக இருந்த இடத்தில் நான் சென்ற போது ஏற்பட்ட சலனத்தினால் நீர் தழும்பியது. அதனால் மண்டை ஓடுகள் நிலை பெயர்ந்திருக்கலாம் என்று எண்ணினேன். ஆனால் என் காதுகளுக்குள் கேட்ட அவல ஓலங்கள்? இன்று நினைத்தாலும் குலை நடுக்கம் ஏற்படுகிறது. இனிமேல் என் ஜென்மத்துக்கும் இத்தகைய தொரு பணிக்கு நான் நிச்சயமாகச் செல்ல மாட்டேன்."

"அந்த மண்டை ஓடுகளுக்குள்ளிருந்து கேட்ட அவல ஓலங்கள் இன்றும் என் காதுகளில் ஒலித்தவண்ணம் கருத்தையும் கலக்கி வருகிறது. எனது இறப்புவரை இத்தகைய ஒலியை நான் மறக்க மாட்டேன். எனது முடிவுவரை இந்த இரைச்சல் என்னைப் பயமுறத்திய வண்ணமே இருக்கும்".

சுழியோடியான கெவின் தன்னுடைய 40 அடி நீளமான இயந்திரப்படகில் வைத்து செய்தியாளர்களைச் சந்தித்து இத்தகவல்களைக் கூறினார். ■

**தகவல் பெட்டி**

# குளித்து முடித்து ஒரு திருட்டு!

## விசித்திரத் திருடர்கள்- வாங்கியதோ விளையாட்டு பொம்மைகள்




தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக். அங்குள்ள செல்வந்தர் வீடுகளில் திடீர் திடீரென்று திருட்டுக்கள் நடக்க ஆரம்பித்தன.

பொலிசார் விசாரித்தார்கள். ஒரு துப்புக்கூடக் கிடைக்கவில்லை.

செல்வந்தர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

பொலிசார் முடியைப் பிய்க்காத குறையாக குழம்பிக் கொண்டிருந்தனர்.

குழப்பங்களுக்கு விடை தெரியும் அந்த நாள் வந்தது.

அன்று அவசரமாக கழிவறைக் குச் சென்றார் ஒரு பெண்மணி.

சென்றவர் அவலக்குரல் எழுப்பி அதிர்ச்சியால் விறைத்துப் போனார்.

கழிவறைத் துவாரத்தில் இருந்து ஒரு தலை மேலே வந்தது. பின்னர் உடல் வந்தது.

14 வயதுள்ள சிறுவன் ஒருவன் தோன்றினான்.

பெண்மணி போட்ட கூச்சலால் சிறுவன் மாட்டிக் கொண்டான்.

தரும அடி கொடுத்து விசாரித்தபோது உண்மைகள் வெளியே வந்தன.

துப்புக் கிடைக்காத திருட்டுக்களின் மர்மம் துலங்கியது.

தமது உடம்பை ரப்பராக மாற்றி கழிவறைக் குழாய்களுள் முதலில் புகுந்து விடுவார்கள்.

பின்னர் கழிவறைக்குள் சென்றதும் அங்குள்ள தண்ணீரில் குளித்து தம்மைச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள்.

பின்னர் வீட்டின் அறைகளுக்குள் புகுந்து கை வரிசையைக் காட்டுவார்கள்.

இவ்வாறு சாகசத் திருட்டில் ஈடுபட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள்தான்.

முதலில் இவர்கள் சொன்னதை பொலிஸ் நம்பவில்லை. பின்னர் தம் உடலை வளைத்து அவர்கள் செய்து காட்டினார்கள்.

நேரில் கண்டவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

இவ்வாறு கழிவறைத் துவாரங்கள் மூலம் உல்லாச ஹோட்டல்கள், உணவு விடுதிகள், செல்வந்தர் இல்லங்கள் என்று அந்தச் சிறுவர்கள் சுருட்டிய தொகையின் பெறுமதி 6000 அமெரிக்க டொலர்கள்.

சுருட்டிய பணத்தில் அவர்கள் ஒன்றும் சொந்தமாக வீடு கட்டவில்லை. வியாபாரம் தொடங்கவில்லை.

வீடியோ விளையாட்டுக்கள், பொம்மைகள் வாங்குதல், விலையுயர்ந்த ஏனைய விளையாட்டுக்கருவிகள் வாங்குதல் என்பவற்றில் செலவிட்டார்களாம்.

விளையாட்டுத் திருடர்கள்!

# அட.. இதுவும் கிழங்குதான்!

பிரிட்டிஷ் எயார்லைன்ஸ் விமானப்பணிப் பெண்ணின் கையில் தென்படும் இந்தப் பொருள் அந்த விமானத்தில் பயணம் செய்தது. அதற்கு மிக முக்கியமான பிரமுகருக்கு அளிக்கப்படும் அந்தஸ்து அளிக்கப்பட்டது. விமானத்தின் முதல் வகுப்புப் பிரயாணிகளுக்கான இருக்கையில் முதல் வரிசையில் இடம் கொடுக்கப்பட்டு, லண்டன் விமான நிலையத்தில் இறக்கப்பட்டது.

தென் ஆபிரிக்காவில் ஒரு பண்ணையில் விளைந்த உருளைக் கிழங்குக்குத்தான் இத்தனை மவுசு. 30 இறாத்தல் எடை கொண்ட இந்த உருளைக்கிழங்குக்கு கின்னஸ் சாதனைகள் வரிசையில் இடம் தேடித்தரவே விமானப் பணி மங்கை எலிஸபத் வில்சன் இத்தனை மதிப்பினைத் தருகிறார்.




# உதட்டாலே ஊட்டுதல்

5 வயது சிறுவனின் வாயிலுள்ள விதையை கவரத் துடிக்கிறது குருவி. தனது செல்லக் குருவிக்கு உதட்டிலே விதை ஏந்தி உண்ணக் கொடுப்பதில் குதூகலமடையும் சிறுவன்.

சுவிட்ஸர்லாந்தில் கிளிக் செய்யப்பட்ட காட்சி இது.



## அசத்துகிறார் ஐஸ்வர்யா!

## அரிய சந்தர்ப்பம்!

## காதோடு சொல்லுகிறோம்

★ 'ஜென்டில்மென்' நாயகனை தனக்கொரு படம் இயக்கச் சொல்லி பானு நடிகை தினமும் தொல்லை கொடுக்கிறாராம். எந்தவொரு நடிகர் முன்னுக்கு வந்தாலும் அவருக்கு தொல்லை கொடுப்பதே அவரது தொழில் என்கிறது சினிமா வட்டாரம்.

★ தாயாருக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யத்தான் ஐஸ் நடிகை அதிரடியாக டும் டும் செய்தியை வெளியிட்டாராம். அம்மா உடைந்து போயிருக்கிறார். பாட்டியோ தலையில் அடித்து ஒப்பாரி வைக்கிறார். ஆனால் ஐஸ் நடிகையோ ஜாலி மூடடில் விசிட் அடித்துத் திரிகிறார்.

★ தெலுங்குப் படவுலகில் கவர்ச்சிப் புயலான நடிகை ஒருவர் தமிழ் படவுலகப் பக்கம் வரக்கூடும் என்று பேச்சு அடிபடுகிறது. அதிலிருந்து தற்போது தம்மைவிட்டால் கவர்ச்சிக்கு ஆள் இல்லை என்று நெஞ்சு நிமிர்த்தும் நாயகிகள் வட்டாரம் மூட் அவுட் ஆகியிருக்கிறதாம்.

★ பெரிய நடிகர்களோடு நடித்தால் பெரிய நடிகையாகி விடலாம் என்று கனவு கண்டவர் ஹீரமான உயர நடிகை. மணி இயக்குநர் இயக்கும் படத்தில் பந்தா காட்டப் பார்த்தாராம். மணி இயக்குநர் இடம் கொடுக்கவில்லை. அதனால் மனம் வெறுத்துப் போய் அவர்களுக்கு மரியாதை தெரியாது என்று உயர நடிகை புலம்பித் திரிகிறாராம்.

★ துணை நடிகைகள் சிலரை குத்தகை எழுதியது போல எடுத்துக் கொள்ளும் இயக்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் விசயம் சினிமா உலகில் பகிரங்க இரகசியம். பாதிக்கப்பட்டவர்கள் யாரிடம் போய் முறையிட்டாலும் பரிகாரம் கிடையாதாம்!

★ ஆட்ட சாந்தி நடித்த திரைப்படம் ஒன்றுக்கு தணிக்கைச் சபை தடை போட்டு விட்டது. கதை காட்டுக்குள் என்பதால் காட்டக்கூடியவற்றை எல்லாம் கமரா கவ்விக் கொண்டதால் தடை விழுந்து விட்டது. சாந்த நடிகை தணிக்கைக் குழுவை திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறாராம்.

★ செண்பக நடிகைக்கு படிக்கும் போது வக்கீலாகும் ஆசை இருந்ததாம். அந்த ஆசை நிராசையாகாமல் இருக்க வக்கீல் வேடம் தருமாறு தனக்கு வேண்டிய தயாரிப்பாளர்களிடம் கேட்டு அடம்பிடிக்கிறாராம்.

## மறவன்



## சினிமா விமர்சனம்

சின்னத்தம்பிக்குப் பிறகு ராசியான ஜோடி என்று புகழ் எடுத்த பிரபு-குஷ்பு ஜோடி புகுந்து விளையாடியிருக்கிறது.

கவர்ச்சி நடிகைகள் வேலைகாலி இல்லை என்று ஓட வேண்டியதுதான். அந்தளவுக்கு குஷ்பு பாக்கி வைக்காமல் தன்னிடமுள்ள கவர்ச்சியை செலவு செய்திருக்கிறார். தொய்ந்து வரும் மார்கட்டை தூக்கி நிறுத்தும் முயற்சியாகவும் இருக்கலாம்.

இன்ஸ்பெக்டர் வேடம் பிரபுவுக்கு. அல்வா சாப்பிட்ட மாதிரி. சண்டைக் காட்சிகளிலும் வழக்கம் போல் தான் கிளப்புகிறார்.

நெப்போலியன் அட்டகாச வில்லன். பண்ணையார் கொடுமைகளை சற்று வித்தியாசமாக சித்தரித்துள்ளார் இயக்குநர்.

தாயின் பிணத்தை கோவிலில் புதைக்க நினைக்கும் வில்லனின் விபரீத ஆசையை வைத்து சம காலப் பிரச்சனையை கொஞ்சம் தொட்டிருக்கிறார்கள்.

இயக்கம் மனோஜ் குமார். இசை-இளையராஜா

தமிழ் நாட்டில் வசூலுக்குப் பாதகம் இல்லாமல் ஓடும் படம். நம்மூர் சின்னத் திரைகளிலும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது வீடியோ உபயம்.

பிரபுவுக்கு தமிழ்நாட்டில் மட்டும் நாணகாரிநதிலும் மேற்பட்ட ரசிகர் மன்றங்கள் இருக்கின்றது குறிப்பாக நாகர்கோவில் மாவட்டத்தில் மட்டும் நானூறு ரசிகர் மன்றங்கள் இருக்கின்றனதாம்.



## மினி சினி

★ பிரபுவின் நூறாவது படமான ராஜகுமாரனில் நடிப்பதற்கு முதலில் ரேவதியை கேட்டிருந்தனர். ரேவதியின் தேதிகள் ஒத்துவராததால், நதியாவை ஒப்பந்தம் செய்தனர்.

★ ஜூனியர் விகடனில் வெளிவந்த சீவலப்பேரி பாண்டி கதையைப் படமாக்கப் போவதாக முன்னர் பேசப்பட்டது. தற்போது இப்படத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படப் போகிறது என்கிறார் இயக்குநர் ராஜேஷ்வர்.

★ கோகுலம், நான் பேச நினைப்பதெல்லாம் ஆகிய படங்களின் வெற்றியால் மகிழ்ச்சியோடிருக்கும் விக்கிரமன், அடுத்து ஆர்.பி சௌத்திரிக்காக ஒரு படமும், சத்திய ஜோதி பிலிம்ஸிற்காக ஒரு படமும் இயக்கவுள்ளார். மிகப் பிரம்மாண்டமான பொருட் செலவில் இப்படங்கள் வெளிவரப் போகின்றன.

★ சிலம்பரசன் நடிக்கும் சாரங் பாபு படத்தில் கௌரவ வேடமொன்றில் டி. ராஜேந்தர் நடிக்கவுள்ளார். இப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

★ மணி வண்ணன் இயக்கத்தில் வெளிவந்த தர்ஜா தொங்கா என்னும் தெலுங்குப் படத்திற்கு கதை எழுதியுள்ள சத்தியராஜ், மீண்டும் அடுத்த வருட ஆரம்பத்தில் கதை, வசனம் எழுதி ஒரு படத்தை இயக்கவுள்ளார்.

★ வில்லனாக அறிமுகமாகி, சில படங்களில் கதாநாயகனாக நடித்தவர் ஆனந்தராஜ். அவர் கதாநாயகனாக நடித்த படங்கள் தோல்வியடைந்ததால் தற்போது சில படங்களில் வில்லனாக நடித்து வருகிறார். சரண்யா ஆர்ட்ஸ் தயாரிக்கும் சக்திவேல் என்னும் படத்தில் மீண்டும் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

★ ஜென்ரில்மன் பட இயக்குநர் ஷங்கர் அடுத்து, பிரபுதேவா கதாநாயகனாக நடிக்க காதலன் என்னும் படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தையும் கே.ரி. குஞ்சுமோன் தயாரிக்கிறார்.

★ முற்றுகை படத்திற்கு முன்னர் ஆபாவாணன் தயாரித்து, பாதியிலே நின்று போன 'ஒரு நதியின் கதை' மீண்டும் தொடங்கப்படவுள்ளது. இப்படத்தில் மோகன், அருண்பாண்டியன், ராதிகா ஆகியோர் நடிக்கின்றனர்.

★ மம்மூட்டி, மதுபாலா நடித்த மலையாளப்படமொன்று தமிழில் ஆகிய எனும் பெயரில் தமிழுக்கு மொழி மாற்றப்படவுள்ளது. இப்படத்தில் பிரபல ஹிந்தி நடிகர் புனீத்குமார் வில்லனாக நடிக்கிறார்.

★ திருடா திருடா படத்தில் இடம் பெறும் தீ தீ என்ற பாடலை கேரலின் என்னும் சீனப் பெண் ஒருவர் பாடியுள்ளார்.



கமலுக்கு...



பயிற்சியே பலம் -



## சரியான முடிவு

வில்லனாக நடித்து கதாநாயகனாக உயர்ந்து மூலம் நடைபாதை ஆனந்தராஜ்.
மீண்டும் வில்லனாக நடிக்கத் தொடங்கியிருக்கிறார்.
கதாநாயகனாக மட்டும் நடிப்பேன் என்று அடம் பிடிக்காமல் மீண்டும் வில்லனாக மாறியிருப்பதால் வில்லன் பஞ்சம் தீரும். அதோடு நாலு காசும் மிஞ்சும். புத்திசாலி ராஜ்.

## சரத் மாறுபட்ட வேடத்தில்!

மீண்டும் மாறுபட்ட பாத்திரம் ஒன்று சரத்குமாருக்குத் தேடி வந்திருக்கிறது.
லட்சுமி மேக்சான் தயாரிக்கும் புதிய படம் அரண்மனைக் காவலன்.
கடந்த இரண்டாம் தேதி பாடல் பதிவுடன் படப்பிடிப்பு ஆரம்பமாகி விட்டது. பம்பாய்.
டில்லி என்று பறந்து பறந்து காட்சிகளை படமாக்கப் போகிறார்கள்.
முக்கிய வேடத்தில் விசு நடிக்கிறார்.
கோட்டை வாசல் படத்தை இயக்கிய செல்வ விநாயகம் அரண்மனைக் காவலனையும் இயக்கப் போகிறார்.

# சினி விசிட்

## கமலும் ஒன்றுதான் கந்தசாமியும் ஒன்றுதான்!

'உழைப்பாளி' படத்தில் தன்னையே உரித்து நடித்திருந்தும் கூட நம்பர் ஒன் நடிகையாக முடியவில்லை என்பதுதான் ரோஜாவின் ஏக்கம்.
குஷ்புவுக்குப் பின் யாருமே தனிக்காட்டு ராணியாக முடியவில்லை.
ரோஜா, சுகன்யா, பானுப்பிரியா, மீனா, சிவரஞ்சனி - இப்படிப் போட்டியிடுவோர் பட்டியல் நீண்டாலும் இரசிகர்கள் மத்தியில் பேராதரவு பெற்ற வேட்பாளர் - யாருமே இல்லை.
போதாக்குறைக்கு புது நடிகைகள் களத்தில் குதிக்கிறார்கள். அதுவும் வயிற்றெரிச்சல்தான்.
இதற்கிடையே சமீபத்தில் ரோஜா கொடுத்திருந்த பேட்டி ஒன்று சில சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.
"எனக்கு கமலும் ஒன்றுதான் கந்தசாமியும் ஒன்றுதான் எல்லோரோடும் சேர்ந்து நடிப்பேன்" என்று ரோஜா பொரிந்து தள்ளியிருந்தார்.
கமல் ரசிகர்கள் ரோஜாவை பிய்த்தெறியும் கோபத்தில் இருக்கிறார்களாம்.

## கலக்கிவரும் கல்நாய்க்

சஞ்சய்தத் சிறை மீண்டபின்பும் புகழ் மங்கவில்லை.
புகழ் போய்விடும் என்று பேசியவர்கள்தான் காணாமல் போய் இருக்கிறார்கள்.
தற்போது இந்தியில் வசூலில் கலக்கிவரும் படம் கல்நாய்க்.
கறுப்புச் சந்தையில் இப்போதும் டிக்கட் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.
சஞ்சய் சந்தோசத்தில் இருக்கிறார்.



## அழகே மூலதனம்

சிவரஞ்சனிக்கு சினிமா உலகம் சுத்தமாகப் புரிந்து விட்டது.
பெரிய நடிகர்களோடு நடித்தால் மட்டும் போதாது. திரையைத் திகைக்க வைக்க வேண்டும். அதற்கு அழகுகளை மூலதனமாக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டாராம்.

## ஆளுமா புதிய பூ

'ஜென்டில்மேன்' வெற்றிப் படத்தைத் தயாரித்த குஞ்சுமோன் தயாரிக்கும் படம் சிந்து நதிப் பூவே. கதாநாயகியும் புதிய பூ. அதாவது புதிய முகம். பெயர் ராஜகுமாரி. அறிமுகமாகும் இந்த ராஜகுமாரி திரையுலகை ஆளப்போகிறாரா என்பதை இருந்துதான் பார்க்க வேண்டும்.





## ... வெட்கம்!

## கழுத்தை நீட்டிய காளை!

அவளோ ஆடுமேய்க்கும் அழகு மங்கை. அவள் மீது காதல் கொண்டான் ராசய்யா என்ற காளை.
ஒரு நாள், ஆடுகளின் கழுத்தில் அடையாளம் காண கயிறு கட்டிக் கொண்டிருக்கிறாள் அந்த மங்கை. தானும் சென்று கழுத்தை நீட்டுகிறான் காளை.
அவளும் கயிற்றை கட்டி விடுகிறாள். வலியச் சென்று கழுத்தை நீட்டியவன் "எதற்காக கட்டினாய்?" என்று வம்புக்கிழுக்கிறான்.
அவளோ: 'அதுக்குக்காகத்தான்' என்று காதலை நினைத்து பதில் சொல்லுகிறாள்.
இப்படியொரு காட்சியை 'சின்னஜமீன்' படத்திற்காக படமாக்கியிருக்கிறார்கள்.
கார்த்திக், சுகன்யா, வினிதா, கவுண்டமணி, செந்தில் ஆகியோரின் நடிப்பில் வேகமாய் வளர்கிறது சின்ன ஜமீன். இயக்கம் - ராஜ்கபூர் இசை - இளையராஜா.





## பிழைக்கத் தெரிந்த பிரியா ராமன்

அசப்பில் முன்னாள் நடிகை சீதாவைப் போல இருக்கிறார் 'வள்ளி' பட நாயகி பிரியா ராமன்.
டெல்லியில் பிறந்தவர். இவரது தந்தை ராமன் ஐக்கிய நாடுகள் சபை அலுவலக அதிகாரியாக இருக்கிறார்.
தந்தையாருக்கு வேலை மாற்றம். சென்னையில் வேலை. படத்தில் நடிக்கும் ஆசை இருந்தது. பாரதிராஜாவை பார்த்திருக்கிறார். அவருக்கும் பிரியாவைப் பிடித்து விட்டது.
இதே நேரத்தில் வள்ளி படத்திற்கு ரஜனி புது நாயகி தேடினார். பாரதிராஜா பிரியாவை சிபாரிசு செய்திருக்கிறார்.
ரஜனியும் 'ஓகே' சொன்னதால் வள்ளியில் நடித்து இன்று பெரும் புகழ் பெற்றுவிட்டார்.
முதல்படமே சூப்பர் ஸ்டாரின் படமாக அமைந்ததில் சந்தோசப் படுகிறார்.
கவர்ச்சியாக நடிக்கத் தயார் என்று பேட்டி ஒன்றில் கூறி இருக்கிறார். பிரியாராமன் பிழைக்கத் தெரிந்தவர்.

## விரசங்கள் இல்லை வெற்றி நிச்சயம்

பெரிய நடிகர்கள் கிடையாது. துள்ளு நடனங்கள் கிடையாது. ஆனால் வெற்றிப் படமாகும் நம்பிக்கை இருக்கிறது.
இப்படிச் சொல்லியிருக்கிறார் ஒரு ஆச்சரிய இயக்குநர். அவர் பெயர் ஜேக்கப் பரிஸ்.
அன்புள்ள தங்கச்சி என்றொரு படத்தை முற்றிலும் புதுமுகங்களை வைத்து வித்தியாசமாய் இயக்கி வருகிறார்.
அவரது தன்னம்பிக்கையைப் பாராட்டலாம்.



... வில்லன் ஜாக்கி ஷெரப்

# சந்திரனின் குளம்

நமக்கு ஒருவர் தீங்கு இழைத்தார் என்றால் உடனே நாம் அவரை பழிவாங்க ஆத்திரமும், கோபமும் கொள்வோம். பழிவாங்க முயல்வோம். ஆனால், பழிவாங்க முடியாது தோற்று அவமானம் அடைவோம். இதற்குக் காரணம் எதிரியின் பலம் என்ன என்பதை நாம் அறியாததுதான். நம்மைக் காட்டிலும் பலமானவர்களை எதிர் நின்று தாக்கக்கூடாது. அதனால் அழிவே நேரும். அதனால் மற்றொரு வலியவனைச் சார்ந்திருப்பது போல நடித்து எதிரியை அடித்து விரட்ட வேண்டும். சின்னஞ்சிறிய முயல்கள் பெரிய பெரிய யானைகளை எப்படி விரட்டி அடித்தன என்பது தான் இக்கதை.

முன்னொரு காலத்தில் உஜ்ஜயினி என்று ஒரு நாடு இருந்தது. அது எல்லா வகையான இயற்கை வளமும் நிரம்பப் பெற்றுச் சிறந்து விளங்கியது. மன்னன் மகேந்திர சிங்கும், நீதி வழுவாது தர்ம நெறியோடு ஆண்டு வந்தார். மாதம் மும்மாரி மழை பெய்தது. அறம் செழித்தது.

அவ்வளவு செழிப்பாகவும், சிறப்பு மிகுந்ததாகவும் இருந்த உஜ்ஜயினி நாட்டில் ஒரு முறை வானம் பொய்த்தது.

வானம் பொய்த்தது என்றால் மழை பெய்ய வேண்டிய பருவத்தில் மழையே பெய்யவில்லை என்று பொருள். மழை பெய்யத் தவறி விட்டால் பயிர் பச்சைகள் விளையாது. மக்கள் பஞ்சத்தாலும், வறுமையாலும் வாடுவர். இந்த நியதி மக்களுக்கு மட்டுமல்ல, காட்டில் வாழும் எல்லாப் பிராணிகளுக்கும், மிருகங்களுக்கும் சேர்ந்தது.

உஜ்ஜயினி நாட்டில் ஒரு காடு இருந்தது. அதன் பெயர் சுந்தரவனம். சுந்தரவனம் என்றால் அழகான காடு என்று அர்த்தம். காலம் தவறாது மழை பெய்த போது நதியில் நீர் பெருகியதால் காட்டில் செடி, கொடிகளும், புல் பூண்டுகளும் செழித்து வளர்ந்தன. காட்டிலுள்ள நீர் நிலைகள் எல்லாம் தண்ணீரால் நிரம்பி காடு மிகவும் அழகாக இருந்ததால் அதற்குச் சுந்தரவனம் என்ற பெயர் உண்டானது.

உஜ்ஜயினி நாட்டில் மழை பொய்த்துப் போனது போலவே சுந்தரவனத்திலும் மழை பெய்யவில்லை. அதனால் ஆறு வரண்டது. நீர் நிலைகள், குளம் குட்டைகள் காய்ந்தன. தண்ணீர் பஞ்சம் மிகவும் கடுமையாயிற்று.

ஆனால் காட்டின் நடுவே ஒரு குளம் இருந்தது. அதில் மட்டும் தண்ணீர் இருந்தது. அந்தத் தண்ணீர் வற்றாமலும், அளவு குறையாமலும் இருந்தது. தண்ணீர் சுத்தமாகவும், தெளிவாகவும் வேறு இருந்தது. அக்குளத்திற்குப் பெயர் என்ன தெரியுமா? சந்திரபுஷ்கரணி.

சந்திரபுஷ்கரணியைச் சுற்றி நான்கு கரைகளிலும் இருந்த மரங்கள் பசுமையாக இருந்தன. அவை கொடுக்கும் நிழல் குளிர்ச்சியாக இருந்தது. குளத்தைச் சுற்றி நிறைய புதர்கள் இருந்தன. அப்புதர்களில் நிறைய முயல்கள் இருந்தன. அவை அநேகமாக வெண்மை நிறமாக இருந்தன. அவை, உண்ண பசுமையான புற்களும், அருந்த சுவையான நீரும் அங்கே இருந்ததால் சந்திரபுஷ்கரணி அருகிலேயே தங்கள் வாசஸ்தலத்தை அவை அமைத்துக் கொண்டன. மகிழ்ச்சியாக அங்கு விளையாடின.

சந்திரபுஷ்கரணியில் பருகச் சுவையான தண்ணீர் நிறைய இருப்பதைத் தற்செயலாக அங்கே வந்த ஒரு யானை பார்த்தது. தண்ணீருக்குத் தவித்துக் கொண்டிருந்த அது குளத்திற்குள் தன் துதிக்கையை விட்டுத் தண்ணீரை உறிஞ்சிக் குடித்தது. அதன் உறிஞ்சல் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்து முயல்கள் பார்த்தன. பெரிய யானை ஒன்று தண்ணீர் குடிப்பதைப் பார்த்தன. பெரிய உடம்புடைய யானை குளத்து நீர் முழுவதையும் குடித்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவைகளுக்கு உண்டாயிற்று.

நல்ல வேளை அந்த யானை சிறிது தண்ணீரே குடித்து விட்டுச் சந்தோசத்தில் வாலை ஆட்டிக் கொண்டு காட்டுக்குள் போய்விட்டது. அதைப் பார்த்த முயல்களுக்குச் சந்தோசம் உண்டாயிற்று. இனி அந்த யானை சந்திரபுஷ்கரணிப் பக்கமே வராது என்று நினைத்து குதித்து விளையாடின.

சிறிது நேரத்தில் மரக்கிளைகள் எல்லாம் படீர் படீர் என்று உடையும் சப்தம் கேட்டது. அரண்டு போன முயல்கள் எல்லாம் தம் காதுகளை உயர்த்தி நிமிர்ந்து பார்த்தன.

சற்று முன் நீர் குடித்து விட்டுச் சென்ற யானை இப்போது தன்னுடன் ஒரு பெரிய யானைக் கூட்டத்தையே கூட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தது. அவைகள் எல்லாம் அட்டகாசமாகக் குளத்திற்குள் இறங்கி நீரைக் குடித்தன. குளித்தன. துதிக்கையில் தண்ணீரை எடுத்து ஒன்றின் மீது மற்றொன்று பீச்சியடித்துக் கொண்டது.

யானைகளின் பிரவேசத்தால் குளத்து நீர் எல்லாம் காலியாகி விட்டால் என்ன செய்வது என்று முயல்கள் கவலைப்படத் தொடங்கின.

யானைக்கூட்டம் அடிக்கடி சந்திர புஷ்கரணிக்கு வந்து தண்ணீர் குடிக்கவும், குளிக்கவும் ஆரம்பித்தன. அவை செய்த அட்டகாசத்தினால் சில முயல்கள் அவைகளின் காலடியில் சிக்கி இறந்தன. முயல்களுக்குக் குளத்து நீர் காலியாகி விடுமா என்றிருந்த பயம் போய் யானைகளின் காலடியில் சிக்கி எங்கே தங்கள் இனமே அழிந்து போய் விடுமோ என்று பயந்தன.

சின்னஞ்சிறிய பிராணிகளான தாங்கள் எப்படி அவ்வளவு பெரிய மிருகமான யானைகளைக் குளத்திற்கு வர விடாமல் தடுப்பது எனத் தெரியாமல் விழித்தன. அப்படி யானைகளைக் குளத்திற்கு வராமல் செய்தால் தான் தாங்கள் குளக்கரையில் வசிக்க முடியும் என்றெண்ணின. யானைகளை விரட்டியடித்து அவற்றை வராதிருக்கச் செய்ய உடலமைப்பில் பலங்குன்றிய தாங்கள் என்ன செய்வதென எல்லா முயல்களும் கூடி ஆலோசித்தன. அவைகளை, மூளையை உபயோகித்து ஏதாவது தந்திரத்தின் மூலமே துரத்த வேண்டும் என முடிவு செய்தன.

அந்த முயற் கூட்டத்தில் வயதான முயல் ஒன்று இருந்தது. அது எல்லா முயல்களையும் ஒன்று கூட்டி என்ன செய்யலாம் என்று ஆலோசித்தது. ஒவ்வொரு முயலும் ஒவ்வொரு வழியைச் சொல்லிற்று. ஆனால் அவற்றால் யானைகளை விரட்ட முடியாது என்பது தெரிந்தது அந்த வயதான முயலுக்கு. அது தாடையைச் சொறிந்து கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்தபடி யோசனை செய்தது. அப்போது சந்திரன் வானில் வலம் வந்து கொண்டிருந்தது.

திடீரென யானைக் கூட்டம் குளத்தில் தண்ணீர் குடிக்க வருகிற சப்தம் "திமு திமு" வெனக் கேட்டது. முயல்கள் அவைகளின் காலடியில் சிக்கி நசுங்காதிருக்க நாற்புறமும் விழுந்தடித்துக் கொண்டு ஓடின. வயதான முயல், "குழந்தைகளே! யானைகளைக் கண்டு பயந்து ஓடாதீர்கள். அவை இன்னும் சிறிது நேரத்தில் வந்த வழியே திரும்பிச் செல்லப் போவதை நீங்களே பார்க்கப் போகிறீர்கள்" என்றது.

எல்லா முயல்களும் கரையோரமாகப் புதர்களில் பதுங்கித் தலையை மட்டும் வெளியே நீட்டி தாத்தா முயல் எப்படிப் பெரிய பெரிய யானைகளை விரட்டியடிக்கப் போகிறது? என்று பார்த்தன.

யானைகள் கூட்டமாகத் தண்ணீர் குடிக்க சந்திரபுஷ்கரணியை நோக்கி வந்தன.

வயதான முயல் சட்டென்று அருகிலிருந்த ஒரு மரத்தின் மீது தாவி "ஏ, யானைகளே! நில்லுங்கள்.... இது யாருடைய குளம் தெரியுமா? சந்திரபகவானுடைய குளம். இதன் பெயர் சந்திரபுஷ்கரணி. நாள் தோறும் இரவில் சந்திர பகவான் தன் மனைவியருடன் வந்து இக்குளத்தில் நீராடுவது வழக்கம். சிறிது நாட்களாக நீங்கள் வந்து இக்குள நீரைக் கலக்கி விடுவதாக சந்திரபகவான் உங்கள் மீது மிகவும் கோபமாக இருக்கிறார். நீங்கள் வந்ததும் உங்கள் தும்பிக்கையைப் பிடித்து இழுத்துத் திருகி உங்களைச் சாகடிக்க அவர் குளத்தில் உங்களை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார். நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீங்கள் குளத்தைப் பாருங்கள். தண்ணீர் குடிக்க நீங்கள் குளத்தினுள் துதிக்கையை விட வேண்டியதுதான் தாமதம்.... உங்கள் உயிர் போய் விடும்" என்றது.

முயலின் பேச்சைக் கேட்டு நம்பாத யானைகள் குளத்தின் அருகில் சென்று எட்டிப் பார்த்தன. வானிலுள்ள பூரண சந்திரனின் வட்டமான பிம்பம் நீரினுள் இருப்பதைக் கண்டு யானைகள் பயந்து போயின. தங்கள் துதிக்கையை குளத்தில் நீர் பருக விட்டால் உள்ளே இருக்கும் சந்திரபகவான் தங்கள் துதிக்கையை பிடித்திழுத்துத் திருகிக் கொன்று விடுவாரெனப் பயந்தன. அவ்வளவுதான். திரும்பிக் கூடப் பார்க்காமல் காட்டிற்குள் ஓடி விட்டன. அதற்குப் பிறகு யானைகள் அந்தப் பக்கம் வரவே இல்லை.

முயல்கள் அச்சம் நீங்கி சந்திரபுஷ்கரணிக் கரையில் முன்பு போலக் குதித்து விளையாடி மகிழ்ந்தன.




## விடுகதைகளும் விடைகளும்

1. வேலி கட்டிய வீட்டினுள் பதுங்கி யிருக்கிறான் வாயாடி.
2. ஆற்று நடுவிலே ஒற்றைத் தடி. அதிலே காயுது வெள்ளைத் துணி.
3. அடிக்காமல் அழவைப்பாள். அங்காடியில் அமைந்திருப்பாள்.
4. வெள்ளைக்காரன் பிள்ளைக்குத் தலையில் மட்டும் கறுப்புத் தொப்பி.
5. ஒரு கிண்ணம் சந்தனம். ஊரெங்கும் கல்யாணம்.
6. பகலிலே தூங்குவான் இரவிலே அலறுவான்.
7. கடும் வெய்யில் எறித்தால் கரும் தாமரை மலரும்.
8. எரியாமல் கரியாகிக் கரியெல்லாம் வரியாகிக் குறுகிப் போகும்.
9. ஒட்டு வீட்டை உடன் கொண்டு செல்லுவார்.
10. ஊசி மூக்கன் சந்தைக்குப் போவான்.
11. நகர முடியாது ஓடாமலுமிராது.
12. உயிருக்குள் சடம். சடத்துக்குள் உயிர்.
13. மனிதனின் வாயிலே மலரும் பூ. என்ன பூ?

விடைகள்

1. நாக்கு
2. கொக்கு.
3. வெங்காயம்
4. தீக்குச்சி
5. சூரியன்
6. ஆந்தை
7. குடை
8. பென்சில்
9. ஆமை
10. இறால்
11. கடிகாரம்
12. முட்டை
13. சிரிப்பு

வ. நஸ்றீன்–மூதூர்–07.

2. பக்கமெல்லாம் பட்டையுண்டு. மரமுமல்ல. பெயர்த்தெடுத்தால் முத்துண்டு. சிப்பியல்ல. உடைத்தெடுத்தால் விதையுண்டு. பழமுமல்ல அது என்ன?
3. சுற்றுவேன் அந்த மரத்தை. சூடேன் அந்தப் பூவை. நத்தேன் அந்தக் காயை. நாடுவேன் அந்தப் பழத்தை. அது என்ன?
4. ஒரு குப்பிக்குள் இரண்டு எண்ணை அது என்ன?
5. சிவத்தப் பைக்குள் சில்லரை காசு அது என்ன?
6. வாலால் கிண்டி தலையால் மேயுது அது எது?
7. அட்டைக்கு ஆயிரம் கண். முட்டைக்கு மூன்று கண். பெருமாளுக்கு ஒரு கண். அவை எவை?
8. இரவினில் தூங்கியிருப்பான் பகலில் வெளிச்சம் தருவான்.

விடைகள்

1. முருங்கை
2. சோளம்
3. வேம்பு
4. முட்டை
5. செத்தல் மிளகாய்
6. அகப்பை
7. தென்னை ஓலைத் தட்டி, தேங்காய், ஊசி
8. சூரியன்.

எம். எம். பாஸிர்
அ·மு. பாடசாலை
புத்தளம்.

1. நீரோடு நிலங்கருக்க நிலபாவல் குருத்தெறியக் காரோடும் பட்டணத்தில் காயுந்தின்னலாம் பூவுந்தின்னலாம் இலையுந்தின்னலாம் பழந்தின்னக்கூடாது. அது என்ன?

**பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன**

## பாப்பா முரசு

**வர்ணம்தீட்டும் போட்டி இல-5ல் வெற்றி பெற்றவரும், பாராட்டுப் பெறுபவர்களும்.**

பரிசுக்குரியவர்:
எம்.எஸ்.நூருல்லா
வத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

ரி. குகேந்திரா
நு/ சாந்த உமஸ் பாடசாலை,
தலவாக்கலை.

ரூபன் புஷ்பகுமார்
இந்துக்கல்லூரி,
மட்டக்களப்பு.

பாத்திமா ஷாமிலா
அக்குறணை.

மணிவண்ணன்
தமிழ் மகாவித்தியாலயம்,
இராந்துங்கட.

லெ. உம்மு ஹபீபா
காத்தான்குடி-5.

ஜெயாழினி
கணேச வித்தியாலயம்,
மட்டக்களப்பு

முகமட் பர்சான்
மாளிகாஹன முஸ்லிம் வித்தியாலயம்
பேருவளை.

அ. ஷைலஜா
பாபுல் ஹசன் மத்திய மகா வித்தியாலயம்,
வரக்காப்பொல.

கார்த்திகா
கொழும்பு-13.


ஐ.எவ். பாத்திமா ரிஹானா
திருகோணமலை.

## குறித்துக் கொள்ளுங்கள்

1. இலங்கையின் பரப்பளவு எத்தனை கிலோ மீற்றர்?
65.610 சதுர கிலோ மீற்றர்.
2. புவியின் பரப்பளவு யாது?
3,132,000,000 சதுரக் கிலோ மீற்றர்.
3. சூரிய ஒளிக்கதிர் பூமியை வந்தடைய எத்தனை நிமிடங்கள் எடுக்கும்?
8 1/2 நிமிடங்கள்.
4. பூமி சூரியனிலிருந்து கிட்டத்தட்ட எத்தனை கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது?
14,880,000 கிலோ மீற்றர்.
5. இமய மலைத் தொடரின் நீளம் என்ன?
2414 கிலோ மீற்றர்.
6. எவரெஸ்ட் மலைச்சிகரத்தின் உயரம் என்ன?
8848 மீற்றர்.
7. ஒரு மீற்றர் எத்தனை அடியாகும்?
3.28 அடியாகும்.
8. ஒரு கிலோ மீற்றர் எத்தனை மைல்களாகும்?
0.62 மைல் ஆகும்.
9. 420,315,462 ஆகிய எண்களை மிச்சமின்றிப் பிரிக்கக் கூடிய ஆகப் பெரிய எண்?
21.
10. பத்து தொடக்கம் ஐம்பது வரையுள்ள எண்களின் கூட்டுத் தொகை?
1230.

க. நிமலதாசன்
மாங்காடு, செட்டிபாளையம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு சிறந்த வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணத்திற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி-2.10.93.

முகவரி:
**வர்ணம் தீட்டும் போட்டி இல-08**
**தினமுரசு வாரமலர்**
**88/14 சோமாதேவி பிளேஸ்**
**கொழும்பு -05.**

## கண்டுபிடியுங்கள் போட்டி இல-01

சரியான விடை எழுதியோர் பலர். அவர்களில் பெயர்கள் பிரசுரமாகும் அதிஷ்டசாலிகள் இவர்கள்:

1. அ. அரவிந்தன்
கொழும்பு—15.
2. ஏ. நிஸ்ஃபா
மன்னார்.
3. செல்வி உமாஜெயந்தி மெய்யநாதன்
உடப்புசல்லாவ.
4. ஆர்.எஸ். பவன்
செங்கலடி.
5. எம்.எம். ஸன்பா
கிண்ணியா—06.
6. எம்.இஸட். நஜீபா
கல்முனை.
7. செல்வி கந்தசாமி மங்களநாயகி
அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, திருமலை.
8. எம்.ஆர். இர்ஸாட்
கம்பளை.
9. செல்வி நல்லமுத்து சரஸ்வதி
நோர்வூட்.
10 ஏ. ஜிப்ரி
நிந்தவூர்.

# நந்தவன நாட்கள்



அலுவலகத்துள் புகுந்து அனைவரது காலை வணக்கங்களையும் பெற்றுக் கொண்டு, தனது பிரத்தியேக அறையினுள் புகுந்து கதிரையில் உட்கார்ந்த போது மேசையிலிருந்த பழுப்பு நிற கடித உறை ரகுவின் கவனத்தை ஈர்த்தது.

ரகு, ஆறடிக்கு மூன்றங்குலம் குறைவான உயரத்தில் திடகாத்திர மாயிருந்தான். கற்பனைக்குரிய கதாநாயகன் வடிவத்திலில்லா விட்டாலும், கொஞ்சம் கவர்ச்சியாகவே இருந்தான்.

கடித உறையில் "அந்தரங்கம்" என எழுதப்பட்டிருந்த எழுத்தைப் பார்த்ததும், ரகுவின் மனசும் வாயும் உச்சரித்த பெயர் "ரேவதி".ரேவதி, அசப்பில் நடிகை ரேவதி போலிருந்தாலும், அந்தக் கண்கள் நிரம்ப கதை பேசும். ரகு ரேவதியைச் சந்தித்தது, உத்தியோகத்திற்கான பயிற்சிக் காலத்தில். ரேவதியும் பயிற்சிக் குழுவில் அங்கம் வகித்திருந்தாள். ஒரு நாள் வகுப்பில்,

"ஹலோ, ரேவதி என்ன ரொம்ப டல்லாயிருக்கீங்க?"

"நோ. நத்திங்" இது அவள் அவனுடன் பேசிய முதல் வார்த்தை.

இன்னொரு நாள்,

"ஏன் ரேவதி எங்களைக் கண்டால் ஓடி ஒளியிறீங்க?"

"இல்ல, அப்படியெல்லாம் இல்ல." இது அவள் பேசிய இரண்டாவது வார்த்தை.

பயிற்சிக்குழுவில் எல்லோரிலிருந்தும் ரேவதி வெகுவாக ஒதுங்கியிருந்தாள். அடக்கமாயிருந்தாள். இது ரகுவின் மனசினுள் விதை போட்டது.

மற்றொரு நாள்,

"ரேவதி, என்ன படிச்சுக்கிட்டிருக்கீங்க?"

"ஆ!....ஒண்டுமில்ல"

"அப்ப கையில புத்தகம்?"

"இல்ல, படிச்சுக்கிட்டிருந்தன்."

"சரியாப் போச்சுடா. கொடுங்க புத்தகத்தை பார்ப்பம்."

கொடுத்தாள்.

"நந்தவன நாட்கள்" , அட, கவிதைப் புத்தகம். கவிதை ரொம்பப் பிடிக்குமா?"

"ம்"

"இந்தாங்க, கூடவே நாளைக்கு நானும் கொஞ்சம் கவிதை கொண்டு வந்து தாறன் படிச்சுப்பாருங்க" சொல்லிவிட்டு அகன்றான்.

மறுநாள் கொண்டுவந்தும் கொடுத்தான்.

மூன்று நாட்கள் கழித்து, ஒதுங்கியிருந்த ரேவதி முதன் முதலாய் அவனுடன் தானாகக் கதைத்தாள்.

"ரகு! இந்தாங்க நீங்க தந்த கவிதை. இதையெல்லாம் எங்கிருந்து தொகுத்தீர்கள்? எனக்கு ரொம்ப, பிடிச்சிருந்தது."

"தொகுத்தா? போச்சடா. இதெல்லாம் என் சொந்தக் கற்பனைகள் அம்மணி."

"என்னது? நீங்கள் எழுதியதா? இவ்வளவு நல்லா எழுத வருமா உங்களுக்கு. என் வாழ்த்துக்கள்."

"அட, கவிதையின்னா இவ்வளவு இஷ்டமா உங்களுக்கு. என்னிடம் பெட்டி பெட்டியா இருக்கு. கொண்டு வந்து தாறன் படியுங்க."

"அப்பிடியா? ரொம்ப தாங்க்ஸ்"

மெல்லிய இழையொன்று மனசினுள் அறுந்தது ரகுவிற்கு.

கவிதையால் உருவானது நட்பு.

கவிதையைப் போலவே இருந்தது.

மரியாதை வார்த்தைகள், உரிமை வார்த்தைகளாயின.

"நீங்கள்" போய் "நீ" வந்தது.

கவிதைத்தனமான நட்பில் கவிதைத் தனமே இல்லாமல், ஒரு நாள் பட்டவர்த்தனமாய் கேட்டான், ரகு ரேவதியிடம்.

"ரேவதி, என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளேன்?"

"ரகு"...... அதிர்ச்சியுடன், ரேவதி.

"பிரியமில்லையா ரேவதி?"

"பிளீஸ் ரகு இனி அப்படி ஒரு வார்த்தை பேசாதீர்கள். என்னில் நீ வைத்த அபிமானம் இவ்வளவுதானா?" கேட்டுவிட்டுப் போய்விட்டாள்.

சுக்குநூறாகிப் போனான் ரகு.

மறுநாள் தபாலில் ஒரு கடிதம். ரகுவின் பெயரிற்கு. உடைத்தான், ரேவதியின் சின்னமுத்து எழுத்துக்கள்.

**அன்பு ரகு,**

என்னிடம் ஏன் அப்படிக் கேட்டாய்? ரகு, அப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளுடன் தான் என்னுடன் பழகினாயா? இல்லை யென்று சொல்ல வேண்டுமென்று மனம் எதிர்பார்க்கின்றது. ரகு உன் கவிதைகளை யெல்லாம் என்னிடம் தந்தாயே ஞாபக மிருக்கிறதா? அந்தக் கவிதைகளில் நீ வடித்திருந்த சோகங்கள், வேதனைகள் என்னை நிரம்பவும் பாதித்தது. நீ சிறு வயதில் தாயை இழந்ததையும், அன்புக்காக ஏங்கியதையும், கஷ்டப்பட்டு - மிகவும் கஷ்டப்பட்டு வளர்ந்ததையும், படித்ததையும் கவிதைகளால் வடித்திருந்தாயே.... அவற்றையெல்லாம் படித்ததும் தான் உன்னில் எனக்கொரு ஈர்ப்பு வந்தது. ஆனால் அது காதலல்ல. "அன்பு" நீ பெற முடியாத அன்பு நட்புமுறையில் நான் தந்தேன். உரிமைகள் தந்தேன். அதை நீ ஏன்? எப்படி? வேறுவகையில் நினைத்தாய். மறந்துவிடு. அந்த நினைப்பை மறந்துவிடு. என்னை மறக்காமல் மறுமுறை என்னைச் சந்திக்கும்போது அன்பாக நட்போடு, நண்பனாக வா. முடியாவிட்டால் தாயிடம் ஒரு மகனாக வா. இவற்றையெல்லாம் மீறி ஒரு முக்கிய விடயம், ஏற்கனவே என் முறைப்பையனுக்காக நான் நிச்சயிக்கப் பட்டவள் ரகு.

அன்புடன்

அன்புமாறா-ரேவதி.

கூனிப்போனான், குறுகிப் போனான் ரகு.

ரேவதியைத் தேடிப்பிடித்த போது, கண்ணீருடன் கேட்டாள்.

"வாசித்தாயா ரகு?"

உடைந்தான். அணையுடைந்த வெள்ளம் போல் கண்களால் நீர் வழிந்தோட.....

"மன்னித்துவிடு ரேவதி"

"இல்லை ரகு தூய்மையான நட்பில் மன்னிப்பு, நன்றி இரண்டு வார்த்தைகளும் இருக்கவே கூடாது. இதை மறந்துவிடு. நம்மால் உயிருள்ளவரை நல்ல நண்பர்களாயிருக்க முடியும்."

அன்று அவள் கொடுத்த ஊக்கம், அன்பு , பாசம், பரிவு, நேசம்...... எல்லாமாய் இன்று, இவ்வளவு உயரத்தில், இந்தக் கதிரையில் ரகு.

அவள் பிரிந்தபோது சொன்ன வார்த்தை:

"ரகு, என் திருமணத்தில் முதல் வாழ்த்து உன்னதாகவே இருக்க வேண்டும்."

கலங்கியிருந்த கண்களுடன் நினைவுகளிலிருந்து மீண்ட ரகு, அவளுக்குப் பிரியமான அந்தப் பழுப்புநிற உறையை, சேதமாக்காமல் உடைத்தான்.

**பிரியமான ரகுவிற்கு,**

உன்னன்பு ரேவதி எழுதிக்கொள்வது, எனக்கு நிச்சயிக்கப்பட்ட திருமணம் வருகிறமாதம் நடைபெறப்போகிறது. அதற்கான என் முதல் அறிவிப்பு உனக்குத் தான். என் முறைப்பையன் அதுதான் வரப்போகும் கணவர் எவ்வளவு நல்லவர் தெரியுமா? உன்னைப் பற்றியெல்லாம் சொன்னேன். அவர் அனுமதியுடன்தான் உனக்கான என் முதல் அறிவிப்பு. நம் ஒப்பந்தப்படி எனக்கான முதல் வாழ்த்தும் உன்னிடமிருந்தே. வாழ்த்துவாயல்லவா நண்பனே?

பிரியமுடன், ரேவதி.

விழிகளில் நிறைந்த நீரோடு,
அவனை ஆளாக்கிய,
அந்த அன்பு உள்ளத்திற்கு,
வாழ்த்தாய் கவிதை எழுத ஆரம்பித்தான் ரகு.

-நிறைந்தது-

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?

★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.

★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.

★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



இலக்கம்-09

சுப்பர் ஸ்டார் சந்திப்பு

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-.................................

படத்தின் இயக்குநர் பெயர்:-.................................

ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-.................................

இப்படம் வெளியான ஆண்டு:-.................................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.



"நாட்டில் கற்பழிப்புக்கள் அதிகரித்து விட்டது பிரபு... நீங்கள் வேண்டுமானால் மாறுவேடத்தில் சென்று பாருங்கள் மன்னா."

"அந்தக் கண்றாவியையா?"



• உங்க பையன்கள் எல்லாம் எவ்வளவு கஷ்ரப்பட்டுச் சம்பாதிச்சு உங்களைப் படிக்க அனுப்பியிருக்கிறாங்க.. உங்களுக்கெல்லாம் கொஞ்சமாவது பொறுப்பு இருக்கா?

## இந்த வாரம் உங்கள் பலன்

(26.09.93 முதல் 02.10.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், வியாழன் |
| துலாம் | - புதன், செவ்வாய் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| சிம்மம | - வெள்ளி |

சந்திரன் மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சியுண்டு. | காலை 10 மணி |
| திங்கள்- | தனவிருத்தி, காரியானுகூலம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | வெளியார் உதவி, வீண் மனஸ்தாபம். | பி.ப 3 மணி |
| புதன்- | எதிர்பார்த்த வெற்றி, துயர் நீங்கும். | பி.ப 4 மணி |
| வியாழன்- | உயர்ந்தோர் நட்பு, புதிய தொழில் முயற்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- | பூமியால் நன்மை, மனப் போராட்டம். | காலை 7 மணி |
| சனி- | துன்பம் மறையும், பணவரவு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள் -வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பாராட்டு, கௌரவம், கீர்த்தி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | உயர்ச்சி நிலை, மனமகிழ்ச்சி. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | தொழில் கேடு, பணக்கஷ்டம். | பி.ப 5 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, கடன் பயம். | காலை 11 மணி |
| வியாழன்- | பணத்தட்டுப்பாடு, பெரியோர் உதவி. | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியார் உதவி, இராச அபகீர்த்தி. | காலை 9 மணி |
| சனி- | துயர் நீங்கும், தூரஇடப் பிரயாணம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கீர்த்தியுண்டு, பிணி தீரும். | காலை 9 மணி |
| திங்கள்- | பொருள் கிடைக்கும், சுகம் உண்டு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | காரியம் ஜெயம், உறவினர் பகை. | பி.ப 2 மணி |
| புதன்- | பொருள் இலாபம், அந்நியர் உதவி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | பகைவர் வெற்றி, மறைமுக எதிர்ப்பு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | செய்தொழில் விருத்தி, இனசனக் கொண்டாட்டம். | காலை 9 மணி |
| சனி- | நடைக் கஷ்டம், அந்நியர் பகை. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, உயர்ச்சி நிலை. | காலை 9 மணி |
| திங்கள்- | பணத்தட்டுப்பாடு, மனக்கவலை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, கவலை மறையும். | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, புதுமனைப் பிரவேசம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | அந்நியரால் நன்மை, மன ஆறுதல். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | கௌரவம், புகழ் மேன்மை. | பி.ப 2 மணி |
| சனி- | செய்தொழில் நன்மை, பொருள் பேறு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் அதிகம், பணச் செலவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | நடைக் கஷ்டம், அந்நியர் சகவாசம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | தூரஇடப் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் தொல்லை, எடுத்த கருமத் தடை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | வெளியிடப் பிரயாணம், தனலாபம். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | வருமானம் வீழ்ச்சி, கடன் படல். | பி.ப 2 மணி |
| சனி- | செலவு அதிகம், வீண் மனஸ்தாபம். | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-8

### கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | குடும்ப சுகம், உயர்ந்தோர் நட்பு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | அரச பயம், அதிகார விருத்தி. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | எண்ணிய கருமம் வெற்றி, முதியோர் சகவாசம். | பி.ப 5 மணி |
| புதன்- | பாராட்டு, பொருட் செலவு. | காலை 10 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, பொருள் வரவு. | காலை 11 மணி |
| வெள்ளி- | திருடர் பயம், வீண் வாக்குவாதம். | பகல் 12 மணி |
| சனி- | உயர்ந்த எண்ணம், வெளியிட உதவி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நடைக் கஷ்டம், கவலை மிகுதி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பயணம், செலவு மிகுதி. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், அகால போசனம். | பி.ப 5 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, பணவரவு. | காலை 11 மணி |
| வியாழன்- | வீண் அலைச்சல், துயர் நீங்கும். | காலை 10 மணி |
| வெள்ளி- | புதிய தொழில் முயற்சி, காரியத் தடை. | காலை 9 மணி |
| சனி- | பங்காளர் அதிருப்தி, காரியானுகூலம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள். - திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய சித்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | புதிய தொழில் கிடைத்தல், ஆடம்பரச் செலவு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | வரவுக்கு மிஞ்சிய செலவு, கடன் பயம். | காலை 9 மணி |
| புதன்- | கவலை அதிகம், மனைவியால் ஆறுதல். | பி.ப 3 மணி |
| வியாழன்- | உயர்ந்தோர் நட்பு, செலவு அதிகம். | காலை 8 மணி |
| வெள்ளி- | வீண் பிரயாசம், நடை நோய். | காலை 10 மணி |
| சனி- | பகைவரை வெற்றி கொள்ளல், கீர்த்தி. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் -வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சி நிலை, பூமியால் இலாபம். | பி.ப 4 மணி |
| திங்கள்- | கவலை தீரும், பணவரவு. | பி.ப 5 மணி |
| செவ்வாய்- | காரியானுகூலம், உயர்ச்சி. | காலை 11 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், காரிய சித்தி. | காலை 9 மணி |
| வியாழன்- | பெரியோர் சகவாசம், பண நெருக்கடி. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | பகைமை நீங்கும், எதிர்பாரா உதவி. | பி.ப 5 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, உல்லாச வாழ்க்கை. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயந்த நிலை, பெண்களால் தொல்லை. | காலை 7 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, உயர்ச்சி நிலை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பணத்தட்டுப்பாடு. | காலை 9 மணி |
| புதன்- | பணவரவு, கடன் படல். | பகல் 12 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, பெரியோர் நட்பு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | நடைக்கஷ்டம், தொழில் சித்தி. | பி.ப 4 மணி |
| சனி- | உயர்ந்தோர் நட்பு, பாராட்டு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-1

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனஆறுதல், தனவிருத்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | எடுத்த காரியம் வெற்றி, வீண் தொல்லை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பணத் தட்டுப்பாடு, வெளியிட பிரயாணம். | காலை 11 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, மனைவியால் துன்பம். | காலை 9 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பொருள் வரவு. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், கீர்த்தி. | பி.ப 5 மணி |
| சனி- | காரிய சித்தி, கவலைகள் மறையும். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய்,அதிஷ்ட இலக்கம்-7

### மீனம்: — சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, பிரயாணம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | உயர்ச்சி நிலை, புண்ணியப் பேறு. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | அதிகார விருத்தி, மனஆறுதல். | காலை 9 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மன மகிழ்ச்சியுண்டு. | காலை 10 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கீர்த்தி. | காலை 8 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகவாசம், காரிய சித்தி. | பி.ப 1 மணி |
| சனி- | பொருள் சேர்க்கை, பூமியால் இலாபம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

# மருத்துவ + விந்தைகள்

## சிறுமியின் தலை சுமந்த கட்டி! சந்தேகத்தோடு நடந்த சத்திர சிகிச்சை!!

அஸ்சான் ஃபுர்ஸியா என்ற சிறுமிக்கு அவளுடைய தலையின் பின் புறம் தலையின் அளவைப் பார்க்கிலும் பெரிய கட்டி வளர்ந்திருந்தது.

இரண்டு தலையுடைய பயங்கர மிருகத்தைப் போல் அக்குழந்தை காட்சியளித்தது.

சத்திர சிகிச்சை நிபுணர்கள் இக்கட்டியை வெட்டிப் பிரித்து அச்சிறுமிக்குப் புது வாழ்க்கை அளித்துள்ளனர்.

அந்த மூன்று மாதக் குழந்தை எதியோப்பியா நாட்டிலிருந்து இத்தாலியிலுள்ள பவியா எனும் இடத்துக்கு விமான மூலம் கொண்டு வரப்பட்டாள்.

அவளுடைய தலையின் பின்புறமாக மற்றுமொரு தலை ஒட்டி வைத்ததைப் போன்று ஒரு பெரிய வளர்ச்சி ஒட்டிக் கொண்டிருந்தது. இதனை உடனடியாகப் பிரித்தெடுக்க முடியாவிட்டால் அக்குழந்தை பிழைப்பதற்கான அறிகுறிகள் இல்லை என்று கருதிய மருத்துவர்கள் இதனை அறுத்தெடுக்க ஆயத்தமாயினர்.

ஆனால் அது சுலபமான காரியமல்ல என்ற உண்மையினை தலையினை 'எக்ஸ்ரே' முதலான கருவிகள் மூலம் ஆராய்ந்ததில் தெரியவந்தது. குழந்தையின் மூளையின் ஒரு பகுதி பின்புறம் வளர்ந்த கட்டிக்குள்ளும் ஊடுருவியிருந்தது.

இத்தாலியசத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் பியர் பாலெட், தனது இரு உதவியாளர்களுடன் அறுவை சிகிச்சையை மேற்கொண்டார்.

பின்புறமுள்ள கட்டிக்குள் ஊடுருவியிருந்த மூளைப் பகுதிகளை குழந்தையின் தலைக்குள் உரிய இடத்தில் சேர்ப்பதே அவர்களுக்குப் பெரும் சவாலாக இருந்துள்ளது.

இதனை முடித்தபின்னர் 14 இறாத்தல் எடையுள்ள அந்தக் கட்டியை வெட்டியெடுப்பது அவர்களுக்கு சிரமமாக இருக்கவில்லை.


மூளையின் பெரும்பகுதி பின்புறமுள்ள கட்டிக்குள் ஊடுருவி இருந்தமையினால் குழந்தையின் உடலில் ஒரு பகுதி செயலிழக்க ஆரம்பித்திருந்தது.

சத்திரசிகிச்சையின் முதற் கட்டம் வெற்றிகரமாக முடிந்ததும் அதன் அங்கங்கள் அசையத் தொடங்கிவிட்டன. பின்னர் கட்டி பிரித்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து பிளாஸ்ரிக் சிகிச்சை மூலம் தலை சீர்செய்யப்பட்டு அக்குழந்தை எத்தியோப்பிய இராணுவ உயர் அதிகாரியான அதன் தந்தையிடமும் தாயிடமும் ஒப்படைக்கப்பட்டது.

**அதிசயிக்கத்தக்க சத்திரசிகிச்சை**



வெற்றிகரமான சத்திர சிகிச்சைக்குப்பின் கட்டி வெட்டி அகறறப்பட்ட குழந்தை அசன



**குழந்தையின் மூளையின் ஒரு பகுதி பின்புறம் வளர்ந்த கட்டிக்குள் ஊடுருவிருந்தது.**

## கண் திரை நோய் விலக.....



கண்மணியின்பின் புறத்தே அமைந்துள்ள திரை பிரதானமானது. நாம் பார்க்கும் காட்சிகளனைத்தும், இந்தத் திரையிலேயே பிரதிபலிக்கிறது. 'ரெட்டினா' என்றழைக்கப்படும் இத்திரையில் பல நோய்கள் ஏற்பட்டு கண்பார்வை மங்குகிறது. அது மட்டுமல்லாமல் பார்வையே முற்றாக இல்லாமற் போய் விடுவதுமுண்டு.

இப்பொழுது லேசர் ஒளிக்கதிர் பாய்ச்சுவதன் மூலம் கண் திரையில் ஏற்படக்கூடிய நோய்களை நீக்கி விடுவது இலகுவாகிறது. ஏதாவது அடிபட்டோ தாக்கமேற்பட்டோ கண்திரையில் காயம் ஏற்பட்டாலும் லேசர் ஒளி வீச்சினால் சீராக்கி விடலாம்.


முகம் பார்க்கும் கண்ணாடியில் பின்புறம் பூசப்பட்டுள்ள பூச்சு சுரண்டப்பட்டு விடுவது போல ரெட்டினாவின் ஒருவகைப் பூச்சு உதிர்ந்து விடுகிறது. லேசர் கதிர்ப்பாய்ச்சலினால் இதனையும் சரிப்படுத்தி விட முடிகிறது.

## சளி விலக பலூண் ஊதுக!

'புரொங்கைட்டிஸ்' எனப்படும் மார்புச் சளி நோயிலிருந்து நிவாரணம் பெற பலூணை ஊதுங்கள். உபாதை குறையும்.

மார்புச் சளி நோய் உள்ளவர்களுக்கு சாதாரண பலூணை ஊதிக் கொண்டிருப்பதன் மூலம் சுவாசக் கோளாறு நீங்கிவிடுவதாக புதிய ஆய்வுகள் கூறுகின்றன. ஒரு சாதாரண பலூணை பல தடவைகள் விட்டு விட்டு ஊதும் போது மார்பில் ஏற்படும் சளி அடைப்பு நீங்கி விடுகிறது. சுவாசிப்பதில் சிரமம் ஏற்படும் வேளையில் பலூண் ஊதப்படும் போது வெளியிடப்படும் மூச்சுக்கு ஈடாக வெளியிலிருந்து சுவாசம் வேகமாக உட்செல்ல வேண்டியிருக்கும். இதனால் சுவாச அடைப்பு நீங்கி விடுகிறது.

இப்பயிற்சியை எவ்வித மேற்பார்வையுமின்றி தங்கள் இல்லங்களிலிருந்த வண்ணமே செய்யலாம். செலவும் குறைவு. பலூண் வாங்குவதற்கு மட்டுமே செலவு ஏற்படுகிறது.





## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—13



ரம்யா கத்தியை நீட்டினாள். நீட்டியபடியே பேசினாள்.

"துப்பாக்கியை விட கத்தி வசதி. சத்தம் வராது. ரத்தம் மட்டும் கொட்டும். வீச்சு சரியாக இருந்தால் சத்தியமாய் மூச்சுப் போகும்."

குலாம்ஷா புரிந்து கொண்டார். எதிரே வரும் எதிரியை சப்தம் இல்லாமல் சரிக்கச் சொல்லுகிறாள். பிஸ்டல் பேசினால் எதிரிகள் விழித்துக் கொள்ளக்கூடும். காதோடு காதாக எதிரியின் உயிரோடு கத்தியால் பேசச் சொல்லுகிறாள்.

அவள் ரம்யாதானா என்று எட்டிப் பார்த்த சந்தேகம் இப்போது சற்று விலகிக் கொண்டது. எனினும் தோட்டா வாங்கி, இரத்தம் சிந்தி நிலத்தில் துடித்து விழுந்ததைக் கண்டதும் பொய்யா? அல்லது விழித்திருக்கும் போதே கண்ட அழகான கனவா?

குலாம்ஷா மீண்டும் குழம்பினார்.

மதுமிதா சுட்டதை, ரம்யா ஆ.... வென்று அலறி சுருண்டதை, நிருபராஜ் வக்கிரமாய் சிரித்ததை....எல்லாவற்றையும் மனத்திரையில் மலரும்' நினைவாக ஓடவிட்டுப் பார்த்தார் குலாம்ஷா.

எல்லாமே துல்லியமான காட்சிகள். புத்தம் புதிய ஈஸ்டுமென் கலர் பிரதி போல ஒரு சின்னக் கீறல் கூட இல்லாமல் ரம்யாவின் கொலை மனத்திரையில் விரிந்தது.

மனத்திரையில் காண்பது பொய் எனில் இவள் முகத்திரை விலக்கி பார்க்க வேண்டும்.

டக்....டக்....டக்

ஷாவின் சிந்தனையை தட்டி நிறுத்தியது காலடி ஓசை.

ஷா எதிரியை மடக்க தயாராகி கத்தியை தான் சொன்னபடி செய்யும் நிலையில் வைத்துக் கொண்டார்.

ரம்யா இன்னொரு கத்தியை தன் இடப்பக்க இடுப்பில் இருந்து உருவிக் கொண்டாள்.

புத்திசாலிப் பெண். சூழலுக்கு ஏற்ற ஆயுதம் கொண்டு ஆயத்தமாக வந்திருக்கிறாள். இந்த புத்திசாலித்தனம் ரம்யா என்று இன்னொரு ஆதாரம் சொல்கிறது. அப்படியானால் கண் எதிரே கண்ட கொலை.....

குலாம்ஷா மேலும் குழம்பாமல் எதிரியின் சமீபம் தடுத்தது.

ஷாவின் கரத்தில் ரம்யா கொடுத்தது ரம்போ கத்தி. வயிற்றிலே செருகி குடலைக் குடையலாம். உயிர் அழிவுக்கு நம்பகமான உத்தரவாதம்.

இரகசியப் பாதையின் சுவரோடு சுவராய் ஷாவும் ரம்யாவும் பதுங்கி பாயத் தயாராய் காத்திருந்தனர்.

இருட்டுக்குப் பழக்கப்பட்டவனாய் முன்னேறி வந்த எதிரியின் முகம் தெளிவாகப் புரியவில்லை.

ஷாவுக்கு மிக நெருக்கமாய் ரம்யா நின்றாள். ரம்யாவிடம் இருந்து வந்த ரம்மியமான வாசனை அவள் ரம்யாவேதான் என்று சத்தியம் பண்ணியது.

ரம்யா உபயோகிக்கும் சென்ற் வாசனை ஷாவின் மூக்குக்குப் பழக்கமானது.

கட்டிலில் ஷா மீது புரண்டு, மென்மையான தன் உதடுகள் கொண்டு ஷாவின் உதடுகளை ரம்யா சாப்பிட்டு முடிக்கத் துடித்த நெருக்கமான நொடியில் வீசிய கிறக்கமான வாசனை.

கடினமாக கவர்ந்திழுக்கும் சாந்தமான இளமைகள் இரண்டும் தன் நெஞ்சில் சரிந்து தவழ்ந்த நொடிகளை ஷா நினைத்துக் கொண்டார். நினைப்பே இனித்தது.

இனித்த நினைப்பை அருகில் வந்துவிட்ட எதிரியின் காலடி ஆவேசப்படுத்தியது.

சுவரோடு சுவராய் ஷா அருகே ஒட்டியிருந்த ரம்யா எட்டிப் பாய கால் தூக்கி வைத்தாள்.

கரம் இருந்த கத்தியை பார்த்துக் கொண்டாள்.

ரம்யாவின் அசைவில் அவள் தயாராதல் புரிந்து குலாம்ஷா இடக்கரம் நீட்டித் தடுத்தார்.

அப்படி நீட்டியதில் ரம்யாவின் மெத்தென்ற மார்பில் தட்டியது கரம். அந்த பதட்ட நொடியிலும் இளமையின் மென்மை உள்ளே குளிரூட்டியது.

பெண் இனிமை. அழகிய வீணை. ஒவ்வொரு மீட்டலிலும் புதிது புதிதாய் சுகராகங்கள். ஒவ்வொரு முறை புரட்டும் போதும் புதிய புத்தகமாய் புதிய கதை விரியும். புதிய புதிய புதிர்கள் விரியும். அவிழும்.

எனினும் பெண் வெறும் சதையல்ல. பெண்ணை நீயும், உன்னைப் பெண்ணும் புரிந்து கொண்டால் மட்டுமே இனிய நாதங்கள் பீறிட்டுக் கிளம்பும்.

ஆணுக்கு பெண் பலம். பெண்ணுக்கு ஆண் பலம். ஒருவரை ஒருவர் கவர்தலில், கவர வைப்பதில் பலம் அதிகமாகும்.

ரம்யா புத்திசாலிப் பெண். எனினும் புத்திசாலித்தனத்தை சமூகம் மீது கத்தி வீசியவர்களுக்காகப் பயன்படுத்தியதால் விரயமாக்கியவள்.

ஷா ரம்யாவுக்காக அனுதாபப்பட்டார். ரம்யாவின் துணிச்சலும், துல்லியமான புத்திக் கூர்மையும் வியக்கவைத்தன.

இப்போது ரம்யாவை பாயாதே என்று தடுத்ததில் காரணம் இருந்தது.

எதிரி தம்மைக் கடந்து செல்ல சந்தர்ப்பம் கொடுத்து அவன் மீது பாய்ந்து விடுவதே குலாம்ஷா போட்ட கணக்கு.

குலாம்ஷாவின் கணக்கு புரியாது ரம்யா முன்னேறி தாக்க முயன்றதும், வேண்டாம் என்று இடக்கரம் நீட்டி ஷா தடுத்ததும் அதனால் ஏற்பட்ட அசைவுகளும் வந்தவன் விழிகளுக்குள் விழுந்து விட்டன.

இருட்டுக்குப் பழக்கமான விழிகள். சிறு அசைவும் கூட துலக்கமாய் புரிந்தது.

சுவர் பார்த்து திரும்பி முறைத்தான். விழிகளால் அலசினான்.

எதிரியின் விழிப்பை புரிந்து குலாம்ஷா உஷாரானார்.

'யார் அது' என்று அதட்டலாய்க் கேட்க வாய் திறந்தவன்

'யார்' என்று கேட்டதோடு அடுத்த பேச்சுக்கு உதடு திறக்க முன்னரே, பவுண்ட்றி நோக்கிப் பாய்ந்து செல்லும் பந்து போல-

எதிரியை நோக்கிப் பாய்ந்தார் குலாம்ஷா. நெஞ்சின் மையத்தில் துளிகூட விலகாமல் ரம்போ கத்தியைக் கச்சிதமாகச் செருகினார்.

கச்சிதமான குத்து வாங்கி உச்சக் கட்டமான மரண சுகம் கண்டு மடங்கிச் சரிந்தான் எதிரி.

சரிந்தவனை குனிந்து நோக்கி பின் மடங்கி அமர்ந்து மூச்சிருக்கிறதா என்று அவன் மூக்குக்கு விரல் அனுப்பி விசாரித்தாள் ரம்யா.

சுத்தமான கொலை. சத்தியமாய் செத்துவிட்டான்.

குலாம்ஷாவை நிமிர்ந்து பார்த்து கட்டை விரல் நிமிர்த்தி வெற்றிக் குறி காட்டினாள் ரம்யா.

மங்கிய ஒளியில் குறியை ஷா கண்டு கொண்டார். சரிந்து கிடந்தவனை கால்களில் பிடித்திழுத்து சுவர் ஓரமாய் போட்டுவிட்டு......

"தாமதித்தால் ஆபத்து. விரைவாக வெளியேறாவிடில் சுலபமாய் சிக்குவோம்"

சொல்லியபடியே இருட்டில் முன்னேறினாள் ரம்யா. அவள் பின் தொடர்ந்தார் குலாம்ஷா.

ரம்யாவின் அருகே சென்று மெதுவாய் தன் சந்தேகம் கேட்டார் ஷா.

"இத்தனை நேரமாய் இப்பாதை வழியாக வந்து மடக்க அவர்கள் ஏன் வரவில்லை"

விரைந்து நடந்தபடியே பதில் சொன்னாள் ரம்யா.

"நியாயமான கேள்வி."

மெல்லிய ஒலியில் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்? உனக்கு தெரிந்த இரகசிய வழி அவர்களுக்கு மட்டும் தெரியாமல் போகும் என்று நம்பச் சொல்கிறாயோ?"

"நம்பச் சொல்லவும் இல்லை. நம்ப வேண்டாம் என்று சொல்லவும் இல்லை. இப்போது நான் தான் உங்களுக்கு பொஸ். பேசாமல் நான் சொல்லும்படியெல்லாம் கேட்க வேண்டும். சொல்லும் வழியெல்லாம் வரவேண்டும்."

மீண்டும் மெல்லச் சிரித்தாள். இடது கரம் நீட்டி குலாம்ஷாவின் கரம் பற்றி ஆதரவாய்-ஆர்வமாய் அழுத்தி பின் விலக்கினாள்.

"பொஸ்சுக்கு மட்டும்தான் இந்தப் பாதை தெரியும். ஒரு பலவீன நொடியில் அவரால் காட்டப்பட்டதுதான் இந்தப் பாதை."

"யார் உன் பொஸ்."

திடீரென்று அந்தக் கேள்வியைத் தூக்கிப் போட்டார் ஷா.

"எந்த நேரத்தில் எந்தக் கோணத்தில் இருந்து தட்ட - வேண்டும் விசயம் வெளியே வர- என்பதை புரிந்து வைத்திருக்கிறீர்கள் ஷா"

"பாராட்டுக்கு நன்றி ரம்யா. தேவையானது என் கேள்விக்குப் பதில்"

"என்ன அவசரம் ஷா. நான் தான் கூடவே வருகிறேனே."

"இது மரணவிளையாட்டு ரம்யா. யார் இருப்போம். அடுத்த நொடியே யார் மடிவோம் என்பது யாருக்கும் தெரியாது. முந்துகின்றவன் வெல்வான். ம்...சொல் யார் உன் பொஸ்?"

அவசரம் காட்டினார். வளைந்து நடந்த ரம்யா திடீரென்று நின்றாள்.

'சொன்னால் என்ன தருவீர்கள்?'

கிறக்கமாய் குரல் வீசிக் கேட்டாள்.

"என்ன வேண்டும் ரம்யா?"

ஷா கேட்க சுட்டு விரல் நீண்டது. ஷாவின் நெஞ்சு நோக்கி நீட்டி, உறுதி கலந்த கிறக்கமாய், எனினும் சூழல் மறக்காமல் மெல்லிய குரலில் சொன்னாள்.

"நீங்கள்....யெஸ்...நீங்கள் வேண்டும் எனக்கு."

"உனக்கென்ன பைத்தியமா ரம்யா?" சினமாகக் கேட்டார்.

"உண்மை. முற்றிலும் உண்மை. நான் சாவதற்கு முன் மிஸ்டர் ஷா, டியர் ஷா எனக்கு வேண்டும். உறுதி தாருங்கள். நான் உங்களுக்குத் தேவையான விபரம் தருகிறேன். எனக்குத் தேவை நீங்கள். உங்களுக்குத் தேவை விபரங்கள்."

"இப்போது விவாதித்துக் கொண்டிருந்தால் வலையில் மாட்டிவிடுவோம் ரம்யா."

"ஓ.கே. ஆறுதலாக பேசலாம் இப்போது போகலாம்."

சொல்லிவிட்டு நடந்தாள். 'ரம்யாதானா இவள்' என்ற சந்தேகத்தின் பெரும்பான்மைப் பலம் பறிபோன நிலையில் அவள் ரம்யா தான் என்று ஷா இப்போது நம்பினார்.

'ரம்யா நில்'

நின்றாள்.

"எனக்கிருக்கும் சந்தேகம் தீர வேண்டும். அதன் பின் உன் கோரிக்கைகள் பற்றி யோசிக்கலாம்."

"உங்கள் மனத்திரையில் சம்மதம் என்ற வார்த்தையைக் காணவேண்டுமானால் என் முகத்திரை விலக வேண்டும்?"

"யெஸ்"

"ஓகே"

அலட்சியமாய் முகத்திரை விலக்கினாள்.

சத்தியமாய் இவள்..!

ரம்யா...ரம்யா.....

குலாம்ஷாவின் மனது ஒத்துக் கொண்டது.

"என்ன ஷா....உங்கள் மனத்திரையில் சம்மதம் என்ற வார்த்தையை வர்ணக்கலரில் காண முடியுமா?"

அவகாசம் இல்லை. விலையைவிட கிடைக்கும் பொருள் பெறுமதியானது.

யார் பொஸ் என்ற இரகசியம் மாபெரும் உபயோகம்.

எனவே ஷா சொன்னார்.

"சம்மதம் யெஸ். இப்போது பொஸ் யார் என்று சொல் ரம்யா"

"சொன்னால் அதிர்ந்து போவீர்கள் ஷா."

"புதிர் போட இது நேரமில்லைப் பெண்ணே."

"தெரியும்"

"நல்லது. சொல்"

சொன்னாள் ரம்யா. பெயரைச் சொன்னாள். அழகான இதழ்கள் திறந்து ரம்யா அந்தப் பெயர் உச்சரித்தாள்.

எதிர்பாராது அதி வலு கொண்ட மின்சாரம் தொட்ட அதிர்வில் சிக்கினார் ஷா.

■

டி.ஐ.ஜி டென்சில் வணக்கம். இது எங்கள் முதல் மரியாதை.

உமது உறுதி. நிதானமான தெளிவு எமக்குத் தெரியும்.

உம்மோடு மோதுவது எமக்கும் பிடித்தமானது அல்ல.

தூங்கும் புலியை இடறிவிடாதே என்று சொல்வது அறிவீர்கள்.

இப்போது யார் தூங்கும் புலி. யாரை யார் இடறுவது. இடறிவிட்டிருப்பது என்று புரியவில்லை. நீங்களா? நாங்களா?

ஆனால் டென்சில், டி.ஐ.ஜி டென்சில் மன்னித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நண்பர் குலாம்ஷா. தொழில் முறையில் மட்டுமல்ல, நட்புமுறையிலும் உங்கள் உயிர் நண்பர் இப்போது எமது வசம் நலமாய் உள்ளார்.

அத்தோடு உங்கள் இனிய சகோதரி பள்ளி சென்று வரும்போது நாம் அன்பாக பேசி எமது இடத்திற்கு அழைத்து வந்துவிட்டோம்.

கோபமா டி.ஐ.ஜி? பத்திரமாய் உங்கள் பாசமலர் கிடைக்க வேண்டுமானால் இந்த முதல் மரியாதையோடு வழிவிட்டு விலகுங்கள். வேண்டுமானால் ஒரு நல்ல விலை கேளுங்கள். அது புத்தி!"

கடிதம் படித்து வெறுப்பாய். மடித்தார் டென்சில்.

கையொப்பம் இல்லாத கடிதம். கையாலாகாதவர்கள். "உன்னோடு முடியாது. உன் குடும்பத்தோடு விளையாடுகிறோம்" என்று காட்டும் கோழைகள்.

டென்சிலின் உள்ளே சினம் கொண்டு சீறும் மிருகம் பிடரி சிலிர்த்து எழுந்தது.

இனி வேட்டைதான்.

வேகமாய் திரும்பி மதுமிதாவின் வீட்டு முன்னால் போன் நோக்கிப் போகவும்?

அது சிணுங்கவும் சரியாக இருந்தது. தூக்கி எடுத்து

"ஹலோ"

மறுமுனை சிரித்தது.

உரத்துச் சிரித்தது.

(இன்னும் வரும்)

## சிந்தியா பதில்கள்

அடிக்கடி காதல் சம்பந்தமான கேள்விகளைக் கேட்கும் மாணவிகள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

**நதீர் முகமட்- உடத்தலவின்ன.**

அறிந்து கொள்ள ஆர்வப்படுகிறார்கள். தவறல்ல. ஆனாலும் வேகத்தடை விழுந்து விடாமல் தடுக்க உதவும்.

■

கர்நாடக மாநிலத்தில் தமிழ் சினிமாக்களுக்கு தடையாமே ஏன்?

**எஸ்.ரி.சுபையிர்-பொத்துவில்.**

வேறென்ன மொழி வெறிதான்.

■

நமது நாட்டில் தற்போது மலிந்துள்ளது எது?

**ஜனனி மதுரலிங்கம்-கொட்டாஞ்சேனை.**

மரணம். மரணம். மரணம்.

■

கனவுகள் எல்லாம் நனவானால் எப்படியிருக்கும்?

**நலூபா மொஹிடின்-குருநாகல்.**

எதிர்பார்க்கும் சுகம் இருக்காது. அட இவ்வளவுதானா என்று ஆகிவிடும்.

■

நடிகை ஐஸ்வர்யாவின் மணவாழ்க்கை நீடிக்குமா?

**செல்வராஜா-கலதெனிய.**

ஏன் தலைவா ஆரம்பத்திலேயே குணமாய்த்தான் நினைக்க வேண்டுமா?

■

சிரிக்கத் தெரியாதவர்களைப் பற்றி?

**ம. ஸ்ரீகாந்தன்-ரயிகம-இங்கிரிய.**

ஆயுளை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தைத் தவற விடுகிறார்கள். அடுத்தவரை சந்தோசப் படுத்தவும், அடுத்தவர் சந்தோசத்தில் கலக்கவும் தெரியாமல் இருக்கிறார்கள்.

■

டியர்-சிந்தியா! உலகில் யாருக்கு பயப்படுவீர்கள்?

**ஆர்.கே.செல்வநாயகம்-லபுக்கெலை.**

என் உள்ளே இருக்கும் மனச்சாட்சிக்கு.

■

இன்றைய அரசியலின் நிலை என்ன?

**செல்வன் சிவகுமார்-தெரணியகலை.**

கவலைக்கிடம்.

■

அன்றைய பாடல்களுக்கும் இன்றைய பாடல்களுக்கும் இடையே உள்ள முக்கியமான வித்தியாசம் என்ன?

**வி.சுனிதா-கண்டி.**

அன்றைய பாடல்களில் அர்த்தம் இருந்தது. இன்றைய பாடல்களில் சத்தம் இருக்கிறது.

■

நீங்கள் பதில் அளிக்கும் போது என்ன நினைப்பீர்கள்?

**என்.எல்.முஸம்மில்-புதிய காத்தான்குடி-6**

ஏற்ற பதில்தானா இது என்று.

■

சில ஆண்கள் பெண்களைப் போல் முடி வளர்ப்பது பற்றி?

**எம்.தில்லை சிவராசன்-புத்தளம்.**

முடி அழகர்கள்.ஹி...ஹி...ஹி.

■

புதிய நடிகர்களோடு பழைய நடிகைகள் நடிப்பதில்லையே ஏன்?

**ஜீ.எம்.நாசர்-நுவரெலியா.**

நடிக்கிறார்களே. ஜோடியாக நடிக்க முடியாமல் வயது ஏறிவிட்டதால் அம்மா வேசத்தில் நடிக்கிறார்கள்.

■

அன்பு முத்தத்தை யாரோடு பரிமாறிக் கொள்ளலாம்?

**கே.எம்.சன்பரா-மதுரங்குளி.**

அன்பு முத்தத்துக்கு உண்டோ மறுக்கும் முகம். சிவக்காமல் இருக்க வேண்டுமே உமது முகம்.

■

டியர் சிந்தியா! காதல் என்பது எது வரைக்கும்?

**எஸ். சிவயோகம்-அக்கரப்பத்தன.**

இனிய காதலுக்கு இல்லையாமே எல்லை.

■

இஸ்ரேல்-பாலஸ்தீன ஒப்பந்தம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**த.கனேசன்-குருநாகல்.**

காலம் மாறுகிறது. 'கைகலந்தவர்கள் கைகுலுக்கிக் கொள்வதும், நடந்தது நடந்ததாக இருக்கட்டும் நடப்பவை நல்லவையாக மாறட்டும்' என்பதும் புதிய உலக விதியாகி வருகிறது. நாம் மட்டும் வீதியில் நின்று வெடிபட்டுக் கொண்டிருக்கிறோம்.

■

கவிதை புனைவதற்கு ஏட்டுப் படிப்பா அல்லது உலகப் படிப்பா அவசியம்?

**செ. பாலேந்திரா-சாவகச்சேரி.**

இரண்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்தால் மலரும் கவிதை ஒரு அதிசயம்.

■

பாலஸ்தீன - இஸ்ரேல் ஒப்பந்தம் யாருக்கு வெற்றியளித்துள்ளது?

**கிண்ணியா அஸ்ரப்டீன்-கொழும்பு-7.**

சமாதானத்திற்கு.

■


விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கணவனுக்காக மனைவிக்கா இருக்க வேண்டும்?

**ஆறுமுகம் விஜயகுமார்-நுவரெலியா.**


இருவருக்கும். ஒரு தரப்பில் மட்டுமே செய்யப்பட்டால் அது விட்டுக் கொடுத்தல் அல்ல விஜயகுமார்.

■

## பேனா நண்பர் அரங்கம்



**பெயர்:** ஆர். விவேகானந்தன்
**வயது:** 24
**முகவரி:** இல. 42, குடியிருப்பு, வவுனியா.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை, சஞ்சிகை வாசித்தல், வானொலி கேட்டல், நண்பர்களுடன் அரட்டையடித்தல்.



**பெயர்:** எஸ். கமலா
**வயது:** 30
**முகவரி:** 52, மீப்பிலிமான, நுவரெலியா.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை, புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்.



**பெயர்:** எம்.ஆர்.எம். நிஸ்வான்
**வயது:** 18
**முகவரி:** இல. 91சீ, நஸார் ம[illegible]த்தை, உடுகொட, ருக்கஹ[illegible]ல.
**பொழுதுபோக்கு:** வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



**பெயர்:** முகமட் தஸ்லீம்
**வயது:** 24
**முகவரி:** 23/74, கபடாகொடபுர, பேருவளை.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை, வானொலி.

**பெயர்:** மாரியப்பன் சுமதி
**வயது:** 20
**முகவரி:** நில்வெளிகம, நோவூட்
**பொழுதுபோக்கு:** நண்பர்கள் தொடர்பு, வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.


**பெயர்:** பா. கேதாரலோலன்
**வயது:** 19
**முகவரி:** கூழாவடி வீதி, ஆரையம்பதி-02, காத்தான்குடி.
**பொழுதுபோக்கு:** வானொலி, தொலைக்காட்சி, நாவல்கள், சஞ்சிகைகள்.

**பெயர்:** ஏ.சீ. அப்துல் மலிக்
**வயது:** 20
**முகவரி:** 56/4, சேலம் பிரிஜ், நாவலப்பிட்டி.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

**பெயர்:** மதனி இஷாக்
**வயது:** 20
**முகவரி:** இல. 27, பெலஸ்பாத், பேருவளை.
**பொழுதுபோக்கு:** கதைப்புத்தகம், வாசித்தல், நண்பர்களுடன் கடிதத் தொடர்பு.

## சிறுகதை

# மனச் சுவர்கள்




"களைச்சு விழுந்து, ஒருதரும் படாத கஷ்டமெல்லாமல் பட்டு, வெள்ளம் சேறு எண்டு கூடப் பாராமல் குழந்தையளையும் கூட்டிக்கொண்டு கொழும்பிலையிருந்து வந்திருக்கிறம் ஒரு நாயாவது ஏணெண்டு வந்து பார்த்துதோ?"

"நீங்கள் என்னப்பா, அவை எங்கடை பரமவிரோதியள். அவை ஏன் வரப் போகினம்? வரவும் வேண்டாம். உங்களுக்கு நானும் பிள்ளையளும், எனக்கு நீங்களும் பிள்ளையளும் இருக்கிறம் போதாதே?" குசினியிலிருந்து வெளியே வந்தபடி புவனம் சொன்னாள். "இந்தாருங்கோ தேத்தண்ணியைக் குடியுங்கோ."

"பத்துப்பன்னிரண்டு மைலுக்கு அங்காலை வந்து என்னை ஏன் எடுத்தனீங்கள்? உனக்கும் கொத்தானையே கட்டித்தந்திருக்கலாமெல்லே" ஆத்திரத்தை எங்கு கொட்டுவது என்ன பேசுவது எனத் தெரியாமல் திணறிக் கொண்டிருந்தான் சர்வேஸ்வரன்.

"உனக்கு எஞ்சினியர் மாப்பிள்ளை பேச, கொக்கா என்ன சொன்னவ?" அக்காவின் மேல் அளவிட முடியாத ஆத்திரம் புவனத்திற்கு இருந்ததே இந்தக் காரணத்தால் தான். சரியான நேரத்தில் சர்வேஸ்வரன் அவளைச் சீண்டி விட்டான். இவ்வளவு நேரமும் கணவனைச் சமாதானப் படுத்த முனைந்தவள் கணவன் பக்கமே சாயத் தொடங்கினாள். வீட்டிற்குக் குறுக்கே நிற்கும் 'பேர்லின்' சுவரைத் தாண்டிச் சத்தம் போக வேண்டும் என முயற்சித்தாள். ஒரு தொடர்புமில்லாமல் சுவரோடு கதைத்துக் கொண்டாள்.

அந்த இளைப்பாறிய ஆசிரியருக்கு இரண்டு பெண் பிள்ளைகள். இரண்டாவது தான் புவனம். வயது வந்தும் புவனத்திற்கு நீண்ட காலமாகத் திருமணம் நடைபெற வில்லை. இடையில் ஒரு எஞ்சினியர் மாப்பிள்ளை சரிவரலாம் என்றிருந்த போது அக்காதான் குறுக்கிட்டு 'எனக்கு மட்டும் வாத்தியார் மாப்பிள்ளை அவவுக்கு எஞ்சினியரோ' என்று கேட்டு விட்டா. புவனம் அப்போது 'குவைத்' போவப் பொறுமையாக இருந்தாள்.

"பிள்ளை கொஞ்சம் கவனமாகக் கேள். குடும்பத்திலை மூத்த பிள்ளை மற்றப் பிள்ளைகளுக்குத் தாய் மாதிரி. ஆனால் நீ தேவையில்லாத பிரச்சனைக்கு அமெரிக்கா குதிச்ச குதியெல்லே குதிக்கிறாய். உனக்குக் கொத்தானைப் பிறந்த வீட்டுக்கையே சாணை போட்டு வைச்சிட்டம். அவன் படியாமல் தோட்டக்காரனாக வந்திருந் தாலும் உனக்குத்தான் எண்டு எங்கடை குடும்பம் இரண்டும் முடிவு எடுத்துப் போட்டுது. பாவம் சின்னவள் உன்ரை உடன் பிறப்புத் தானே. அவள் நல்லாயிருக்கிறது உனக்குப் பிடிக் கேல்லையோ." வீட்டுப்பிரச்சனையைத் தீர்க்க உலகப் பிரச்சனையையும் வீட்டுக்குக் கொண்டு வந்து தனது அரசியல் அறிவையும் மகளுக்குக் காட்டினார் தகப்பன்.

"இங்கை இஞ்சினியர் மாப்பிள்ளை வந்தால் இப்ப இருக்கிற வாத்தி மாப்பிள்ளைக்கு மரியாதை குடுப்பீங்களோ?" இல்லாட்டில் என்னர அவருக்குச் சீதனம் குடுத்தனீங்களோ?" மூத்தவள் கேட்டாள்.

"பிள்ளை தம்பி சொந்த மருமகன், என்னர ரத்தம். கிட்டத்தட்ட என்னர மகன் மாதிரி."

"உந்த நாடக வசனத்தை விடுங்கோ அப்பா. வாறமாப்பிள்ளைக்குக் குடுக்கிற அதே அளவு சீதனம் எனக்கும் வேணும். அதோடை இங்கை ஒரு எஞ்சினியர் மாப்பிள்ளை வாறதாயிருந்தால் என்னை மறந்து போங்கோ. ஒரு வாத்தியார் அல்லது அதுக்குக் கீழை ஏதாவது தான் வரவேணும். அவருக்கும் அதுதான் விருப்பம்." மூச்சு விடாமல் மூத்தவள் நஞ்சைக் கொட்டிவிட்டு அறைக்குட் சென்றாள்.

ஆயிரமாயிரம் அறிவாளிகளை உருவாக்கும் ஆசிரியத்தொழில் கூட அவளுக்கு அருவருப்பாயிருந்தது. கணவனும் ஒரு ஆசிரியன் என்பது வேறு விடயம்.

தகப்பன் நீண்ட நாட்களுக்கு நேரத்திற்குச் சாப்பாடு, நித்திரை இல்லாமற் தவித்தார். புவனத்தின் திருமண ஏற்பாடு களை அவ்வளவில் நிறுத்திவிட்டு வீடு, வளவு, வயற்காணி, பனைவடலி எல்லாவற்றையும் இரண்டாகப் பிரித்தார். வீட்டிற்கு நடுவில் ஒரு சுவர் வளர்ந்தது.

★★★

அறிக்கைகளும், ஆட்சேபனைகளும் கிழக்கு ஜேர்மனிக்கும் மேற்கு ஜேர்மனிக்கு மிடையிற் பறந்து கொண்டிருந்தன. மக்கள் இணைவதையே விரும்பினார்கள். அரசியல் அவதானிகள் பலவிதமாகக் ஹேஷ்யம் கூறிக்கொண்டிருந்தார்கள். மனித நேயத்தையும் சமாதானத்தையும் விரும்பும் சகலரும் கிழக்கும் மேற்கும் இணைவதையே விரும்பினார்கள்.

பலம் பொருந்திய இரண்டு நாடுகள் இணைந்தால்...? உதட்டளவிற் சமாதானம் பேசுவோர் தமது பணிகளைச் சிறப்பாகச் செய்தார்கள். ஜேர்மனியர்கள் ஓயவில்லை.

உணர்ந்தும் பிரிதல் இருபதாம் நூற்றாண்டில் மடமைத்தனம். அறிக்கைகளும் ஆட்சேபனைகளும் பறந்து கொண்டிருந்தன. சமாதானத்தின் ஜனனத்திற்காக ஜேர்மன் தாய் வலியாற் துடித்தாள்.

★★★

மீண்டும் புவனத்திற்குக் கலியாணப் பேச்சுக்கள் ஆரம்பித்தன. சர்வேஸ்வரன் வீட்டுக்காரர் பாதி வீடு, வளவு, வயற்காணி, பனைவடலி எல்லாம் பெற்றுக் கொண்டார்கள். நீண்ட காலமாக இழுபறிப் பட்ட சகோதரியின் திருமணம் நடைபெறப் போகின்றதே என்று சந்தோசப்பட முடியாமல் இருந்தது மூத்தவளுக்கு. சர்வேஸ்வரன் கொழும்பில் பிரபலமான பாடசாலையொன்றிலும் தனது கணவன் ஊரிலுள்ள பாடசாலையிலும் கற்பிப்பதே காரணமாயிருந்தது. முன்பே தெரிந் திருந்தால் அதையும் ஒரு நிபந்தனையாக்கியிருப்பாள்.

மூத்தவளின் புருஷன் பாவம் ஒரு பசு. நாலைந்து பெண் சகோதரிகளுடன் பிறந்து அவரும் பெண்ணாகி விட்டார். அவர் சர்வேஸ்வரனோடு நல்ல மாதிரிப் பழகினார். அது மூத்தவளுக்குப் பிடிக்க வில்லை.

"எங்கடை சாதி சனம் எண்டாலும் தூரத்திலிருந்து வந்த மாப்பிள்ளை கிட்டத்தட்டக் குறைந்த சாதியள் மாதிரித்தான். அவையோடை உங்களுக்கு என்ன கதை வேண்டிக் கிடக்கு?" அவரும் முந்தானையைப் பிடித்துக் கொண்டார்.

இடையிடையே சிறு சண்டைகள் சச்சரவுகள் சகோதரிகளுக்கிடையிற் தோன்றியன. கணவன்மார் விலக்குப் பிடித்தார்கள். அவர்களுடைய தலைகளும் உருளத் தொடங்கிய போது தாங்களும் கச்சை கட்டிக் கொண்டார்கள். கிணற்றடியில் கொடி பிடித்தாற் சண்டை.... மீன் கழுவித் தண்ணி ஊற்றினாற் சண்டை..... எடுத்ததற்கெல்லாம் சண்டை.... சில வேளைகளில் காரணமின்றிச் சண்டை. புவனத்தோடு இருந்த தாயையும் தகப்பனையும் தன்னோடு இழுத்து வைத்துக் கொண்டாள் மூத்தவள். சர்வேஸ்வரன் கொழும்பு போகும் போதெல்லாம் தனித்தவளானாள் புவனம். மூத்தவளுக்குத் தெரியாமல் தாயும் தகப்பனும் புவனத்தோடு உறவாடினார்கள். புவனம் தனித்திருப்ப தால் சண்டை சச்சரவுகள் ஓரளவு குறைந்தன. சர்வேஸ்வரன் ஊருக்கு வரும் போது வழமை போல் காரண மில்லாமற் சண்டைகள் ஆரம்பித்தன. புவனத்திற்குக் கணவன் துணையே தவிர அவளாகவே சண்டையை ஆரம்பிப்ப தில்லை.

புவனமும், கணவனும் கொழும்பிற்குப் பெயர்ந்தனர். புவனம் இரண்டு பிள்ளைகளுக்குத் தாயானாள். யாரும் வந்து பார்க்கவில்லை.

தாய், தந்தையின் மரணங்களின் போது சர்வேஸ்வரனும் மனைவியும் ஊருக்கு வந்தார்கள். உரிய மரியாதை கிடைக்க வில்லை.

அதன்பின் குழந்தைகளோடு இன்று தான் ஊருக்கு வந்திருக்கிறார்கள். சர்வேஸ்வரனின் ஒரு சகோதரிக்குத் திருமணம். நீண்ட காலத்தின் பின் வந்ததால் வீடு தூசி மண்டிக் கிடந்தது. சமையற் பாத்திரங்கள் பாவிக்க முடியாத வாறு கிடந்தன.

"இங்கை குடியிருக்கிறதெண்டால் இனி முதலிலையிருந்து தொடங்க வேணும் நாங்கள் எங்கடை வீட்டை போயிருப்பம். ஒரு கிழமைக்குத் தானே" என்றான் சர்வேஸ்வரன்.

"ஓமப்பா அதுதான் நல்லது. இங்கை நிண்டால் பொடியளும் பழுதாப் போங்கள்." சொல்லிக் கொண்டே தேனீர்க் கோப்பையை உள்ளே எடுத்துச் சென்றாள் புவனம்.

புவனத்தின் முற்றத்திற்கு வந்தாள் மூத்தவள். "ஓமடி எங்கடை பொடியள் கூடாததுகள் தான். அதுகள் உன்னர கொழும்புப் பொடியளைக் கெடுத்துப் போடுங்கள். கெதியாகக் கூட்டிக் கொண்டுப் போ."

"நான் ஏன் கூட்டிக்கொண்டு போக வேணும்? இது என்னர வீடு. நான் எப்பவும் போவன், வருவன். நீயார் அதைக் கேக்க?" புவனம்.

"வந்தநேரம் தொடக்கம் நீ எங்களைக் கரிச்சுக் கொட்டிக் கொண்டு தான் இருக்கிறாய். சண்டை பிடிக்கவே கொழும்பிலையிருந்து வந்தனி?"

"என்னர வீட்டுக்கை நிண்டு நான் கதைக்கிறதுக்கு நீ ஏன் காதுகுடுக்கிறாய்? ஒட்டுக் கேட்டுத்தானே உன்னர புருஷன் செகிட்டு வாத்தியானவர்."

"உன்னர புருஷன் மட்டும் என்ன, அவற்றை மூக்கும் முழியும்.... செம்பாட்டுக் காலும்....தூ...."

தங்கள் அங்கலட்சணங்கள் வர்ணிக்கப் பட்ட போது ஆண்களும் கலந்து கொண்டார்கள். சண்டை உக்கிரமடைந்தது. குழந்தைகள் நான்கும் வேடிக்கை பார்த்தன. வேலிகளில் புதிதாகத் தலைகள் முளைத்துக் கொண்டன.

தெருவில் ஒரே இரைச்சல். விமானம் ஒன்று தாழப் பறந்தது. மூத்தவள் சண்டையை விட்டு விட்டு வீட்டிற்குள் ஓடினாள் வீட்டைப் பூட்ட. புவனத்தின் குழந்தைகள் இரண்டும் விமானத்தைப் பயமின்றிப் பார்த்தன. மூத்தவளின் பிள்ளைகளின் முகத்தில் பீதி. பதுங்கு குழி வசதி எதுவுமில்லாத புவனமும் கணவனும் பயத்தில் வெளுறிப் போனார்கள். 'செத்தாலும் சாவேனே தவிர உவளெட்டை அடைகலம் போகமாட்டன்' எனப் புவனம் நினைத்துக் கொண்டாள். கண்ணிமைக்கும் நேரத்திற்குள் மூத்தவளின் இரண்டு பிள்ளைகளும் புவனத்தின் இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு வளவின் பின்னால் இருந்த பதுங்கு குழியை நோக்கி ஓடினார்கள்.

★★★

ஓய்வு ஒழிச்சல் இல்லாத ஜேர்மனியர்களின் பேச்சுவார்த்தைகளும் அறிக்கைகளும் உலக சமாதானத்தைத் தலையிற் தூக்கி வைத்துக் கொண்டன. கூத்தாடினார்கள்...கொண்டாடினார்கள்... பழமை வாதிகளின் வாயை அடைத்தார்கள்.

தம்மைப் பிரித்த அந்தப் பாரிய சுவரை இடிக்கத் தொடங்கினார்கள் புதியவர்கள். பழையவர்கள் பிரமித்து நின்றார்கள். 'பேர்லின் சுவர் மெல்ல சரியத் தொடங்கியது!

---

## சிறுகதை

**யார் யாரோ பரீட்சை எழுத விடைத்தாள்களாய் மக்கள்!!**

# ஆண்டுகள் மாத்திரம் புதிது புதிதாய்...

-எம். சுரேஷ்-





குளிர் முள்ளம் தண்டில் ஊசியாய் குத்தியது. ஒன்றுக்குமேல் ஒன்றாய் இரண்டு மூன்று கம்பளிச் சட்டைகள். அதற்கும் மேல் ஒரு சுவீட்டர்...அப்படியும் குளிர் விட்டபாடில்லை. அவசர அவசரமாக தேனீரைத் தொண்டைக்குள் கொட்டிக் கொண்டு நேரத்தைப் பார்த்தான் ரவி. நேரம் அதிகாலை 4 மணி.

முத்தையா இன்னும் சுருண்டு படுத் திருந்தார். அவர் போர்த்திக் கொண்டு தூங்கும் விலையுயர்ந்த கம்பளிப் போர்வை ரவியை பெருமூச்சுவிட வைத்தது.

'ம்..... முத்தையா அண்ணனுக்கென்ன பிள்ளைகுட்டி இல்லாதவர்.... 8 மணித்தியால வேலை அவருக்குத் திருப்தியாப் போதும். ஆனா எனக்கு.....'

ரூமில் தங்கியிருக்கும் பிரம்மச்சாரியான முத்தையாவைப் பார்க்க அவனுக்குப் பொறாமையாக இருந்தது.

'ச்சே.... முத்தையா அண்ணனை மாதிரி இருக்காமல், கலியாணத்தையும் கட்டி, பிள்ளைகளையும் பெத்து.... நான் எவ்வளவு பெரிய முட்டாள். பைத்தியக்காரன்...'

தன்னைத்தானே நொந்து கொண்டான். இனியும் தாமதித்தால் எட்வட் முதலாளியின் கார் கழுவும் சந்தர்ப்பமும் கைநழுவிப் போகும்.

ஊர் சனமெல்லாம் இங்கே வந்து நிறைந்ததால், இப்போது இங்கேயும் வேலையில்லாப் பிரச்சனை... ஒருவருடைய வேலையை இன்னொருவர் தட்டிப் பறிக்கச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் ஊர்களில் பெரிய்....ய, பெரிய வேலைகள் செய்த மனிதர்கள்கூட, இங்கே பேப்பர் டிலிவரி செய்வதற்கும், கார் கழுவுவதற்கும் போட்டி போட்டுக்கொண்டு, இரவுபகலாக ரோட்டில் அலைவதைப் பார்க்கும் போது வேதனைதான். இருப்பினும் என்ன செய்வது....

ஊரிலும் இருக்க முடியாத நிலை. தொழில் செய்ய முடியாத நிலை. அப்படியே தொழில் செய்தாலும் பொருள் சேர்க்க முடியாத நிலை. ஆகவே யாரை, யார் குற்றம் சொல்வது? விசாரித்துப் பார்த்தால் எங்கள் நாட்டில் யாருமே குற்றம் செய்வதில்லை என்றுதான் பதில் வரும். அதுதானே நம் நாட்டின் அடிப்படைப் பிரச்சனை!!

நினைவுகள் அலைபாய கதவைச் சாத்திவிட்டு வீதிக்கு வந்தான். வீதி வெறிச் சோடிக்கிடந்தது. குளிர்காலமாகையால் வீதியின் இருமருங்கிலும் பனித்துளிகள் சேர்ந்து- நம்மூர் உப்பளத்தில் உப்புக் குவித்திருப்பதைப் போல்- வெள்ளையாக, குவியல் குவியலாய் பரந்து கிடந்தது.

காலில் அகப்பட்ட வெற்று "விஸ்கி" டின்களை வேகமாய் ஓங்கி உதைத்தபடியே நடக்க ஆரம்பித்தான் ரவி.

இன்னும் சிறிது தூரத்தில் இருக்கும் பாருக்கு அடுத்ததாக இருப்பதுதான் எட்வட் முதலாளியின் வீடு. அவர் ஒரு வெள்ளைக் காரத் தொழிலதிபர்... தினம்தோறும் ரவி சென்று காரைக் கழுவி விட்டால்தான் அவருக்கும் ஒரு திருப்தி.

ரவி நேரத்தைக் கருத்தில் கொண்டு நடையைத் துரிதப்படுத்தினான். எதிரே ஒரு வெள்ளைக்காரப் பொலிஸ்காரன். பயப்படத் தேவையில்லை. அவனுக்கு அநாகரிகமாகப் பேசத் தெரியாது. அதற்கும் மேலாக அவனுக்கு "மனிதரை" அடையாளம் காணத் தெரியும்! மதிக்கவும் தெரியும்!

வழமை போல் எதிரே வந்த ஆறுமுகம் மிக உற்சாகமாக "குட்மோனிங்" சொல்லி விட்டு நகர்ந்தார். பதிலுக்கு சும்மா தலையாட்டிய ரவியின் மனம் சங்கடப்பட்டது.

ஆறுமுகம், ரவி படித்த பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். வடமராட்சிப் பகுதி மக்கள் மத்தியில் ஆறுமுகம் மாஸ்டருக்கு ஒரு தனிமதிப் பிருந்தது. அப்படி இருந்த மனிதர் "சுவிஸ்" ஆசையால் இங்கு வந்து, 8ம் வகுப்புக்கு மேல் படிப்பு ஓடாமல் ஓடிவந்த நான், செய்வதைப் போலவே பேப்பர் கட்டுக்களை சுமந்து கொண்டு ரோடு ரோடாக அலைவதைப் பார்க்க மனவருத்தம் தான்.... இதையெல்லாம் நாங்கள் விரும்பியா செய்கிறோம்... இல்லையே?

எட்வட் முதலாளியின் முன் கேட்டைத் திறந்து கொண்டு, உள்ளே சென்று முன்பக்கம் நிறுத்தி வைத்திருந்த காரை வேகமாகக் கழுவி முடித்தான் ரவி. கார் பளபளத்தது.....அதன் மேல் ஆசையாய் கை வைத்துப் பார்த்தான். பெருமூச்சு விட்டான். இந்தக் காருக்கு முன்னால் நின்று எடுத்த போட்டோவைத்தான் கடைசியாக "நான் சொந்தமாகக் கார் வாங்கிவிட்டேன்" என்ற குறிப்போடு, அம்மாவுக்கும், அனுப்பி யிருந்தான்.

வீட்டுக் கதவை திறந்து கொண்டு வெளியே வந்த எட்வட் மகிழ்ச்சியால் "குட்மோனிங்" சொன்னார். பதிலுக்கு ரவி தலையாட்டியதும்

"என்ன ரவி, நாளைக்குப் புது வருசம்..... நீ இந்த வருசமும் ஊருக்குப் போக வில்லையா? உன் மனைவி, குழந்தைகளைப் பார்க்க உனக்கு ஆசையாக இல்லையா?"

ஆங்கிலத்தில் அவர் கேட்டதும் ரவி திடுக்கிட்டான்.

என்ன? புது வருஷமா? போன புதுவருஷம் போய் கொஞ்சநாள் கூட ஆகவில்லை. அதற்குள் இன்னொரு புது வருஷமா? திகைத்துப் போனான் ரவி.

'மனைவி, குழந்தைகளைப் பிரிந்து 6 ஆண்டுகள்..... ச்சே..... குழந்தைகளுக்கு ஒரு புதுவருட வாழ்த்தாவது போடமுடியாமல் போயிற்றே' வருந்தினான்.

புது வருடத்திற்கு ஊருக்குப் போனால் இங்கு திரும்புவது இயலாத காரியம். அப்படியே மனைவி, குழந்தைகளை இங்கே வரவழைக்கலாம் என்றால் அதற்கும் வசதி யில்லை. ஊர் நிலமை சரிப்பட்டாலாவது ஒரேயடியாக ஊருக்கே போய்விடலாம். ம்.... புது வருடங்களுக்கு மாத்திரம் குறைவே இல்லை..... நாங்களும் நமது நாடும், நாட்டு நிலையும்தான் இன்றும் பழமையாகவே.....

புது வருடம்.... அதை நினைக்க அவனுக்கு 'அமைதிக்கால புது வருடங்கள்' சித்திரவதை செய்தன.

"நாளைக்கு புது வருடம். அதனால் நாளைக்கு நீ கார் கழுவ வரவேண்டாம். ஒய்வாக, சந்தோஷமாக இரு" கூறியபடியே கைகளுக்குள் சில தாள்களைத் திணித்துவிட்டு காரில் ஏறிக் கொண்டார் எட்வட் முதலாளி.

ரவி கைகளைப் பிரித்துப் பார்த்தான். வழமையாகத் தரும் தொகைக்கு மேலதிகமாக 50 டொலரைத் தந்திருந்தார். இது புதுவருட அன்பளிப்பாக இருக்கும்.

தான் 3 மாதங்களுக்கு முன் வீட்டுக் கனுப்பிய பணத்தை நினைத்துப் பார்த்தான். அது மிக நீண்ட தூரம் கடந்து கொழும்புக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். ஆனால் கொழும்பைத் தாண்டி, கிளாலிக் கடலைத் தாண்டி ஊருக்குப் போயிருக்குமா என்பதை சிந்திக்க அவனுக்கு வலுவில்லை.

இந்த 50 டொலரை என்ன செய்வது? இந்தச் சிறிய தொகையை வீட்டுக்கனுப்பவும் முடியாது.

சரி.... வீட்டுக்குக் காசை மிச்சப் படுத்துவதற்காக, இங்கே வந்த நாள்தொடக்கம் தினம்தோறும் பாணையும், ரொட்டியையும்தான் உண்கிறேன். இன்றைக் காவது ஒரு ரோஸ் சிக்கனும், சில பியர் டின்களும் வாங்கிக் கொண்டு ரூமுக்குப் போவோம்.

நினைத்தபடியே இரண்டு தெருக்களைத் தாண்டி, அந்த பழக்கமான உணவு விடுதிக்குள் போக முற்பட்டவன், "அண்ணே! வாங்குங்கோ, வாங்குங்கோ, ஊர்ப்புதினங்கள் நிறைஞ்ச சிலோன் பேப்பர்! சிலோன் பேப்பர்!" ஒருவன் பத்திரிகை விற்றுக் கொண்டிருந்தான்.

"ஊர்ப்புதினங்கள்" அந்த ஒரு சொல்லுக்காகவே, பறந்து சென்று ஒரு பத்திரிகையை ஆவலாய் வாங்கியவன் பிரித்தான். 'இருபகுதிக்கும் மோதல்; இடையே அகப்பட்ட 5 பொதுமக்கள் பலி' தலையங்கத்திற்குக் கீழே, தலை அங்கம் சிதறிய நிலையில் சில மனித உடல்கள்!

பட்டென்று பத்திரிகையை அடித்து மடித்தவன், அதைக் கசக்கிப் பைக்குள் திணித்தபடி உணவு விடுதிக்குள் நுழைந்தான். அங்கே அவன் ரோஸ் சிக்கனையோ, பியர் டின்களையோ வாங்கவில்லை. பதிலுக்கு இரண்டே இரண்டு ரொட்டிகளை மாத்திரம் வாங்கிக் கொண்டு ரூமை நோக்கி நடக்க ஆரம்பிக்கிறான்!! மீண்டும் பனி பெய்கிறது...!

## சிறுகதை

# வயசு என்ன ஆச்சு?

–முகில் வண்ணன்–

"எல்லாம் போச்சு மானம் போச்சு மரியாதை கௌரவம் எல்லாம் போச்சு. இனி என்னத்திற்கு வாழ்வது? இதைவிட செத்துப் போகலாம்" என்று சொல்லிச் சொல்லி நெஞ்சில் அடித்துக் கொண்டாள் அருந்ததி.

இந்திராணி இப்படிச் செய்வாள் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. பெற்ற தாயைவிடப் பெரிதும் பாதிக்கப்பட்டவள் அருந்த்திதான். தாய்க்கும் கவலைதான். அழுது கொண்டுதான் இருக்கிறாள். ஆனால் அருந்ததிக்குத்தான் அதன் பாதிப்பு அதிகம். அவளால் அதைத் தாங்கிக் கொள்ள வில்லை.

கொழும்பில் எத்தனை கௌரவமாக வாழ்ந்து வருகிறாள். ஒரு கணத்தில் அவற்றை எல்லாம் பாழடித்து விட்டாளே, இனி எப்படித் தலை நிமிர்ந்து நடக்கப் போகிறாள். கொழும்பில் எந்தக் கோயில் விழா என்றாலும் அவளுக்கு அழைப்பு இருக்கும். எந்தப் பெரிய மனிதர் வருகிறார், வரவேற்பு என்றாலும் அவளே முன் நிற்பாள். எந்த மந்திரி எந்த விழாவில் கலந்து கொள்கிறார் என்றாலும் அங்கு அருந்ததி சமூகமளித்திருப்பாள்.

இத்தனைக்கும் அவளை உயர்த்தியது அவளது வாழ்க்கை முறையே! எல்லாரும் தான் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் கிடைக்காதது அருந்ததிக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது. சகோதரிக்காகத் தன் வாழ்வையே தியாகம் செய்து இன்று வரை தூய்மையாக வாழ்ந்து வருகிறாளே. இது ஒன்று போதாதா?

கன்னியாக வாழும் போது எத்தனை களங்கம்தான் ஒரு பெண்ணுக்கு வருகின்றது. அத்தனையும் அருந்ததிக்கும் வந்தது. அவற்றை எல்லாம் தாங்கிக் கடந்து வந்து விட்டாள். அதனாலே பெருமை மிக்க இவ்வாழ்வு கிடைத்து இருக்கிறது. அவற்றைக் கண்டு துவண்டு சோர்ந்து போயிருந்தால் இன்று இத்தனை பெருமை மிக்க வாழ்க்கை அமைந்து இருக்க முடியுமா?

–அதிலே தான் மண்ணை அள்ளிப் போட்டு விட்டாள். ஆமாம். யாருக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்தாளோ? யாருக்காகப் பாடுபட்டு உழைத்து பணம் சேர்த்து நல்ல வாழ்வு வாழ வைக்க வேண்டும் என ஆசைப்பட்டாளோ?– அவளே முகத்தில் கரி பூசி விட்டாள்.

ஆமாம் அருந்ததியின் அக்காவின் மகள் இந்திராணி வீட்டை விட்டு ஓடி விட்டாள்.

இதைத்தான் அவளால் ஜீரணிக்க முடியவில்லை. இத்தனைக்கும் அவளுக்கு வயது பதினாறுதான். பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிறாள். வயசுக்கு வந்து இன்னும் மூன்றுவருடம் கூட ஆகவில்லை அதற்கிடையில் இப்படி ஒரு காதலா?

குடும்பத்தின் மானம் கௌரவம் எல்லாம் நன்கு அறிந்தவள். அவற்றை எல்லாம் உதறி எறிந்து விட்டு ஓடி விட்டாளே, எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்! நேற்று வரை 'ராணி' 'ராணி' என்று தோளிலும் மார்பிலும் போட்டு வளர்த்த குழந்தை இப்போது இங்கில்லை. அவளுக்குப் பெயர் மட்டும் ராணி இல்லை. ராணியின் உபசாரமே வீட்டில் கிடைத்தது.

பாடசாலைக்குப் போக வேன். ரியுசனுக்குப் போக ஆட்டோ. கோயிலுக்குப் போகப் பாதுகாப்பு. கிட்ட எவரும் நெருங்க முடியாத பாதுகாப்பு. வீட்டில் அவள் விரும்புவது தான் சாப்பாடு, வைத்ததுதான் சட்டம். அவளுக்கு எந்தக் குறையும் இல்லாமல் ராணி போலவே வீட்டில் வாழ்ந்தாள். இப்படிப் பட்டவள் ஓடி விட்டாளே என்றால் எப்படி இருக்கும். இதனை எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும் அருந்ததியால்.

1987ல் இந்தியப் படைகள் வந்ததில் நடைபெற்ற யுத்தத்தில் யாழ்ப்பாணத்தில் பலருக்கு இழப்புகள் ஏற்பட்டன. அப்படி இழப்பு ஏற்பட்டவர்களில் ஒருத்தியாக வசந்தி தனது மூன்று குழந்தைகளுடன் விதவையாகக் கொழும்புக்கு வந்து சேர்ந்தாள். அண்ணன் மார் இருவர் கூட வைத்திருக்க, அருந்ததி- தங்கையும் கொழும்பிலே வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

பத்து வயதுக் குழந்தையான இந்திராணியும் தம்பிமார் இருவருடனும் வந்த தமக்கையைப் பார்த்ததும் உருகிப் போனாள் அருந்ததி. இனித் தான் அக்காவுக்காகவே வாழ்வது என்று தீர்மானித்தாள். அக்காவின் குழந்தைகளை வாழ வைப்பதே இனித் தன் வாழ்வின் இலட்சியம் என்று சங்கற்பம் பூண்டு கொண்டாள்.

ஆண்டுக்குப் பின் ஆண்டு கடந்தது. "வயது ஏறுகிறது திருமணத்துக்குச் சம்மதம் தா. நாங்கள் வசந்தியையும் பிள்ளைகளையும் பார்த்துக் கொள்கிறோம் நீ திருமணத்தை முடி" என்று அண்ணன்மார் வற்புறுத்திப் பார்த்தனர். ஆனால் அவள் அசையவே இல்லை.

அவளுக்கு ஆண்கள் மீதே நம்பிக்கை இல்லை. அண்ணன்மார்தான் மணம் முடித்தபின் மனைவிமாரின் பேச்சைக் கேட்டு அக்காவை நடுத்தெருவில் விட்டு விட்டால்...? தனக்கு வருகின்ற கணவனும் தன்னை கட்டுப்படுத்தினால் அக்காவினதும் பிள்ளைகளினதும் கதி? ..... அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. அதன் முடிவே திருமணத்தை அவள் கைவிட்டது. தங்கை திருமணம் முடிக்காமல் தாங்களும் முடிப்பதில்லை என்று அண்ணன்மார் இருவரும் கூட திருமணத்தை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தனர்.

வசந்தியும் பிள்ளைகளினதும் வாழ்வுக்காக இவ்வாறு மூன்றுபேரும் திருமண வயதைக் கடந்தும் திருமணத்தை வெறுத்து வாழ்ந்து வருகின்றனர். அத்தனை பெரும் பாக்கியம் பெற்ற– பேறு பெற்ற பிள்ளைகளாக வளர்ந்து வந்தனர் வசந்தியின் மக்கள். அவ்வாறு வளர்ந்து வந்தவர்களில் ஒருத்தியான இந்திராணி தான் இன்று வீட்டை விட்டு ஓடி விட்டாள்.

இத்தனைக்கும் அவளுக்கு வயது பதினாலுதான்.

இதைத்தான் அருந்ததியால் ஜீரணிக்க முடியவில்லை. அவளுக்கென்ன வயசு வந்து விட்டது. கல்யாணம் தள்ளிப் போடப்பட்டதா? அல்லது யாரும் இல்லை- வேண்டாம் என்றார்களா? பாடம் படிக்கும் வயதில் இப்படி ஏன் நடந்து கொண்டாள்?

அவனோ?– பக்கத்து வீட்டு ஊதாரிப் பையன். வேலை வெட்டி இல்லாதவன். வெள்ளையும் வெள்ளையும் அணிந்து கொண்டு காலையில் கோல் பேஸ் 'கிரிக்கெட்' விளையாடி வருவான். இது அதிகமாக அவள் பாடசாலைக்குச் செல்லும் நேரமே அவன் 'பேட்'டுடன் திரும்பி வரும் நேரமுமாக இருக்கும். இதைத் தவிர அவன் வீட்டுக்கு வந்ததென்றால், அவளுடைய பூப்பு நீராட்டு விழாவுக்கு வீடு சோடிக்கத்தான்.

எப்படித் தொடர்பு ஏற்பட்டது? எப்படி உறவு வளர்ந்தது? எப்படி இத்தனைக்கு- ஓடிப் போகும் அளவுக்கு வளர்ந்தது?

அது சரி இப்போது படிப்பையும் விட்டு விட்டு அவனுடன் ஓடிப் போகும் அளவுக்கு என்ன அவசரம் வந்தது?




இவை எல்லாம் புரியாத புதிராக- விடைகாண முடியாத விடையாக அருந்ததிமுன் வந்து நின்றன.

இந்திராணியைத் தனது குழந்தை என்றும், அக்கா குழந்தை என்று வளர்ப்பதாகவும், அதற்காகவே தான் மணம் முடிக்காமல் இருப்பதாகவும்- இப்படித் தான் கெட்டுப் போனவள் என்று கூட எத்தனை களங்கத்தை அவள் மீது கூறினார்கள். இதையெல்லாம் தாங்கிக் கொண்டு அவர்களை ஆளாக்க வேண்டும் என்று பாடுபட்டாளே. அதுக்குக் கிடைத்த பரிசு இதுதானா? எண்ண எண்ண மனசு வெடித்து விடும் போல் இருந்தது.

விஷயம் அறிந்த பொலிஸ் பொறுப் பதிகாரி வீட்டிற்கு வந்து விசாரித்தார். பொடியனைப் பிடித்து அடித்தார். அடைத்தார். ஆனால் இந்திராணி வீட்டுக்குத் திரும்ப மறுத்து விட்டாள்.

அம்மா கெஞ்சிப் பார்த்தாள். சித்தி காலில் விழாத குறையாகக் கேட்டாள். மாமன்மார் இதமாகக் கேட்டனர். "அழைத்து வாருங்கள் நாளைக்கே நான் எனது மகனுக்கு முடித்து வைக்கிறேன்" என்றார் ஒரு மாமா. ஆனால் அவள் வந்தால் தானே!

இத்தனைக்கும் அவளுக்கு வயது பதினாறுதான். காதல் என்றால் என்ன என்று தெரியுமோ என்னவோ? வெறும் உணர்ச்சிப் பிரவாகம் அவளை ஆட்கொண்டதோ? கவர்ச்சி கவர்ந்து கொண்டதோ? வாழ்க்கை என்றால் என்னவென்றும், குடும்பம் என்றால் எப்படி, வாழ்க்கை நடத்துவது எப்படி என்றும் அவளுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை.

அப்படித் தெரிந்திருந்தால் இப்படிக் காலடி எடுத்து வைத்திருக்க மாட்டாள். தனது குடும்பத்தைப் பற்றி ஒரு கணம் சிந்தித்து இருப்பாள். இருந்தால் இந்த விபரீதம் ஏற்பட்டிருக்குமா?

துக்கம் விசாரிக்க வந்தவர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் அருந்ததி அறையில் முடங்கிக் கிடந்தாள். அவளது மானம் மரியாதை எல்லாம் காற்றில் பறந்து விட்டதாகவே உணர்ந்தாள். இத்தனை காலமும் ஏற்படாத சோதனை வாழ்க்கையில் இப்போது ஏற்பட்டு இருக்கிறது. அதனால் நிலை குலைந்து போனாள்?

மாதம் ஒன்று கடந்து இருக்கும்.

அருந்ததி வெளியுலகுக்கு காலடி எடுத்து வைத்த போது எல்லோரும் மூக்கில் விரலை வைத்தனர். இது அருந்ததியா? என்று.

செல்வியாக வாழ்ந்து, கட்டுமஸ்தாக- கவர்ச்சியான உடம்பு இப்போது தளர்ந்து பாதியாக இருந்தது. எலுமிச்சைப் பழ நிறம் ஒளி வீசிக் கொண்டிருக்கும். இப்போது அதுவும் மங்கியதாக இருந்தது. அதைப் பார்த்ததுமே அவளை அந்தச் சம்பவம் எப்படிப் பாதித்து இருக்கிறது என்று தெரிந்தது.

அந்த நாய் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்று இருந்து விட முடியவில்லை. பாடுபட்டது, உழைத்தது, சேர்த்தது எல்லாம் அவளுக்காகத்தானே. எல்லாவற்றையும் உதறிவிட்டுச் சென்று விட்டாளே? அவனுடன் எப்படி வாழப் போகிறாள்?

இரண்டு மாதம் சென்று இருக்கும்.

அவளைப் பற்றி செய்தி எதுவுமே அறிய முடியவில்லை. எங்கிருக்கிறாள் என்ன செய்கிறாள் என்று தெரிய வில்லை. அறியவேண்டும் என்ற ஆர்வம் இல்லாமல் இல்லை. ஆனால் எப்படிக் கேட்டுத் தெரிவது? போனால் போகட்டும் என்று இருந்து விட வேண்டியதுதானே! பெற்ற மனமும் வளர்த்த மனமும் கேட்குதில்லையே! அதுதானே பாசம்.

அது அவளுக்கில்லையே!

மூன்று மாதம் கடந்து விட்டது.

இப்போது மாப்பிள்ளையிடம் இருந்து செய்தி வந்தது. இந்திராணிக்குரியதை எல்லாம் ஒப்படைத்து விடும் படியும், சீதனத்தைத் தரும்படியும் இல்லையேல்- அவளைத் தான் இன்னும் திருமணம் முடிக்கவில்லை என்றும் கெட்ட நிலையிலே விட்டு விடுவேன் என்றும் செய்தி எட்டியது.

பேதை நெஞ்சங்கள் துடித்தன. போனால் போகட்டும் என்று விட்டுவிட முடியுமா! குடும்ப கௌரவம் என்னாவது? நடுத்தெருவில் அவள் நாதியற்று அலைவதா? எப்படியாவது அவள் வாழ்ந்து போகட்டும் என்றால் இப்போது அது வேறு வடிவம் எடுக்கின்றதே!

அருந்ததி துடித்துக் கொண்டிருந்தாள்.

பெற்றவள் "தங்கச்சி இனி நீ அவளைப்பற்றி இங்கிருந்து எதுவும் கதைக்கக்கூடாது. பெற்றவள் நானே தலை முழுகி விட்டேன். என்னிடம் எதுவுமில்லை கொடுப்பதற்கு. இனி நீ எதுவும் செய்யத் துணிந்தால் எனது பிணத்தைத்தான் முதலில் பார்ப்பாய்"– என்று தீர்மானமாகக் கூறினாள்.

அருந்ததி....?

(யாவும் கற்பனை)

---

### மனித உரங்கள்

என்-
கண்ணீரின் கலரில்
இத்தேசம்
காணாமல் போனது.
★
உயிர்களை விற்று
இனவாதம் வாங்கி
மனிதர்கள்
இங்கு வாழத்துடிக்கின்றனர்.
★
வன்மச் செடிக்கு
குரோதப் பசளைகள்-
குருதியாய் இடப்படுகின்றன.
★
ஒரு நாயின்-
சுதந்திரம் கூடவா
மனிதனுக்கு இல்லை?
★
களை பிடுங்குவதைப் போல்-
தலை கொய்வதும்,
தணலிடுவதும்,
இப்போது தர்மமாய் போனது.
★
சாத்திய வீட்டில்
சவங்களாய்
வாழ்வதை விட
சமாதியாய் சரிவது
சந்தோஷமானது.
★
எப்போது உடையும்
என் விலங்கின் பூட்டு?
நான்-
தளைகளை உடைத்தால்
பயங்கரவாதி;
மௌனமாய் அமர்ந்தால்,
அஹிம்சாவாதி.
அதனால்-
விடுதலை எனக்கு
விலாசம் தரவில்லை.
★
இருந்தும் என்ன-
ஈழத் தொட்டிலில்,
ஓர் அகதிக்குழந்தையாய்
அழுது வடிப்பேன்.
★
யுத்தக் காற்று
தாலாட்டிச் செல்ல
யுகங்களை தின்று
நானும் ஒரு நாள்,
இந்த மண்ணின் பசிக்கு
உரமாகிப் போவேன்.

ஒட்டமாவடி அறபாத்.



### சிதறிய அபலைகள்

நாங்கள் எடுப்பிலே
கை ஏந்திழைகள்
உதடுகளை முத்தமிடும்
எங்கள் உடல்கள்
அக்கினியின் ஸ்பரிசத்தில்
அஸ்தியாக மாறும் போது
கடலில் கரைக்கப்படாத
எங்கள் அஸ்திகள்
காற்றில் மிதப்பதால்
அருவங்களாய் அலையும்
நாங்களும் அவனியில்
என்றும் அபலைகளே!

திருமதி மலர்விழி கார்த்திகேசன்.
வவுனியா.

### "முரண்பாடு"

வெள்ளைப் புகைக்குள்
இத்தனை சுகமா...!
அப்பப்பா..."
மனிதன் சொன்னான்.
★
"மரணத்தின் வாசலுக்கு
நீ- வழிகண்டுவிட்டாய்...."
போதைப் பொருள் சொன்னது.

முத்துக்குமார் ரமேஷ்
கொழும்பு-15.





### "கட்டிலை விட்டு- இறங்காத கவிதை"

உன்னை-
தேடிக்கொண்டிருக்கிறேன்
இந்த
இரவின் மடியில்...!
•
ஞாபகக் கனதியால்
இருதயத்தில்
ஓட்டை விழப் போகிறது.
•
ஒரு-
நிலாக்கால
பின்னிரவில் நீயும், நானும்
என்ன?
பேசிக் கொண்டிருந்தோம்
ஞாபகம் இருக்கிறதா....?
•
முத்தம் சூழ்ந்த
மங்கிய வெளிச்சத்தில்
இரவுகள் கூட
ஏகாந்தமாய் இருந்ததே.....
•
உந்தன்-
தாவணித்துண்டு
என் தலையிலிருந்த.
பனியின் ஈரத்தை
ஒத்தி எடுக்கையில்.....
என் உயிர்-
நீண்டு போனது!
•
நீ-
சொல்லாமல் போனசேதி
என்
இருதயக் கடுப்பை
அதிகமாக்கிவிட்டது...!
•
நீ-
மறுபடியும் இங்கு
எப்போது வருவாய்...!

பொத்துவில் ஏ.மஜீத்.

## தேன் கிண்ணம்

### இலட்சிய கவிஞன்!

காலமெல்லாம் எழுதியதை
கையிலேந்தி!
கடைத் தெருவில் நான் நடந்து
களைத்துப் போனேன்.
கண்டவரோ...! எது?
கவிதை என்று கேட்டார்.
காதலில்லை வேண்டாமென்று
கரத்தில் தந்தார்.
"காம ரசம் இருந்தால் தான்
காசு சேரும்...!
கண்டறியா தத்துவமா? சோறு போடும்?"
கன கதைகள் கூறியே பதிப்பகத்தார்
கதவுகளை சாத்தியே
கடுகடுப்பார்.
கவி மனமோ
கண்ணீரில் நின்று வேகும்!
கவியரசன்
கல்லறையை பார்த்து நோகும்!
"கண்டீரோ? இலக்கியத்தின்
கதியை" என்று
கரம் கூப்பி...அடி தொழுது
கால்கள் சோரும்!
கடியதொரு வறுமையென்னை
கண்ட போதும்
காலமெல்லாம் ஏழையென
கழித்த போதும்
கன்னிரசம் பிழிவதற்கு
கற்பனையை
கடுகேனும் பயன்படுத்தா(க்)
கவஞன் யானும்-என்
கலைமீது சத்தியத்தை செய்து நிற்பேன்!

"முத்து மாதவன்"



### போதையினை நாடாதே!

போதையினை நாடாதே பொசுங்கிப் போவாய்
பொருள் செல்வம் அழிந்தே நீ நசுங்கிப் போவாய்!
நீதியினை நீ மறந்து, நேர்மையற்று
நெஞ்செங்கும் பாவத்தைச் சுமப்பாய்! வாழ்க்கைப்
பாதையிலே பள்ளங்கள் பெருகக் காண்பாய்!
பருகுகின்ற மதுவாலே உருகிப் போவாய்!
ஆதலினால் செப்புகிறேன், அன்புத் தோழா
அடிமையென போதைக்கு ஆகிடாதே!

பெற்றோரின் பேச்சுதனை தட்டிச் செல்வாய்;
பெரியோரை மதிக்காமல் வெட்டிச் செல்வாய்!
குற்றமெனும் ஆற்றுக்குள் குதித்து நிற்பாய்;
குடும்பத்தைக் குடியாலே மிதித்து நிற்பாய்!
பற்றுதலே இல்லாமல், வாழ்க்கை தன்னைப்
பாழாக்கிப் பரிதவிப்பாய்! இடிந்தும் போவாய்!
சற்றேனும் புத்தியுடன் இயங்க மாட்டாய்!
சாலையெலாம் பைத்தியமாய் அலைந்து செல்வாய்!

சத்தியத்தைச் சாகவைப்பாய்! வாயில் பொய்யை
சளைக்காமல் செப்பி நிற்பாய்! மயக்கங் கொண்டு
நித்திரைக்குள் மூழ்கி நிற்பாய்! நெஞ்சில் பாவ
நீரினையே சுரக்க வைப்பாய்! குருதி வற்றிச்
செத்திடுவாய்! குடியாலே இல்லறத்தைச்
சீரழிப்பாய்! உடலிலுள்ள இளமை யென்ற
சொத்துதனை நாசமாக்கி நலிந்து போவாய்!
[illegible]க்கின்ற போதையினால் அழிந்து போவாய்!

காத்தான்குடி அனு.

### ஏனிந்த யாகம்

ஓ.... கிளாலியே
எங்கிருந்து வந்தாய்
மரணப் பொறியாய்!
எந்தப் புதையலிற்காய்
இத்தனை நரபலி?
உன் யாகத்தில்
ஆகுதியாய் மனிதர்களா?
அவர்தம் மரண
ஓலங்களே சங்கொலியா?
இல்லை.....
பெயர் விளம்பரத்திற்காய்
கருத்தின்றிப் பிதற்றும்
இன்றைய அரசியல்வாதிகள்போல்
நீயும் ஒரு
விளம்பரம் தேடுகின்றாயா?
பிஞ்சாய்ப் பழமாய்
இன்னும் எத்தனை
வேண்டும்?..
எப்போது தீரும்
உன் மரணப்பசி?


செ. ஜெயச்செல்வி

### –யுத்த மரத்து நிழல்–

போதிமரத்து ஞானோதயம் போல்
யுத்த மரம் வளர்த்த இந்த
மிருக மனிதர்களுக்கும்- ஒரு நாள்
ஞானம் உதிக்கும்.
முன்பொரு காலத்தில்
யுத்த விருட்சம் வளர்த்து நின்று
குண்டுகளையும் ரவைகளையும்
புஷ்பித்தவர்கள்-அன்று
குந்தியிருந்து அழுவார்கள்
தேசத்தைக் கொன்றுவிட்டு,
இறந்து போன காலங்களுக்காய்
சூன்ய நிகழ்காலங்களில்
சோகம் அனுஷ்டிப்பார்கள்
மனிதர்களே இல்லையெனும்
நிலையில்-ஏகாந்த வெறுமையில்
ஏக்கமாய் முணுமுணுப்பார்கள்
"நாம்-கொன்று தீர்த்தவர்களை
எல்லாம் முழுதாய்
வெறுக்கவுமில்லை-எம்மைச்
சார்ந்து நின்றவர்களைக் கூட
ஒழுங்காய் நேசிக்கவில்லை...."
அப்போதைய
யுத்த மர நிழல்- இப்போது
தணலாய்ச் சுடும்.
பரிதாபமே!

ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி.

### நெருங்கி வா



நேசத்துக்குரியவளே,
நெருங்கி வா!..
நெருடல்களின்
நொறுங்கல்களை
எறிந்துவிட்டு,
கொஞ்சம்
நெருங்கி வா!..
•
இந்தத் தேசத்துக்கான
விடுதலையை
எமது-
காதலுக்குள் வைத்து,
கொஞ்சம்
கதைத்துப் பார்ப்போம்...
•
இந்த மயான பூமியில்
நின்றுகொண்டு,
மாலையிடுவதைவிட
இந்த மண்ணின்
எதிர்காலத்துக்கான
தீர்வுகளை
முன்வைப்பதிலாவது
நாம்-
முன்னிற்போம்!..
•
வா!.. நெருங்கி வா!..
சரித்திர தாஜ்மஹாலும்
தகர்க்கப்படுவதற்குள்,
சத்தியத்திற்கு
உயிரூட்டி,
யதார்த்தத்தை
ஏற்படுத்துவோம்
விரைந்து வா!..
•

–யதார்த்ததாசன்–
மாளிகைக்காடு–2.




# சுடலைச் சாம்பலைச் சுவைக்கிறார்கள் விலை குறைவு! வெறி அதிகம்!!

போதைவஸ்துப் பாவிக்கும் இளைய தலைமுறையின் சீரழிவுகள் பற்றி தினமும் பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

என்னதான் சொன்னாலும் கெட்டே தீருவோம் என்று திட்டமிட்டது போல போதை வஸ்து பாவிப்போர் தொகை உயர்ந்து வருகிறது.

பாவிப்போர் தொகை உயர்வதால் போதை வஸ்துக்களின் விலையும் வேகமாய் உயர்ந்து வருகிறது.

ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் போதைப் பொருட்களின் அடிமைகளாக மாறிவருவது உலக அரங்கின் இன்றைய காட்சி.

போடுகிறார்கள். போதை ஏறி ஆடுகிறார்கள். போதை இறங்கியபின் மீண்டும் போட்டுக் கொள்ள போதை வியாபாரிகளை தேடி ஓடுகிறார்கள்.

விலையாக எதைக் கேட்டாலும் கொடுக்கத் தயங்குவதில்லை.

சமயத்தில் அழகான உடலும் விலையாகக் கொடுக்கப்படுகிறது.

நரகத்திற்கு மிக வேகமாகச் செல்லும் பாதை. தெரிந்தும் பயணம் செய்கிறார்கள்.

தற்காலிக சுகங்கள். அன்பு, பாசம், பரஸ்பர நேசித்தல் இல்லாது இயந்திரமயமாகி வரும் குடும்ப உறவுகள்.

போலித்தனமாகி வரும் சுற்றம். கபடத்தனமான உறவுகள்.

இவை அனைத்தும் சேர்த்து போலியான சுகம் தேடி விரட்டுகின்றன.

எல்லாவற்றில் இருந்தும் விடுபட்டு ஓடத் துடிக்கும் தன்னம்பிக்கைக் குறைபாடும் இன்னொரு காரணம்.

பல காரணங்கள். எப்படியோ சீரழிவின் அடையாளங்கள்.

போதைப் பொருள் விலை அதிகமாகி விட்டதால் இப்போது புதிய போதை ஒன்றைக் கண்டுபிடித்து விட்டார்கள்.

விலை குறைவு. வெறி அதிகம். அதுதான் சுடலைச் சாம்பல்.

கலிபோனியாவில் கடந்த ஒரு வருடத்திற்குள்ளாகவே சுடலைச் சாம்பல் பாவிப்பது பரவலாகி விட்டது.

அங்கு மயானங்களில் பாத்திரங்களில் சேகரித்து வைக்கப்படும் சாம்பல் திடீரென்று காணாமல் போக ஆரம்பித்தது.

பொலிசார் விசாரணை செய்த போது விசயம் வெளியே வந்தது.

சுடலைச் சாம்பலைப் பாவிப்பது மூலம் 4 மணி நேரம் முதல் 12 மணி நேரம் வரை அதிக போதையோடு இருப்பதாக பாவனையாளர் சிலர் கூறியுள்ளனர்.

லொஸ் ஏஞ்சல்ஸ், நியூயோர்க் போன்ற நகரங்களில் மனிதச் சாம்பல் ஒரு டோஸ் என்ற அளவுப்படி 30 முதல் 50 டொலர் வரை விலைபோகிறது.

சுடலைச் சாம்பல் விற்பனையாளர் மீது வழக்குப் போடுவதும் கஷ்டம்.

ஏன் எனில் சாம்பல் சட்ட விரோதமான பொருள் அல்ல.

உறவினரின் சாம்பல் என்று சொன்னால் என்ன செய்வது?

பொலிசார் தலையிடியில் இருக்கிறார்கள்.

இள வட்டங்கள் தமது தலையில் தமது கைகளால் சாம்பலை அள்ளிப் போடுகிறார்கள். அழிவு நிச்சயம்.



## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

**நண்பர்:** உங்கள் சுருட்டு வியாபாரத்தில் நஷ்டம் எப்படி வந்தது?
**முதலாளி:** பாட்னர் லாபத்தைச் சுருட்டிக் கொண்டு போனதால்!

**மிஸ்டர் கீச்:** முத்தமிடுவதால் ஆரோக்கியம் கெட்டுவிடுமாமே!
**நண்பர்:** எனக்கு அதில் நம்பிக்கை கிடையாது.
**மிஸ்டர் கீச்:** நீ முத்தமிட்டது கிடையாதா?
**நண்பர்:** ஆரோக்கியம் கெட்டதில்லை.


- "அந்த காபரே டான்சர் மிகவும் கூச்சம் உள்ளவள் போலிருக்கிறது"!
- "எப்படிச் சொல்கிறாய்?"
- "உடைகளை கழற்றும் போது கண்களை மூடிக் கொள்கிறாள்.

**மிஸ்டர் கீச்:** ஐந்து வருடமாக குழந்தை வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். இப்போதுதான் புரிகிறது.
**நண்பர்:** என்ன?
**மிஸ்டர் கீச்:** குழந்தை பெற்றுக்கொள்ள அது மட்டும் வழி அல்ல என்று.

குறளோவியம்

## கூடும் ஒவ்வொரு நாளும்.....

கலைஞர் மு.கருணாநிதியின் சுவைமிகு படைப்பான குறளோவியத்தில் இருந்து சிந்தும் ஒரு துளி. துளி ஒன்றுதான். ஆனால் சுவை?..... அதை நீங்களே உணருங்கள்.



புதிய புதிய நூல்களைப் படித்துக் கொண்டேயிருக்க வேண்டும் அவனுக்கு!

பழங்கால இலக்கி யங்களைத் திரும்பத் திரும்பப் படித்துச் சுவைப்பான்!

மறுமலர்ச்சி இலக்கியங்கள் எவை வரினும் அவன் கைகளில் ஏறிக் கொள்ளும்! கண்வழி சென்று கருத்தறையில் அமர்ந்து கொள்ளும்!

நில நூலா - வரலாறா- அறிவுத்துறை ஏடுகளா- கட்டுரையா- கவிதைகளா- நவீனங்களா- நாடகங்களா- அனைத்தையும் படித்து முடித்தால் தான் அவன் ஆசையில் ஒரு துளி நிறைவேறும்.

படித்தவை போக எஞ்சியிருப்பவைகளுக்காக ஏங்கிக் கொண்டிருப்பான். அவ்வளவு அறிவுப் பசி அவனுக்கு!

இதயத்தில் மூண்டிருந்த அந்தப் பசிக்கு ஈடுகொடுக்க நூல் நிலையங்களே விருந்து மண்டபங்களாயின.

இரைப்பை இருக்கிறதே; அது உண்டிட உண்டிட ஓய்வு தேவை என்று எச்சரித்து விடும்!

இதயப்பையோ அறிவுத்தீனி கிடைத்திடக் கிடைத்திட விரிந்து கொடுக்கும்! தின்ற தீனி செரித்துக் கொண்டேயிருக்கும்! புதிய தீனியைத் தேடிக் கொண்டேயிருக்கும்.

நூல்களை நாடிப் பெற்று நூற்பொருளைத் தெளிவாய்க் கற்ற ஒருவன்; தான்- புதிது புதிதாக அறிந்திட அறிந்திட, தனக்கு ஏற்கனவே இருந்த அறியாமையை எண்ணிக் கொண்டு வியப்படைகிறானாம்! இன்று ஒரு நூற் பொருளைப் புரிந்து கொண்டு அறிவு நீரோடையில் மூழ்கிடும் போது- நேற்று குளித்தெழுந்த நீரோடை இதனினும் சிறப்புக் குறைந்ததேயென்று முடிவுக்கு வருகிறான்.

இப்படி நூற்பொருளைப் புதிது புதிதாகக் கற்றுணரும் போது அவனுக்கு ஏற்படும் இன்ப உணர்வை, எதனுடன் ஒப்பிடுவது எனச் சிந்திக்கிறான்.

அவனது அருமைக் காதலியுடன் கூடும் பொழுதெல்லாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளையும் இன்பம் புதுமையாக இருந்து அதற்கு முன் கண்ட சுகம் இதற்கு இரண்டாவதே என எண்ணிடத்தக்க அளவுக்கு அமைகிறதல்லவா-அந்த ஓர் உணர்வுடன் மட்டுமே ஒப்பிட முடியுமென்ற முடிவுக்கு வருகிறான்.

"கண்ணின் மணியே! இன்று கண்ட இன்பம் நான் இதுவரையில் கண்டதில்லை!"

"நானும் தான் அத்தான்!"

ஒவ்வொரு முறையும் இப்படியே இன்ப உணர்வில் மயங்கி, இதற்கு முன்பு இதனை அறியாமல் இருந்தோமே என நினைத்திடும் காதலர் நிலைதான் ஒவ்வொரு நூலையும் படித்து அதன் நூற்பொருளை அறிந்திடுகின்றவருக்கும்! இதுவரை இருந்த அறியாமை, புதிது புதிதாக அறிந்திட அறிந்திட வெளிப்படுவது போல இதுவரை கற்றிடாத கூடல் வகையும், புதுப்புது விதமாய்க் கூடிக் களிக்கும் போது புலப்படுகின்றன போலும்!

"செந்நிற அணிகலன்களைப் பூண்ட இவளிடம் பொருந்தும் பொழுதெல்லாம் ஏற்படுகின்ற இன்பத்தை உணர்வது, நூற்பொருளை அறிய-அறிய முன்னிருந்த அறியாமையை உணர்ந்தாற் போன்றது."

என்றார் திருவள்ளுவர்! என்னே அழகான உவமை! இதோ அந்தக் குறள்:

**அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு**
**அதிகாரம் 111 புணர்ச்சி மகிழ்தல் பாடல் 1110**
செறிதோறும்= சேர்ந்து பொருந்தும் போதெல்லாம்.

நகர நவுண்டம்
-ஒற்றன்-

## டிஸ்கோ மோகமும் சில கோலங்களும்

**(சென்ற வாரத்தின் மறுபகுதி)**

வடை ஒன்றை எடுத்து ரசித்துக் கடித்து சுவைத்துவிட்டு சொல்லத் தொடங்கினார் நமது தகவல் வங்கியாளர்.

"டிஸ்கோ நடன விடுதிகளுக்கு போகாது போனால் சமூக கௌரவம் மண்ணாகிப் போகும் என்று சிலர் கவலைப்படுகிறார்கள் - ஐயோ"

"யார் அந்த சிலர்"

"இளவட்டங்களைப் பெற்றவர்களான உயர் மட்டப் பெற்றோர் சிலர் தான் அப்படிக் கவலைப்படுகிறார்கள்."

நம்ப முடியாமல் பார்த்தோம். தகவல் வங்கியாளர் தட்டைக் காலி செய்து முடிக்கும் கடமையே கண்ணாக இன்னொரு வடையை எடுத்துக் கொண்டார்.

"உமக்கு வடை பிடிக்காதோ? நல்ல சூடு. ஒன்று தள்ளிப் பாரும்."

பணம் கொடுப்பது நாம். சிபாரிசு அவர். எல்லாம் நமது நேரம்.

"இப்பதான் சாப்பிட்டு வந்தது. வயிறு ஹவுஸ் புல்."

பொய் சொல்லி கிளாசில் இருந்த பச்சைத் தண்ணீர் எடுத்து தொண்டையை நனைத்து வயிற்றுக்கு அனுப்பினோம்.

"நீர் நம்பமாட்டீர் ஐசே. கொழும்பில் நாகரிகம் உச்சிக் கொப்புக்குப் போய் இருக்கு. தங்கட மகனோ மகளோ டிஸ்கோ கிளப்புகளுக்குள் போய் இருக்கிறதை சொல்லுறதில சில பெறறோருக்கு ஒரு பெருமை."

சொல்லிவிட்டு ரீ குடித்தார். தட்டைப் பார்த்தார். இன்னொரு வடை காலியாகப் போகிறது என்று பயந்தோம். அவர் நாகரிகமாக தட்டை தள்ளி வைத்தார். எமக்கு மகா ஆச்சரியம்.

"சர்வர், இதைக் கொண்டு போய் வைத்துவிட்டு சுசியம் கொண்டுவாப்பா."

எமக்கு அச்சரியம் கோபமாய் மாறியது. அவர் ரஜனி ஸ்ரைலில் ஓடர் கொடுத்துவிட்டு கூலாகப் பேச்சைத் தொடர்ந்தார்.

"வசதியான குடும்ப இளவட்டங்கள் மத்தியில் 'புளு எலிபண்ட்' மிகப் பிரபலம்."

புரியாமல் பார்த்தோம்.

"'புளு எலிபண்ட்' என்பது நடன விடுதி ஐயா விடுதி. அங்கு டிஸ்கோ நடனம் தூள் கிளப்பும். ஜோடிகளாய் போய் ஆடுவார்கள்."

சுசியம் வந்தது. விட்டால் கிடைக்காது என்பது போல கதையைக் கட் பண்ணி சுசியம் எடுத்து கடித்துவிட்டு தான் விட்ட இடத்தில் இருந்து பிக்கப் பண்ணத் தொடங்கினார்.

'புளு எலிபண்ட்' மட்டுமல்ல. 'கொழும்பு 2000' 'சாப்டர் வண்' 'லிட்டில் ஹட்' இப்படிப் பல உல்லாச விடுதிகள் கொழும்பில் களை காட்டுகின்றன. எல்லாம் ஒவ்வொரு விதத்தில் தனித்துவமானவை."

"அதென்ன தனித்துவம்?"

"அப்படிக் கேளும். 'புளு எலிபண்ட்' போற ஜோடிகள் ஆடிக் களைத்து திரும்பலாம். டிஸ்கோவைத்தான் சொல்லுறன். கொஞ்சம் ஜாலியாய் இருக்க விரும்புகிறவர்கள் 'லிட்டில் ஹட்' போன்ற இடங்களுக்கு போகிறார்கள்"

"அனுமதி இலவசமோ?"

மேலும் தகவல் பிடுங்க அப்படிக் கேட்போம்.

"நீர் ஒரு ஓசி ரிக்கற் பேர்வழி. உம்மைக் கண்டால் அங்கு உதை விழும். கட்டணம் உண்டய்யா. ரூபா நூறு முதல் முன்னூறு வரை பிரவேசக் கட்டணம் கறக்கப்படும்."



"குறைந்த ரேட் தான்."

"அங்கு தான் பிழை விடுகிறீர் ஐசே."

"சும்மா ஒரு கூல் சோடா குடித்தால் போதும். பில் 200 ரூபா என்று வரும்."

"அதுவும் அப்படியோ?"

"வேறை எப்படி? கோக் முதல் அழகான பெண் வரை கிடைக்கும். விலைதான். சிலர் துணையோடு வருகிறார்கள். சிலர் துணைப் பறவை தேடி வருகிறார்கள்."

சொல்லி நிறுத்தி மிகுதி ரீயையும் குடித்து முடித்துக் கிளாசை சுத்தமாக்கினார்.

"அதில பாரும் நவீன நடன விடுதிகள் பெரிய பெரிய 5 நட்சத்திர ஹோட்டல்களில் நடப்பதால் பொலிசும் ஒன்றும் செய்ய முடியாது."

சொல்லிவிட்டு அடுத்து என்ன என்பது போல மேசையில் விரல்களால் தாளம் போட்டார்.

"நீங்கள் நேரில் போய் பார்த்தது போல் சொல்லுவதை எப்படி நம்புவது?"

வேண்டுமென்றே அப்படியொரு கேள்வியைத் தூக்கிப் போட்டோம்.

"உம்மை மாதிரி ஆட்கள் தான் போக முடியாது. எனக்கு என்ன குறை? கோட், சூட் அடித்து ஒரு நாள் உள்ளே போய் விசயம் அறிந்தவன் நான்."

கொலரைத் தூக்கி விட்டுக் கொண்டார்.

'கண்ட காட்சியைச் சொல்லவோ' விழிகளை உருட்டி மெல்லிய குரலில் மகா இரகசியம் போல் பேசினார்.

"சொல்லுங்கள்" என்றோம்.

"உள்ளே சில அழகிகள். கால்கள்-அடடா வாழைகள். மினிச் சட்டையில் இருந்தார்கள். மணி வாழைக் கால்களை எடுத்து வைத்து ஆடினார்கள். இடைக்கிடையே சுளிப்புக்கள் மடிப்புக்கள்... திடீரென்று என்ன நடந்தது தெரியுமோ?"

சஸ்பென்சாக, நிறுத்திக் கேட்டார். ஒரு நமட்டுச் சிரிப்பை உதிர்த்து விட்டுத் தொடர்ந்தார்.

"ஆடிக் கொண்டிருந்தவள் ஆடை களையத் தொடங்கினாள். அவளோடு ஆடியவன் ஆடை களைய பட்டன் கழட்டி உதவினான். உதவுற மனசுதான். எங்கே போய் உதவுது பார்த்தீயளோ?"

கேட்டுவிட்டு தானே நமக்குமாகச் சேர்த்து சிரித்துக் கொண்டார்.

"ஆடை களைந்தவன் அவள் மார்பில் முகம் புதைத்து... நீர் என்ன சுசியம் கூட சாப்பிட மாட்டீரோ? கடைசியாக நான் தான் தட்டைத் தனியக் காலியாக்க வேண்டிக் கிடக்கு"

வயிறுக்குள் ஒரு பெரிய அண்டா வைத்திருக்கிறார் போல் இருக்கிறது. என்ன மனுசன் இது. நினைத்துக் கொண்டோம்.

"அது மட்டுமில்லைக் காணும் இன்னும் உச்சகட்ட நடனங்கள்,காட்சிகள் எல்லாம் இருக்கு. ஆனால் யாரும் பெரிசா கண்டு கொள்ளுறது கிடையாது. ஏன் தெரியுமோ? அடிக்கடி போற ஆக்களுக்கு அது பழக்கமான காட்சி."

தலைநகரில் நாகரிகம் என்ற போர்வைக்குள் இளம் தலைமுறையை நாசமாக்கும் விடுதிகள் பற்றி ஏன் யாரும் கவனிப்பதில்லை. நமது யோசனையை விளங்கியவர் போல தகவல் வங்கியாளர்,

"எல்லா விடுதிகளும் மோசம் இல்லை. சிலவற்றில்தான் மது, மாது, போதைப் பொருள் என்று எல்லாமே நடக்கிறது. பாவனையில் இருக்கிறது."

"அனுமதியில் வயசுக் கட்டுப்பாடு உண்டோ?"

"கிடையாது அதுதான் கொடுமை." அவரும் கவலைப்பட்டுக் கொண்டார்.

வேறு ஆரோக்கியமான பொழுது போக்குகள் இல்லை. வாரத்தில் ஐந்து நாட்கள் அல்லது ஆறு நாட்கள் இயந்திரமாக உழைப்பார்கள். ஒரு மாற்றம் தேடி இவ்வாறான இடங்களுக்குச் செல்கிறார்கள்.

ஆனால், தமது பிள்ளைகள் சீரழிவதற்கு சமூக அந்தஸ்து என்று கௌரவம் கொடுக்கும் பெற்றோரை என்ன சொல்வது?

டிஸ்கோ நடன விடுதிகளுக்குத் தம் பெண்பிள்ளை அல்லது ஆண் பிள்ளை செல்வது சமூக அந்தஸ்தின் சின்னமாக கருதும் பெரிய மட்டத்து சில்லறைத் தனங்களை எப்படி சீர்திருத்துவது?

"என்ன கடுமையாக யோசிக்கிறீர்? டிஸ்கோ கிளப்பில பிள்ளை! பிள்ளையின் தகப்பன் என்ன சொல்லுகிறாராம் தெரியுமோ?"

"என்னவாம்?"

"யாராவது ஒரு பெண் என் கதவைத் தட்டி 'இதோ உமது பேரன்' என்று ஒரு குழந்தையோடு நிற்காவிட்டால் அது போதும்."

"அடக் கருமமே, அது சரி நீங்கள் அடிக்கடி போவது உண்டோ?"

தகவல் வங்கியாளர் கண்ணடித்தார்.

"இப்ப நான் சொன்னதெல்லாம் உம்மை மாதிரி ஒரு நம்பகமான பத்திரிகையாளர் ஒருவர் மூலமாக பெற்ற தகவல்கள் காணும். முதல் சொல்லியிருந்தா சுவாரசியம் இருந்திருக்காது. அது தான் ஒரு சின்னப் பொய். என்றாலும் தகவல்கள் யாவும் உண்மை."

சொல்லிவிட்டு எழுந்தார். பில் பார்த்து மயக்கம் போடாத குறையாக பணம் செலுத்திவிட்டு வெளியில் வந்தோம். தண்டம்தான்.

தகவல் வங்கியாளர் அக்கறையாகக் கேட்டார். "ரிப்ஸ் குடுத்தனீரோ?"

உதைக்கலாம் போல் இருந்தது. வேறு யாரிடம் தகவல் கறப்பது? அதனால் பொறுமை காத்து விடை பெற்று நழுவினோம்.

# பேதம் அகற்ற உருவம் மாறிய பெருமாள்



சைவம்- வைணவம் என்று சிவபக்தர்களும், விஷ்ணு பக்தர்களும் சண்டையிட்டுக் கொண்டிருந்த காலம். அகத்தியர் குற்றாலத்திற்குச் சென்றார். அந்நாளில் அங்கே நெடிய உருவோடு திருமால்தான் கோவில் கொண்டிருந்தார். திருநீறு அணிந்து வரும் அகத்தியரைக் கண்டதும் அங்குள்ள வைணவர்கள் கோவில் கதவையே சாத்தி விட்டார்கள். நடந்து வந்ததில் கால்கள் நொந்ததிற்கும் அதிகமாக, மனம் நொந்து போனார் அகத்தியர்.

அந்த வேதனையோடே மெல்ல நடந்து இருட்டிய நேரத்தில் இலஞ்சியை அடைந்தார். அது முருகன் கோவில் கொண்டுள்ள ஒரு சிறப்பு வாய்ந்த தலம். உடல் சோர்வும், மனச் சோர்வும் சேர அகத்தியர் அங்குள்ள மண்டபத்தில் படுத்து உறங்கி விட்டார்.

தன்னைத் தரிசிக்கக் கூட மனமில்லாமல் படுத்து உறங்கி விட்ட அகத்தியர் கனவில் முருகப் பெருமானே தோன்றினார்.

"அகத்தியரே, கவலை வேண்டாம். உமக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தையே, உலக மக்களுக்குக் கிடைக்கும் சன்மானமாக மாற்றி விடுங்கள். நாளை தாங்கள் நீரணந்த நெற்றியில் திருமண் காப்பிட்டுக் கொண்டு குற்றால நாதர் கோவிலுக்குச் செல்லுங்கள். நாதன் ஒருவரே, அவரே ஹரி. அவரே ஹரன், இருவருக்கும் பேதமில்லை என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டுங்கள்." என்றார்.

அடுத்த நாள்.....

அறிவிலிகளுக்கு அறிவூட்ட அகத்தியர் பயணம் தொடங்கினார்.

உடலில் பன்னிரெண்டு இடங்களில் நாமம் பளிச்சிட, கோவிலுக்குள் நுழைந்தார். நேற்றுக் கதவை அடைத்தவர்கள் இன்று எதிர்கொண்டு வரவேற்றனர்.

தான் தனித்திருந்து பூஜை செய்யப் போவதாகக் கூறிக் கருவறைக் கதவைச் சாத்திக் கொண்டார் அகத்தியர்.

உள்ளே நெடிய திருமாலும் குறுமுனி அகத்தியரும் மட்டுமே.

"பெருமானே, பக்தன் சொல்கிறேன், உன் பக்தர்கள் பேதமனம் பூண்டு பாவிகளாகி நரகத்தில் ஆழ்ந்து விடாமலிருக்க வேண்டிச் சொல்கிறேன். குறுகுக!" என்று தம் இரு கரங்களாலும் எட்டிப் பிடித்துத் திருமாலின் சிரசை அழுத்தினர்.

'என் பக்தனுக்கு நான் அடிமை' என்று கீதை சொன்ன பெருமானல்லவா?

அகத்தியர் சொல்லுக்குப் பணிந்தார். அகத்தியர் அழுத்த அழுத்த குறுகிக் குறுகி அங்கங்கள் ஒன்றினுள் ஒன்று அமுந்திக் கடைசியாக லிங்கம் போல் மாறி விட்டார்.

லிங்கத்திற்குள் திருமாலின் திருமுகம் மாத்திரம் புன்முறுவல் பூத்தது. அதன் மூலம் குற்றால நாதர் பேதம் கடந்த தெய்வமாகத் திகழ்கிறார். சைவர்கள் வணங்கும் சிவலிங்கம், வைணவர்கள் வணங்கும் நாராயணர், ஒருவருக்குள் ஒருவர் அடக்கம், இருவருக்கும் பேதமில்லை என்று இனி மக்கள் அறிவு பெறுவார்கள் என்று திருப்தியோடு தன் அடுத்த பயணத்தைத் தொடங்கினார் அகத்தியர்.

பேதம் அகற்ற பெருமானே தன் உருவத்தை மாற்றினார் என்பது இன்று எல்லா மதத்தினரையும் பேதமற இணைத்துக் கொள்ளும் பக்குவத்தை நமக்கு ஊட்டுகிறது. ●

# நா காக்கும் நலம்

கப்பல்கள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடும் காற்றுக்களால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி நினைக்கும் இடத்திற்கு நேராக, மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். "அப்படியே நாவானதும், சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொழுத்தி விடுகிறது. நாவும் நெருப்புத்தான். அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொழுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொழுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. (யாக்கோபு 3:5–8) என்கிற வேதம் 'ஆரோக்கியமுள்ள நாவு ஜீவ விருட்சம்' – நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்; என்கிறது. எனவேதான் 'உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தெய்வபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தெய்வபக்தி வீணாயிருக்கும், என்றும் கூறுகிறது.

### நாவின் வெளிப்பாடுகள்:

இனிமையான சொற்களே நாவின் வெளிப்பாடாக இருக்கட்டும். மற்றவர்களிடம் அன்பானவார்த்தைகள் பேசும் போது நம்மை நோக்கி அன்பான வார்த்தைகளே வரும். எனவே நாம் அன்பான, ஆறுதலான தன்னம்பிக்கையான சொற்களை எப்பொழுதும் பேசத் தீர்மானிப்போம். 'கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள். கெட்ட வார்த்தைகள் ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தைகள் உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோசனமுண்டாகும்படி பேசுங்கள்'. எபேசியர் 6: 9, 4:29) என்று வேதம் போதிக்கிறது.

# ஒழுக்கம்

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது சான்றோர் வாக்கு. ஏனெனில் அறிவுள்ளவர்களை விட அன்பு, ஒழுக்கமுள்ளவர்களைத்தான் மக்கள் அதிகமாக நேசிப்பார்கள். மனிதனுக்கு அறிவு (கல்வி) உயிர் என்றால், நல்லொழுக்கம் உடையாகும். நபி (ஸல்) எச்சரிக்கிறார்கள்; மக்களிடம் கருணை காட்டாதவனுக்கு அல்லாஹ்வும் பேரருள் புரிவதில்லை. அதாவது அன்பு, ஒழுக்கம் என்பது ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குத்தான் மரியாதை செய்ய வேண்டும் என்பதல்ல, எச்சமூகமாயினும் ஒரு முஸ்லிம் மற்றவனிடம் மரியாதையுடன் நடப்பது அவசியம்.

அல்லாஹ் குறிப்பிடுகின்றான்: "இறைவனுக்கு இணை வைப்போர் யாரும் உங்களிடம் பாதுகாப்பு கோரினால் அல்லாஹ்வின் வசனங்களை செவியுறும் வரை அவனுக்கு பாதுகாப்பு அளியுங்கள்." (9:6)

நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: இறைவனுக்காக ஒருவன் (மக்களுடன்) பணிவாக நடந்தால் நிச்சயமாக அல்லாஹ் அவனைச் சிறப்பாக்குவான். மழை பாறை, விளைநிலம் இரண்டிலும் பொழிகிறது. விளைநிலத்தில் தான் தாவரங்கள் விளைகின்றன. ஆனால் பாறைகளில் விளைவதில்லை.' அவ்வாறே ஒழுக்கமுள்ளவர்களிடமே இறைஞானம் உதிக்கும்.

சிலர் வாலிப, பணத்திமிரால் பெரியோர்களுக்குரிய மரியாதை செய்யாமல் தரக் குறைவாக பேசுவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. நபி (ஸல்) குறிப்பிடுகின்றார்கள், "நீ பிறரை மதிப்பது போன்றே மதிக்கப்படுவாய்," மேலும் நம் சிறுவர்களுக்கு அன்பு செலுத்தாதவனும் நம் பெரியோருக்கு மரியாதை செய்யாதவனும் நம்மைச் சார்ந்தவன் அல்ல. "ஏனெனில் பண்பில்லாவனுக்கு மக்களுடன் நன்கு பழகத் தெரியாது. இவன் எவ்வாறு இறைவனிடம் பண்பாக நடப்பான்? எனவே தான் இஸ்லாம் பண்பிற்கு அதிக மதிப்பளிக்கின்றது. இவை அனைவருக்கும் அவசியம். எனினும் பட்டதாரி, ஆலம், அறிஞர், சமூக நலவாதிகளுக்கு மிக மிக அவசியம்.

ருக்ஷான் அமீன்
உடுதெனிய.

# முரட்டுக் காளை

ஸ்பெயின் நாட்டில் இன்றும் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற காளை அடக்கும் விளையாட்டு-கர்ணம் தப்பினால் மரணம் என்பதற் கொப்பானது. பம்பெலோனா என்ற இடத்தில் கிறிஸ் என்ற வீரர் மோதிக் கொல்ல வரும் முரட்டுக் காளையிடமிருந்து மயிரிழையில் தப்பினார்.



# பெண்களின் கிரிக்கெட்



அண்மையில் நடைபெற்று முடிந்துள்ள பெண்களுக்கான ஐந்தாவது உலக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து பெண்கள் அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இறுதிப் போட்டியில், நியூசிலாந்து அணியுடன் விளையாடி வெற்றி பெற்ற இங்கிலாந்து அணியினரைப் பாராட்ட நாலாயிரத்திற்கும் மேற்பட்ட இரசிகர்கள் திரண்டு சென்றிருந்தனர்.

ஆட்டம் காண வந்த முக்கிய பிரமுகர்களில் ஒருவர் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர்.

# களம் கண்டவுடன் சதம் அடித்தவர்கள்!

(சென்றவாரப் பட்டியலின் மறுபகுதி)

| பெயர்/நாடு | ஓட்டங்கள் | எதிரணி | இடம் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 30.ஹனுமந்த் சிங் (இந்தியா) | 105 | இங்கிலாந்து | டெல்லி | 1963-64 |
| 31.ஹாலிட் இபாதுல்லா (பாகிஸ்தான்) | 166 | அவுஸ்திரேலியா | கராச்சி | 1964-65 |
| 32.பி.ஆர்.ரெய்லா (நியூசிலாந்து) | 105 | இந்தியா | கல்கத்தா | 1964-65 |
| 33.கே.டி.வோல்ரஸ் (அவுஸ்திரேலியா) | 155 | இங்கிலாந்து | பிரிஸ்பேன் | 1965-66 |
| 34.ஜே.எச்.ஹம்ஸ்பேர் (இங்கிலாந்து) | 107 | மே.இ.தீவுகள் | லோட்ஸ் | 1969 |
| 35.ஜி.ஆர்.விஷ்வநாத் (இந்தியா) | 137 | அவுஸ்திரேலியா | கான்பூர் | 1969-70 |
| 36.ஜி.எஸ்.சப்பல் (அவுஸ்திரேலியா) | 108 | இங்கிலாந்து | பேர்த் | 1970-71 |
| 37.எல்.ஜி.ரோவ் (மே.இ.தீவு) | 214,100× | நியூசிலாந்து | கிங்ஸ்ரன் | 1971-72 |
| 38.ஏ.ஐ.காளிச்சரன் (மே.இ.தீவு) | 100× | நியூசிலாந்து | ஜோர்ஜ் ரவுன் | 1971-72 |
| 39.ஆர்.இ.ரெட்மண்ட் (நியூசிலாந்து) | 107 | பாகிஸ்தான் | ஒக்லண்ட் | 1972-73 |
| 40.[illegible]ல்.சி.ஹெய்ஸ் (இங்கிலாந்து) | 106× | மே.இ.தீவுகள் | ஓவல் | 1973 |
| 41.[illegible]கிறீனிட்ஜ் (மேற்கிந்தியத்தீவு) | 107 | இந்தியா | பெங்களூர் | 1974-75 |
| 42.[illegible].பொய்சன் (மே.இ.தீவு) | 105 | பாகிஸ்தான் | லாகூர் | 1974-75 |
| 43.ஜி.ஜெ.கோஸிர் (அவுஸ்திரேலியா) | 109 | மே.இ.தீவுகள்) | மெல்போன் | 1975-76 |
| 44.சுரேந்தர் அமர்நாத் (இந்தியா) | 124 | நியூசிலாந்து | ஒக்லாண்ட் | 1975-76 |
| 45.ஜாவிட் மியாண்டாட் (பாகிஸ்தான்) | 163 | நியூசிலாந்து | லாகூர் | 1976-77 |
| 46.ஏ.பி.வில்லியம்ஸ் (மே.இ.தீவு) | 100× | அவுஸ்திரேலியா | ஜோர்ஜ் ரவுன் | 1977-78 |
| 47.டி.எம்.வெல்ஹாம் அவுஸ்திரேலியா) | 103 | இங்கிலாந்து | ஓவல் | 1981 |
| 48.சலீம் மலிக் (பாகிஸ்தான்) | 100 | இலங்கை | கராச்சி | 1981-82 |
| 49.ஹெப்லர் வெஸல்ஸ் (அவுஸ்திரேலியா) | 162 | இங்கிலாந்து | பிரிஸ்பேன் | 1982-83 |
| 50.டபிள்யூ.பி.பிலிப்ஸ் (அவுஸ்திரேலியா) | 159 | பாகிஸ்தான் | பேர்த் | 1983-84 |
| 51.முகம்மட் அசாருதீன் (இந்தியா) | 110 | இங்கிலாந்து | கல்கத்தா | 1984-85 |
| 52.பிரண்டன் குறுப்பு (இலங்கை) | 201× | நியூசிலாந்து | கொழும்பு | 1986-87 |
| 53.மார்க் கிரேட்பட்ச் (நியூசிலாந்து) | 107× | இங்கிலாந்து | ஒக்லண்ட் | 1987-88 |
| 54.மார்க் வோ (அவுஸ்திரேலியா) | 138 | இங்கிலாந்து | அடிலெய்ட் | 1990-91 |
| 55.அன்ரூ ஹட்சன் (தென் ஆபிரிக்கா) | 163 | மே.இ.தீவுகள் | பிரிட்ஜ் ரவுன் | 1991-92 |
| 56.ரொமேஷ் கலுவித்தாரன (இலங்கை) | 132 | அவுஸ்திரேலியா | கொழும்பு | 1992-93 |
| 57.டேவிட் ஹொட்டன் (சிம்பாப்வே) | 121 | இந்தியா | ஹராரே | 1992-93 |
| 58.பிரவீன் ஆம்ரே (இந்தியா) | 103 | தெ.ஆபிரிக்கா | ரேபன் | 1992-93 |
| 59. கிரஹாம் தோபே (இங்கிலாந்து) | 114 | அவுஸ்திரேலியா | ட்ரன்ட் பிரிட்ஜ் | 1993 |

(×ஆட்டமிழக்காது)

அடுத்த முரசில்
இலங்கை-தென்னாபிரிக்க
கிரிக்கெட் போட்டிகள்
ஓர் அலசல்

# ஸ்போர்ட்ஸ்


## தாயான பின்னர் தாமதம்!

இந்தியாவின் தடகளப் போட்டி வீராங்கனைகளுள் ஷைனி வில்சன் சர்வதேசப் புகழீட்டியவர்.

செல்வி ஷைனி ஏபிரகாமாக இருந்தவர் வில்சன் என்பவரை மணந்து திருமதி வில்சனானார். எனினும் விளையாட்டு அரங்கை மறக்கவில்லை.

இப்பொழுது ஒரு குழந்தைக்குத் தாயானதனாலோ என்னமோ அவரால் முன்பு போல் சாதனைகளை நிலைநாட்ட முடியவில்லை. இருப்பினும் இளமையும் துணிவும் உள்ள ஷைனி நிச்சயமாக மீண்டும் மின்னுவார் என்றே நம்பப்படுகிறது.

ஸ்ரட்காட் போட்டிகளில் ஷைனி 800 மீட்டர் ஓட்டப் போட்டியில் பங்கேற்று 2 நிமி.6.64 நொடிகளில் ஓடினார். ஆனால் இதற்காக எடுக்கப்பட வேண்டிய நேரம் 2நிமி.0.30 நொடிகளாகும்.





தரம் குறையாத தங்க-வைர நகைகள்.
எழிலூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தொ.பேசி: 436331.



## வயது ஒரு வரம்பல்ல!

சாதனைக்கும் வயதுக்கும் சம்பந்தம் இல்லை. முயற்சி, உறுதி, தன்னம்பிக்கை. அவை போதும்.

1991 ஜனவரி 4ம் திகதி பெண்களுக்கான பிளாற்ஃபோம் டைவிங் நீச்சல் போட்டி அவுஸ்திரேலியாவில் நடந்தது. அதில் வென்றது யார் என்கிறீர்கள்? சீனாவைச் சேர்ந்த ஃபூ மிங்சியா. வயது அதிகம் இல்லை. 12 மட்டுமே.


வாரமலர்
தினமுரசு

SARIKA TEX
Ladies Tailoring
உங்கள் எண்ணப்படி-
சாறி பிளவுஸ், சல்வார் கமிஸ், சாகரா சோளி,
ஃபுறக் மற்றும் ஸ்கேட் அன் பிளவுஸ் நிறைவாக
வடிவமைத்துத் தரப்படும்.
சாறி பிளவுஸ் தைக்க வேண்டுமா?
உங்கள் மனதுக்கு நிறைந்தளவில் குறைந்த
நேரத்தில் தைத்துத் தருகிறோம்.
Prop. Mrs. Jeyamalar
Hewa Building
No. 69/5-1/1, Galle Road
Dehiwela.


## குத்துப் பார்த்தவர்கள்!



குத்துச் சண்டையில் மூன்று முறை உலக சாம்பியன் பட்டம் வென்றவர் முகம்மது அலி. 1971 செப்டெம்பர் 15ம் திகதி அமெரிக்காவில் நியூ ஓர்லியன்ஸ் சுப்பர் டோம் அரங்கில் முகம்மது அலி களம் கண்டார். அதைக் காணவந்தோர் தொகை 63,350. ஒரே அரங்கில் அத்தனை பேர் இருந்து குத்துச் சண்டை பார்த்தது அதுதான் முதல் தடவை. எனவே அதுதான் இன்றுவரை சின்னம் ... உள்ள உலக சாதனை. அந்தப் போட்டியில் முகம்மது அலியிடம் வாங்கி விழுந்தவர் லியோன் ஸ்பின்ஸ்.



## வாடகையில் ஒரு வரலாறு



உலகில் அதிகமான வாடகை வாங்கும் கட்டிடமும் ஜப்பானில் தான் உள்ளது.

இக் கட்டிடத்திலுள்ள ஒரு கடைக்குரிய வாடகை எவ்வளவு என்கிறீர்கள்?

17000 அமெரிக்க டொலர்.

இது வாடகையில் சாதனை.

கொழும்பில் வாடகை அதிகம் கொடுக்கும் நம்மவர்களுக்கு ஒரு திருப்தியாக இருக்கும்.

## வாவ்..வாவ்

## என்ன விலை? காணி விலை?



ஏணி வைத்தாலும் எட்டாத உயரம் என்று சொல்வதுண்டு.

விருப்பம் வைத்தாலும் வாங்கமுடியாத காணி ஒன்று இருக்கிறது.

ஜப்பான் நாட்டில் டோக்கியோ நகரில் உணவுப் பொருட்கள் விற்கும் கட்டடத் தொகுதி உள்ள காணிதான் அது.

காணியில் ஒரு சதுரமீற்றர் பரப்பளவின் விலை (ஒரு ஆள் நிற்கக்கூடிய இடம்) என்ன தெரியுமோ?

அதன் விலை உலக சாதனை. அமெரிக்க டொலரில் பெறுமதி 248,000 டொலர். இதனை 48 ஆல் பெருக்கிப் பாருங்கள். நம்மூர் பெறுமதி வரும். கூடவே ஆச்சரியமும் வரும்.

# வாழைக்காய் ஊறுகாய்

கோழிக்கறி, ஆட்டுக்கறி என்று சதா கறிவகைகளுடன் மட்டும் நின்று விட்டால் போதுமா வேறு பக்க உணவு முறைகளைச் சொல்லித்தரலாகாதா, என்று பலர் கேட்கிறார்கள். இதற்காக மட்டுமல்ல நாமும் பல வகை உணவுப் பதார்த்தங்களைச் செய்யும் முறைகளையும் இப்பத்திகளில் தரலாம் என்றுதான் விரும்பினோம். இதற்காகவே இன்று ஒரு மாற்றத்துக்காக- வாழைக்காய் ஊறுகாய் செய்யும் விதத்தை உங்களுடன் பரிமாறிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறோம். இலகுவில் கிடைக்கக்கூடியதும் சுலபமாகச் செய்யக்கூடியதுமான இதனைப் பல நாட்களுக்குப் பத்திரமாக' வைத்துச் சேமித்து அவ்வப்போது உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

தேவையானவை:

| | |
|---|---|
| கறிவாழைக்காய் | - 6 |
| கடுகு எண்ணெய் | - 2 கோப்பை |
| கடுகு | - 1 மேசைக்கரண்டி |
| வெந்தயம் | - 1 மேசைக்கரண்டி |
| மிளகாய்த்தூள் | - 2 1/2 மே.கரண்டி |
| கொத்தமல்லி | - 1 1/2 மே.கரண்டி |
| வினாகிரி | - 1 1/2 கோப்பை |
| பெருங்காயம் | - 1/2தேக்கரண்டி |
| உப்பு | - அளவுக்கு |
| மஞ்சள் | - அளவுக்கு |

செய்முறை:

மிளகாய்த் தூளுடன் கொத்தமல்லியையும் வறுத்துப் பொடி செய்து சேர்த்துக் கொள்ளவும். பெருங்காயத்தையும் மென்மையான சூட்டில் வறுத்துப் பொடியாக்கித் தனியாக வைத்துக் கொள்ளவும். இதே போல வெந்தயத்தையும் வறுத்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

இதற்கென கறிவாழைக்காய் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இவற்றை மேல் தோலை மட்டும் சீவி தண்ணீரில் சில நிமிடங்கள் ஊறவிடுங்கள்.

4 கோப்பைத் தண்ணீரை ஒரு பாத்திரத்திலூற்றி உப்புத் தூளையிட்டு அளவான சூட்டில் அடுப்பில் வைக்கவும். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்ததும் அதனுள் வாழைக்காய்களைப் போடவும். இரண்டு நிமிடங்களின் பின்னர் அதனை அடுப்பிலிருந்து கீழே இறக்கி நன்றாக ஆறவிடவும். ஆறிய பின் காயின் மேல் பகுதியிலுள்ள சற்றுத் தடிப்பமான தோலைச் சீவி எடுக்கவும். காயை நீள வாக்கில் தாள்காகப் பிளக்கவும். இவற்றையும் ஏனைய தோலையும் இரண்டு துண்டுகளாக வெட்டவும். இப்பொழுது மொத்தம் 48 துண்டுகளும் தோல் துண்டுகளும் இருக்கும்.

மிளகாய்த்தூள், மல்லித்தூள், வெந்தயத்தூள், பெருங்காயம் மற்றும் பொடியாக்கப்பட்ட கடுகுத்தூள் ஆகியவற்றையும் சிறிது மஞ்சள் தூளையும் சேர்த்து ஒரே சீரான கலவையாக்கிக் கொண்டு வாழைக்காய்த்துண்டுகளையும் தோல் துண்டுளையும் கலவையிலிட்டு புரட்டி எடுக்கவும். துண்டுகளைத்தின் பகுதிகளிலும் கலவை நன்றாக ஒட்டும் படி பார்த்துக்கொள்ளவும்.

ஒரு வாணலியை அடுப்பிலேற்றி எண்ணெயை இட்டு சிறிதளவு சூடானதும் வாழைக்காய்த்துண்டுகளைத்தையும் எண்ணெயில் கொட்டிக் கிளறவும். ஒரு நிமிடம் முதல் 2நிமிடங்கள் வரை அடுப்பிலிருக்க விட்ட பின் இறக்கி நன்றாக ஆறவிட்டு நிரப்பியபடி பற்ற ஜாடி அல்லது போத்தலில் இதனை இட்டு வினாகிரியை அதனுள் ஊற்றிப் பத்திரப்படுத்திக் கொள்ளவும். தேவையான போது எடுத்து அளவாகப் பரிமாறலாம்.

